# கோகுலம்

GOKULAM


ஆகஸ்ட் 85 ரூ 2





ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

பிறந்த நாள்: 2.8.1934




# கோகுலம்

1985 ஆகஸ்டு மாத இதழ்

தனிப்பிரதி ரூ. 2

ஆண்டுச் சந்தா ரூ. 24

மலர் 3 இதழ் 7

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா.


உயிர்களிடத்தில் அன்பு வேணும்
—தெய்வம்
உண்மையென்று தானறிதல்வேணும்.
—பாரதியார்.

## அருமைச் சிறுவர் சிறுமியரே,

எஸ். எஸ். எல். ஸி. தேர்வில், சில பள்ளிக்கூடங்கள் 100—க்கு 100 வெற்றி பெற்றுள்ளன. சில 99, சில 98, சில 97 என வெற்றி பெற்றுள்ளன. 80 சதவிகிதத்துக்கு மேல் பெற்ற பள்ளிகளும் உள்ளன.

இவற்றில் ஒரு பள்ளியைப் பற்றி அந்த ஊரில் உள்ள முக்கிய மான ஒருவரைக் கேட்டபோது, அவர்,

''இந்தப் பள்ளியின் வெற்றிக்குக் காரணம், ஆசிரியர்கள் தனித்தனியாக ஒவ்வொரு மாணவனும், படிப்பிலே எப்படி இருக்கிறான் என்பதைக் கூர்ந்து கவனித்து, அவனுக்குப் புரியாத பாடங்களை விளக்கிக் கூறியும், சந்தேகங்களை உடனுக்குடன் தீர்த்தும் வருவதுதான்'' என்றார்.

இன்னொரு பள்ளியைப் பற்றி, அங்கு பயிலும் ஒரு மாணவனுடைய தந்தையாரைக் கேட்டபோது, ''இப்பள்ளியைப் பொறுத்தவரை மாணவர்களுக்குள்ளே ஆரோக்கியமான போட்டி இருக்கிறது. பொறாமை எதுவும் இல்லாமல் ஒருவனை ஒருவன் படிப்பிலே முந்தப் பார்க்கிறான். ஆசிரியர்களும் நன்கு கற்பிக்கிறார்கள்'' என்றார் அவர்.


ஆயினும், இந்தப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் என்ன சொன்னார்கள், தெரியுமா?

''மாணவர்களின் முயற்சியும் ஆசிரியர்களின் வழி நடத்துதலும் 50 சதவிகித வெற்றியைத்தான் தேடித் தருகின்றன. மீதம் 50 சதவிகித வெற்றி, மாணவர்களின் ஒழுங்கினாலும், கட்டுப்பாட்டினாலும் கிட்டுவதுதான். அவை இல்லாத போனால் எந்தப் பள்ளியும் பெயரெடுக்க முடியாது'' என்றார்கள்.

இதிலிருந்து ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவற்றின் உயர்வைத் தெரிந்து கொள்கிறோம் அல்லவா? தெரிந்து கொள்வதோடு, உணர்ந்து நடந்தால் வெற்றிமேல் வெற்றிதான்!

இடநெருக்கடி காரணமாக இந்த இதழில் கோ. சி. ச. பட்டியல், சார் தபால்!, புதிர்க் கதை — முதலியன இடம் பெறவில்லை. அடுத்த இதழில் அவசியம் இடம் பெறும்.

அழ. வள்ளியப்பா.



# இந்த இதழ் எழுத்தாளர்கள்


மன்னர் மன்னன்


பொன்மணி பரிமளம்


பேரளம் புகழ்மதி

# பிருந்தாவனக் கவிஞர்கள்



ல. ஆனந்தி


எஸ். கோபாலகிருஷ்ணன்


இரா. சரவணன்


வி. விஜயலட்சுமி

# பிருந்தாவனக் கதாசிரியர்கள்


சி.கே. இரவிராஜ்


பா. சிவக்குமார்

மேலட்டை வண்ணப்படம்: திலிப் பானர்ஜி.

# நன்மணிக் கதைகள்

## நண்பனின் நாணயம்

இராமசாமிக்கு வீராசாமி என்ற ஒரு நண்பன் இருந்தான். அவன் மிகவும் மோசமானவன். ஆனால், ராமசாமியோ அவனை அளவுக்கு அதிகமாக நம்பி வந்தான்.

வீராசாமி மிகவும் மோசமானவன் என்பதை அறிந்த இராமசாமியின் தந்தை, எப்படித் தன் மகனைத் திருத்துவது என்று யோசனை செய்தார்.

ஒருநாள், ஒரு கனத்த பெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்த அவர், தன் மகனை அருகிலே அழைத்தார். "இராமசாமி, நாம் குடும்பத்துடன் நாளை திருப்பதி செல்கிறோம். வர மூன்று நாட்களாகும். அதுவரை நம் நகைகளெல்லாம் பத்திரமாக இருக்க வேண்டாமா? அதனால், இந்தப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டியிருக்கிறேன். இதை யாரிடம் கொடுத்து வைத்தால் பத்திரமாக இருக்கும்?" என்று கேட்டார்.

உடனே இராமசாமி, "என் நண்பன் வீராசாமி மிகவும் யோக்கியமானவன். நம்பிக்கையானவன். அவனிடம் கொடுத்து வைக்கலாம்" என்றான்.


அவ்வாறே, அன்று மாலையில் வீராசாமியிடம் பெட்டியை ஒப்படைத்து விட்டு, மறுநாள் திருப்பதி சென்றார்கள்.

திரும்பி வந்ததும், "ராமசாமி, நீ போய் வீராசாமியிடம் பெட்டியை வாங்கி வா" என்றார் தந்தை.

வீராசாமியிடம் சென்ற இராமசாமி சிறிது நேரத்தில் திரும்பி வந்து, "என்னப்பா இது! என் நண்பனை இப்படியா அவமானப்படுத்துவது! பெட்டிக்குள் நகைகள் இருப்பதாகச் சொல்லி, வெறும் கற்களைப் போட்டுக் கொடுத்திருக்கிறீர்களே!" என்று கோபமாகக் கேட்டான்.

உடனே, தந்தை சிரித்துக் கொண்டே, "உன் நண்பனுக்கு நம் பெட்டிக்குள்ளே கற்கள் இருந்தது எப்படித் தெரிந்தது? நான் பெட்டியைப் பூட்டியல்லவா கொடுத்தேன்? கள்ளச்சாவி போட்டு உள்ளே என்ன இருக்கிறது என்று பார்த்திருக்கிறான் உன் நண்பன். அவனா யோக்கியமானவன்? அவனா நம்பிக்கையானவன்?" என்று கேட்டார்.

வீராசாமியின் நாணயம் அப்போதுதான் இராமசாமிக்குத் தெரிந்தது!






# இரு புதல்விகள்

ஜப்பானிலே ஒருவர் இருந்தார். அவருக்கு வேட்டையாடுவதில் விருப்பம் அதிகம். தினமும் மாலை வேளையில் வில்லையும் அம்பையும் எடுத்துக் கொண்டு வேட்டையாடப் புறப்பட்டு விடுவார்.

அவருக்கு இரண்டு புதல்விகள் இருந்தார்கள். அவர்களுக்கு, அப்பா இப்படி வேட்டையாடுவது கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. ''ஏனப்பா, நாமெல்லாம் புத்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தும், இப்படிப் பறவைகளைக் கொல்லலாமா? இது பாவமில்லையா?'' என்று பலமுறை கூறிப் பார்த்தார்கள்.

''என்னால் வேட்டைக்குப் போகாமல் இருக்க முடியாது. நீங்கள் எனக்குப் புத்திமதி கூற வேண்டாம்'' என்று கோபமாக அவர் கூறிவிட்டார்.

ஒருநாள் காலையில் அவரிடம் ஒரு நண்பர் வந்தார். ''என் தோட்டத்துக்குப் பக்கத்திலிருக்கிறதே ஏரி, அதில் நேற்று இரவு இரண்டு கொக்குகள் வந்தன. இன்று இரவும் அவை வரலாம். நீ அவற்றை வேட்டையாடலாமே!'' என்றார்.

''அப்படியா! இன்று இரவே போகிறேன்'' என்று உற்சாகமாகக் கூறினார் வேட்டைப் பிரியர்.

இவர்கள் பேசியது, அவருடைய இரு புதல்விகளின் காதில் விழுந்தது.

இரவு வந்ததும், அவர் வில்லையும் அம்புகளையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டார். சிறிது தூரத்தில் ஒரு மரத்தின் பின்னால் நின்று எட்டிப் பார்த்தார். ''ஆ! அதோ வெள்ளை வெளேரென்று தெரிகின்றன இரண்டு கொக்குகள்!'' என்று மெதுவாகக் கூறிக் கொண்டே, அவற்றில் ஒன்றைக் குறி பார்த்து அம்பு விட்டார்.

மறுவிநாடி, ''ஆ! அப்பா! அப்பா!'' என்ற குரல் கேட்டது. உடனே அவர் திடுக்கிட்டார். ''என் இளைய மகள் குரல் போலிருக்கிறதே!'' என்று கூறிக் கொண்டே அருகிலே ஓடினார். ஆம், அது அவருடைய இளைய மகளே தான்! அருகிலே மூத்த மகள் நின்று கொண்டிருந்தாள். இருவரும் தூய வெள்ளை உடை அணிந்திருந்தனர்.

''ஐயோ! என் மகளையே நான் கொல்லப் பார்த்தேனே!'' என்று கண்ணீர் விட்டுக் கதறியபடி அவளது வலது காலில் பாய்ந்திருந்த அம்பைப் பிடுங்கி, அந்த இடத்தில் இரத்தம் வழியாமல் கட்டுப் போட்டார். வீட்டுக்குத் தூக்கி வந்து மருந்து போட்டார். நல்லவேளை, அவள் பிழைத்துக் கொண்டாள்!

''என் மனத்தை மாற்றவா இப்படி நீங்கள் இருவரும் உயிரைக் கொடுக்க முன்வந்தீர்கள்?'' என்று அவர் கேட்டார்.

''எங்கள் உயிர் போனாலும், பல உயிர்கள் பிழைக்குமே அப்பா!'' என்றார்கள் இரு புதல்வியரும்.

அப்புறமும் அவர் வேட்டையாடப் போவாரா?

# குருவி அரசன்

காட்டிலுள்ள பறவைகளெல்லாம் ஒன்று கூடின. அவைகளுக்குள் யாரை அரசனாகத் தேர்ந்தெடுப்பது என்று விவாதித்தன.

''அரசராக இருப்பவர் அழகாக இருக்க வேண்டும்'' என்றது மயில்.

''அழகைவிடப் புத்திசாலித்தனம்தான் முக்கியம்'' என்றது ஆந்தை.

''பேசத் தெரியாத பறவை அரசராக இருந்து என்ன பயன்?'' என்று கேட்டது கிளி.

''மிக உயரமாகப் பறக்கக் கூடிய பறவைதான் அரசராக வேண்டும்'' என்றது கழுகு.

வெகுநேரம் விவாதம் நடந்தது. கடைசியாகப் பலசாலியான கழுகு, எல்லாப் பறவைகளையும் உருட்டி, மிரட்டி, தான் சொன்னதையே ஏற்றுக் கொள்ளும்படி செய்துவிட்டது.

குறிப்பிட்ட நாள் காலையில் பறக்கும் போட்டி நடந்தது.

கழுகு உயர உயரப் பறந்து சென்று மிக உயரத்துக்குப் போய் விட்டது. மற்றப் பறவைகளால், அதில் பாதி கூடப் பறக்க முடியவில்லை. எல்லாம் கீழே இறங்கித் தரைக்கு வந்து விட்டன. தரையில் நின்றபடி, கழுகு பறப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தன.


கழுகு அயர்ந்து போகும் வரை உயரப் பறந்தது. கீழே அது இறங்கப் போகும் சமயம், கழுகுக்குமேல் ஒரு பறவை பறப்பதைக் கண்டது கிளி! ''ஆ! அதோ ஒரு பறவை கழுகை விட அதிக உயரத்தில் பறக்கிறதே!'' என்றது. உடனே எல்லாம், ''ஆமாம், ஆமாம். அதுதான் நம் அரசன்!'' என்றன.

கழுகு தரையிலே இறங்கி வந்ததும் அதுவும் மிக உயரத்திலே பறந்த அந்தப் பறவையைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தது.

சிறிது நேரத்தில், மேலே பறந்த சிறிய பறவை கீழே இறங்கி வந்தது.

''அடடே; சிட்டுக்குருவியா இவ்வளவு உயரம் பறந்தது!'' என்று கழுகு உட்பட எல்லாமே ஆச்சரியப்பட்டன.

ஆம், சிட்டுக்குருவிதான். தரையிலிருந்து சிறிது தூரம் சென்றதும், அது மெதுவாகப் பறந்து சென்று கழுகின் முதுகில் ஏறி உட்கார்ந்து கொண்டது. மிகச் சிறு பறவையாக இருந்ததால், அது தன் மீது உட்கார்ந்திருப்பதைக் கழுகு உணரவில்லை. கழுகு மிக உயரத்தில் பறக்கும் வரை சிட்டுக் குருவி அதன் முதுகில் சவாரி செய்து கொண்டிருந்தது. கழுகு கீழே இறங்கும் சமயம் பார்த்து, அது 'விருட்'டென்று கிளம்பி மேலே பறக்கத் தொடங்கியது! சிறிது நேரம் பறந்த பிறகு, கழுகு தரையில் இறங்கி விட்டதைத் தெரிந்து கொண்டு, அதுவும் இறங்கி வந்தது. ஆனால், இதெல்லாம் அந்தச் சிட்டுக் குருவியைத் தவிர வேறு எந்தப் பறவைக்கும் தெரியாதல்லவா? போட்டி நிபந்தனையின்படி மிகவும் உயரத்தில் பறந்த சிட்டுக் குருவியையே அவை அரசனாக்கிவிட்டன!





**ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்**

ஆதிசங்கரர் அமைத்த பீடங்களில் மிகவும் முக்கியமானது காஞ்சிபுரத்திலுள்ள காமகோடி பீடம். இன்று அதன் அதிபதியாக விளங்குபவர் ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள். இவர்களின் பொன் விழா சென்ற ஆண்டு தொடங்கி மிகவும் சிறப்பாகப் பல இடங்களிலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

நாட்டு மக்கள் நலம் பெற, பல நல்ல நல்ல திட்டங்களை வகுத்தும், மாணவ, மாணவியருக்குப் பயனுள்ள பலவிதமான போட்டிகளை நடத்தியும், ஏழை எளியவர்கள் தொழில் நடத்தப் பலவகையில் உதவியும், எளிய நடையில் புத்தகங்களை எழுதியும் தொண்டாற்றி வருகிறார்கள்.

இவர்கள் எழுதிய 'தெய்வ வாக்கு,' 'நல வழி,' 'ஞான வழி,' 'இந்து தர்மங்கள்' என்ற புத்தகங்கள் எளிய நடையில் எல்லாரும் படித்துப் பயன்பெறும் வகையில் அமைந்துள்ளன.

சிறுவர் சிறுமியர்க்கு அருமையான புத்தகங்கள் நிறைய நிறைய வெளிவர வேண்டும், தமிழில் தரமான சிறுவர் பத்திரிகைகள் பல வர வேண்டும் என்பது இவர்களின் அவா. மாணவ, மாணவியர் இந்துசமயத்திலுள்ள நல்ல கோட்பாடுகளை அறிந்து, நாட்டு மக்களுக்கு நல்ல முறையில் தொண்டாற்ற வேண்டும் என்பதும் இவர்களது அவா.

இந்த நோக்கத்துடன் நேபாளம் உட்பட பாரத தேசம் முழுவதும் யாத்திரை செய்து நல்ல உரைகளை வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறார்கள்.



**ரசிகமணி டி. கே. சி.**

70 ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலம் படித்தவர்களில் பெரும்பாலோர் தமிழ் மொழியின் பெருமை தெரியாமலே இருந்தார்கள். அவர்கள் மேடைகளில் பேசுவது, கடிதங்கள் எழுதுவது எல்லாமே ஆங்கிலத்தில்தான்!

அப்படிப்பட்டவர்களுக்குத் தமிழ் மொழியின் அருமை பெருமைகளையும் தமிழ்நாட்டுக் கலைகளின் உயர்வையும் எடுத்துக் கூறி அவர்களில் பலரை நல்ல தமிழறிஞர்களாக ஆக்கிய பெருமை ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார் அவர்களுக்கு உண்டு. இதற்காகவே, 'வட்டத் தொட்டி' என்ற ஓர் இலக்கிய அமைப்பை ஏற்படுத்தினார்.

இளமையில் பல நல்ல கவிதைகளை எழுதி வந்த இவர், கவிதை எழுதுவதை விட, நல்ல கவிதைகளைப் பிறருக்கு எடுத்துக் கூறி இன்பம் ஊட்ட வேண்டுமென விரும்பினார். கம்ப ராமாயணத்தை மிகவும் சுவையாகக் கூறி வந்தார்; கட்டுரைகளாகவும் எழுதி வந்தார்.

இவர், தம் நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள் படிப்பதற்கு மிகவும் சுவையாக இருக்கும். இலக்கியச் சுவையுடன் நகைச்சுவையையும் அவற்றில் காணலாம்.

தமிழிலே எதையும் கற்பிக்க முடியும் என்று இவர் கூறுவார். ஆங்கிலத்திலுள்ள 'கல்ச்சர்' (culture) என்ற சொல்லுக்குப் 'பண்பாடு' என்று பொருத்தமான தமிழ்ச் சொல்லைத் தந்தவர் இவரே. 'பண்பாடு' என்ற சொல்லைக் கண்டுபிடித்ததோடு, பண்பாடு மிகுந்தவராகவும் இவர் விளங்கி வந்தார்.



# என் குழந்தைப் பருவம்

## நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை

மகாத்மா காந்தி தலைமையில் ஆங்கிலேயரை எதிர்த்து அகிம்சை வழியில் போரிட்ட தேசபக்தர்கள் அனைவரும் அக்காலத்தில் பாடிய பாடல் ஒன்று உண்டு.

'கத்தியின்றி ரத்தமின்றி
யுத்தம் ஒன்று வருகுது'

எனத் தொடங்கும் பாடல்தான் அது!

காந்திஜி காட்டிய வழிகளைப் பாடல்களாகப் பாடி, மக்களுக்குத் தேச பக்தியையும், விடுதலை உணர்ச்சியையும் ஊட்டியவர் கவிஞர் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளையவர்கள். இதனால், 'காந்தியுகக் கவிஞர்' என்ற பெயரையும் இவர் பெற்றார்.

தமிழ்நாட்டின் முதல் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தார். இவர் தம்முடைய வாழ்க்கை வரலாற்றை 'என் கதை' என்ற பெயரிலே புத்தகமாக வெளியிட்டார். படிக்கப் படிக்கச் சுவையுள்ளது அந்தப் புத்தகம்.

'தமிழன் இதயம்,' 'சங்கொலி,' 'பிரார்த்தனை,' 'அவனும் அவளும்,' 'மலைக்கள்ளன்' — இவை இக்கவிஞர் எழுதிய புத்தகங்களில் குறிப்பிடத் தக்கவை.

எனக்கு விவரம் தெரிய ஆரம்பித்த காலத்தில் எனக்குச் சொல்லித் தரப்பட்ட முதல் பாடம் என் தாயார் அடிக்கடி சொன்ன, "சாமீ! நீ என்ன செய்தாலும் செய். ஆனால், பொய் மட்டும் சொல்லாதே. போக்கிரி என்று பெயர் எடுக்காதே" என்ற வாசகமே. என் தாயார் எழுதப் படிக்கத் தெரியாதவர். ஆனாலும், இந்த உபதேசத்தை அவர் எனக்குத் தினம் ஒரு முறையாவது சொல்லாமல் இருக்கவே மாட்டார்.

அந்தக் காலத்தில் நான் என் தாய் தந்தையருக்கு ஒரே ஆண் குழந்தையானதால், வெகு செல்லமாக வளர்க்கப்பட்டவன். அதனால், என் தாயார் என் மீது அளவில்லாத அன்பு செலுத்தி, எனக்கு விருப்பமான இன்பப் பொருள்களையும், தின்பண்டங்களையும் கொடுப்பார்கள். அப்படிக் கொடுக்கும்போதுதான் கூடவே இந்த உபதேசத்தையும் சொல்லுவார்கள். அதனால், நான் அவர்கள் கொடுத்த பட்சணங்களைச் சுவைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருக்கும் போது கூட, இந்த உபதேசம் என் காதில் ஒலித்துக் கொண்டேயிருக்கும்:

என் வயதுச் சிறுவர்கள் துடுக்கு

கள் செய்யும் போதெல்லாம் நான் அந்தத்துடுக்கான காரியங்களில்சேராதிருந்தேன். அது என் இயல்பான நல்ல குணத்தால் என்று சொல்லிக் கொள்ள முடியாது. அதற்குக் காரணம், என் தாயாருடைய உபதேசம் காதில் ஒலித்துக் கொண்டிருந்ததே. அப்படி நான் மற்ற சிறுவர்களுடன் குறும்புத்தனமான காரியங்களில் கலந்து கொள்ளத் தயங்குவதைக் கண்ட என் தோழர்கள் என்னை ஒரு பயந்தாங்கொள்ளி என்றும் பேடி என்றும் சொல்லுவார்கள்.

அது மட்டுமல்ல, அந்தக் காலத்தில் என் தலைமயிர் பழனியாண்டவனுக்கு முடி விட்டிருந்ததால், எனக்கு என் தாயார் பெண் குழந்தைகளுக்குப் பின்னுவது போல் நடு நெற்றியில் வகிடுஎடுத்துநீண்ட ஜடைபோட்டிருப்பார்கள். அத்துடன் பின்னலுக்குமேல் பூக்களையும் வைப்பார்கள். என் தலையையும் முகத்தையும் மட்டும் பார்த்தால், ஒரு பெண் குழந்தையின் தலையும்முகமும்போலஇருக்கும். அதனால், என் விளையாட்டுத் தோழர்கள், நான் துஷ்டத்தனங்களில் அவர்களுடன் கலந்து கொள்ளக் கூசுவதைக் கண்டு, 'அவன் கிடக்கிறாண்டா பொட்டைப் பயல்' என்பார்கள். துடுக்கும், குறும்பும், துஷ்டத்தனமும்தான் ஆண்மை என்றும், அடக்கமும், ஒடுக்கமும்தான் பெண்மை என்றும் இன்றைக்கும் கருதப்படுகின்றன.

அப்படி சிறுபிள்ளைத்தனமான துடுக்குகளில் நான் ஒத்துழைக்காத காரணத்தால், நான் அடிபட்ட நிகழ்ச்சியைச் சொல்லுகிறேன். துடுக்குகளில் சேராததால்தான் நான் அடிபட்டேன் என்பதனால், துடுக்கு செய்வது நல்லதென்றோ துடுக்கு செய்யாவிடில் அடி விழும் என்றோ எண்ணிவிடக் கூடாது. ஏன் என்றால், அடிபட்ட நான் அதனால் பெருமை அடைந்தேன். என்னை அடித்தவன் பல துன்பங்களை அடைந்தான்.



இந்த அடி எனக்கு எதனால் விழுந்தது என்றால், உபாத்தியாயர்களிடத்தில் பயபக்தியோடு நடந்து கொள்ள வேண்டும் என்று எனக்குள் இருந்து வந்த எண்ணத்தினால்.

எனக்கு வித்யாரம்பம் செய்யப்பட்டது ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்தில். ஆரம்பப் பாடம் 'அரிஓம்! குரு வாழ்க! குருவே துணை!' என்றுவாயால் பலமுறை சொல்ல வேண்டியதுதான். எழுத்தறிவு வருவதற்கு முன்னாலேயே இதையெல்லாம் எழுத்தாணியால் எழுதப்பட்ட ஒரு பனை ஓலைச் சுவடியைக் கையில் பிடித்துக் கொள்ளச் செய்து, வாயால் இதைச் சொல்லச் செய்வது வழக்கம். பிறகுதான் அ, ஆ முதலிய எழுத்துக்களைத் தரையில் பரப்பப்பட்ட மணலில் எழுதச் செய்வார்கள்.

அந்தக் காலத்தில் புத்தகங்கள் இல்லை. மணலும் சிலேட்டும் மனப்பழக்கமும்தான் முக்கியம். கொஞ்சம் எழுத்தறிவு வந்த பிறகு 'ஆத்திசூடி', 'கொன்றை வேந்தன்' முதலியவற்றிலுள்ள வாசகங்களை வாயாலும் உரக்கச் சொல்லிக் கொண்டு, கையாலும் எழுத வேண்டும்.

அப்படி எழுத வேண்டிய வாசகங்களில், 'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' என்பது வெகு முக்கியமான ஒன்று. இப்படிப்பட்ட பழக்கங்களோடு, என் தாயாரின் தினசரி போதனையும் சேர்ந்து என்னை ஆசிரியரிடத்தில் மிகவும் வணக்கத்துடன் நடந்து கொள்ளச் செய்திருந்தது.

அத்துடன் எனக்கு ஆரம்ப ஆசிரியராக அமைந்த சண்முகம் பிள்ளை என்பவர் வெகு நல்ல மனிதர். அவர் பையன்களை அடிக்க மாட்டார். அப்போது என் தந்தை நாமக்கல்லில் போலீஸ் 'ஹெட் கான்ஸ்டபிள்'. போலீஸ் உத்தியோகஸ்தருடைய செல்லப் பிள்ளை என்ற காரணமும்


சேர்ந்தோ என்னவோ, என்னிடத்தில் அந்த ஆசான், என் தந்தையைப்போல் பரிவு காட்டுவார். ஆழ்ந்த தமிழ்ப் படிப்புள்ள பரம்பரையில் வந்தவர்; மிகுந்த சைவ நெறிப் பற்றுடையவர்; கெட்ட வார்த்தைகளை வாய் தவறியும் சொல்ல மாட்டார். (அதெல்லாம் எனக்கு இப்போது எப்படி நினைவிருக்கும் என்று சந்தேகிக்க வேண்டாம். அவர், எனக்கு முப்பத்திரண்டு வயதாகும் வரை வாழ்ந்தார். பின்னால் அடிக்கடி சந்தித்ததுண்டு). அதனால், 'வாத்தியார்' என்றால் எனக்குள் ஒரு தனி மதிப்பு வளர்ந்து வந்தது.

இனி; நான் அடிபட்ட கதையைச் சொல்லுகிறேன்:

எனக்கு வயது ஒன்பது அல்லது பத்து இருக்கும். நாமக்கல் ஹைஸ்கூலைச் சேர்ந்த 'ப்ரைமரி' பள்ளிக்கூடத்தில் நான்காம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். என்னோடு படித்தவர்களில் குப்புசாமி என்ற ஒருவன் இருந்தான். அவன் வெகு புத்தி கூர்மை உள்ளவன். ஆனால், வெகு துடுக்குள்ளவன். வேண்டியவர்களுக்கு எல்லா நன்மைகளும் செய்வான்; வேண்டாதவர்களுக்கு எந்தத் தீங்கையும் செய்துவிடுவான்.

அவன் வெகு புத்திசாலியானாலும், பாடங்களைச் சரியாகப் படிப்பதில்லை. பரீட்சை காலத்திலும் சரியாக விடை எழுதுவதில்லை. நினைத்த போது வருவான்; நினைத்த போது போய் விடுவான். சில நாட்கள் வராமலே இருந்துவிட்டுப் பொய்யான காரணங்களைச் சொல்லுவான். அதனால், அவன் ஒவ்வொரு வகுப்பிலும் இரண்டு மூன்று வருஷம் தங்கிவிட நேர்ந்தது. நான் நான்காம் வகுப்புக்குப் போனபோது அவன் ஏற்கனவே அந்த வகுப்பில் இரண்டு வருஷம் தேறாமல் நின்றுவிட்டவன். அதனால், அவனுக்கு அப்போது பதினாறு, பதினேழு வயதிருக்கும். அவன் செய்யும் குறும்புகளுக்கு அடிக்கடி கடுமையான தண்டனைக்கு ஆளாவான். ஆனாலும் அஞ்ச மாட்டான்.

அந்தக் காலத்தில் பள்ளிக்கூடத்து ஆசான்களுக்கும், மாணவர்களுக்கும் இருந்த சம்பந்தம் வேறு, இப்போதுள்ளது வேறு. இந்தக் காலத்தில் ஆசானுக்கும் மாணவனுக்கும் பள்ளிக்கூடத்தில் மட்டும், குறிப்பிட்ட நேரங்களில் இருக்கிற தொடர்பைத் தவிர மற்ற நேரங்களில் ஒன்றுமில்லை. படிப்பையும் பள்ளிக்கூடத்தையும் ஒட்டிய விஷயங்களைத் தவிர, மாணவனுடைய மற்ற நடவடிக்கைகளில் இந்தக் காலத்து ஆசான்கள் தலையிடுவதும் இல்லை; தலையிடவும் முடியாது. ஆனால், அந்தக் காலத்தில் மாணாக்கனுடைய எல்லாக் காரியங்களிலும் ஆசான்கள் தலையிடுவார்கள்.



வீட்டில் குறும்பு செய்தால் வித்யாலயத்தில் தண்டனை கிடைக்கும். பாட்டையில் சண்டை போட்டுக் கொண்டால், பள்ளிக்கூடத்தில் அடி விழும். கூத்துப் பார்க்கப் போனாலும், வாத்தியாருக்குப் பயப்பட வேண்டும். நெடுநேரம் தூங்கிவிட்டாலும் ஆசான் நினைவு வரும். இரவில் கண் விழித்ததைக் கேட்டாலும் அவர் கண்டிப்பார்.

அந்தக் காலத்தில் மாணவர்களைத் தண்டிக்கிற மாதிரியும் பல சமயங்களில் கடூரமாக இருக்கும். பிரம்பினால் கசையடி கொடுப்பதும், கோதண்டத்தில் தொங்கச் செய்வதும், ஒற்றைக் காலில் நிற்கச் செய்வதும் சர்வ சாதாரணம். இந்தத் தண்டனைகள் எல்லாவற்றையும் குப்புசாமி அனுபவித்து அலட்சியம் செய்கிறவன்.

முனிசாமிப் பிள்ளை என்பவர்தான் அந்தப் பள்ளிக்கூடத்தின் (பிரைமரி ஸ்கூல்) தலைமை ஆசிரியர். வெகு கண்டிப்பானவர். நன்றாகப் படிக்கிற பையன்களிடம் கொஞ்சுவார். சரியாகப் படிக்காதவர்களைத் திட்டிக்

கொண்டேயிருப்பார். துடுக்குக்காரப் பையன்களைக் கண்டால் வெடுக்கு வெடுக்கென்று விழுவார். கோபம் வந்துவிட்டால், நாக்கைக் கடித்துக் கொண்டு அநாகரீகரமாகவும் அடித்து விடுவார். எந்நேரமும், கையில் மணிப் பிரம்பைப் பிடித்துக் கொண்டேயிருப் பார். குப்புசாமியைக் கண்டால் குமுறுவார். அவன் அவரைச் சட்டை செய்வதில்லை.

ஒருநாள் காலையில், பள்ளிக்கூடம் ஆரம்பமாவதற்கு வெகுநேரம் முன்னாலேயே நான் பள்ளிக்கூடத்துக்குப் போக நேர்ந்தது. பள்ளிக்கூடத்தின் கட்டிடத்தைச் சுற்றிலும் பெரிய காலி நிலம் உண்டு. அதில் 'டிரில்' செய்ய உபயோகமான ஒரு பகுதியைத் தவிர, மற்ற இடமெல்லாம் நெரிஞ்சி முள் செடிகள் நிறைந்து படர்ந்திருக்கும். யாரும் காலை வைத்துவிட முடியாது. ஓர் அடிக்கு ஐம்பது முட்கள் காலில் குத்திக் கொள்ளும்.

அநதப்பகுதியில்குப்புசாமி மட்டும் தனியே உட்கார்ந்து கொண்டு என்னவோ செய்து கொண்டிருப் பதைப் பார்த்தேன். மெதுவாக நடந்து அவன் பின்புறமாக நின்று, அவன் என்ன செய்கிறான் என்று எட்டிப் பார்த்தேன்.

அவனுக்கு முன்னால் தரையில் ஒரு காகிதம் விரிக்கப்பட்டிருந்தது. அதில் நிரம்ப பெரிய பெரிய நெரிஞ்சி முட்கள் காணப்பட்டன. மிகவும் கூர்மையான முட்களாகப் பொறுக்கி அதில் குப்புசாமி போட்டுக் கொண்டிருந் தான். அதைப் பார்த்தவுடன் அவன் மறு படியும் என்னவோ குறும்பு செய்யப் போகிறான் என்று அறிந்து



கொண்டு, அவன் என்னைப் பார்க்கு முன் மெல்ல நடந்து வகுப்புக்குள் போய் விட்டேன்.

சற்று நேரத்தில் குப்புசாமி உள்ளே வந்தான். வகுப்பில் யாரும் இருக்க மாட்டார்கள் என்று எண்ணி வந்த அவன் என்னைக் கண்டதும், 'அடே, நீ எப்படா வந்தாய்?' என்றான். நான் வெறும் புன்சிரிப்பு மட்டும் காட்டி னேன்.

''டேய் ராமலிங்கம்! நான் ஒன்று செய்யப் போகிறேன். நீ வாத்தியாரி டம் சொல்லக் கூடாது' என்றான். நான் 'இல்லை' என்றேன்.

உடனே அவன் முனிசாமிப்பிள்ளை உட்காரும் நாற்காலியில் கொஞ்சம் தெள்ளிய மணலைப் பரப்பி, அதில் பெரிய பெரிய நெரிஞ்சி முட்களை ஏராளமாகப் புதைத்து வைத்து விட் டான். அதற்குப் பிறகு ஐந்து நிமிஷம் சென்று பையன்கள் ஒவ்வொருவராக வகுப்புக்குள் வந்தார்கள். மற்றவகுப்பு களும் கூடி அவற்றின் ஆசிரியர்களும் வந்துவிட்டார்கள்.

மணி அடிக்க இன்னும் இரண்டு மூன்று நிமிஷங்கள்தான் இருந்தன. சரியாக மணி அடிக்கிற நேரத்துக்கு ஒரு நிமிஷம் முன்னால்தான் ஹெட் மாஸ்டர் முனிசாமிப் பிள்ளை வருவது வழக்கம்.

என் மனசு திக் திக்கென்று அடித் துக் கொண்டேயிருந்தது. குறிச்சியில் இருந்த முட்கள் என் நெஞ்சைக் குத்திக் கொண்டேயிருந்தன. அதில் உபாத்தியாயர் உட்கார்ந்தால், ஏக காலத்தில் குறைந்தது நூறு முட்களாவது நறுக்கென்று குத்தி விடுமே என்று எண்ணி எண்ணி நடுங்கிக் கொண்டே இருந்தேன். குப்புசாமி வெகு முரடன் என்ற பயம் வேறு.

முனிசாமிப் பிள்ளை வந்தார். அவர் குள்ளமான தடித்த மனிதர். வயது ஐம்பத்திரண்டுக்கு மேலிருக்கும் என்றாலும், தலை நிமிர்ந்த வண்ணமாகவே வேகமாக வருவார். வகுப்புக் குள் வந்ததும், நேராக நாற்காலிக்குப் போய் 'திப்'பென்று உட்காருவார்.

அதையெல்லாம் நினைத்து என் நெஞ்சம் பதைத்துக் கொண்டிருந்தது. அடிக்கடி திரும்பித் திரும்பி குப்பு

சாமியைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். நான் அவனை பார்த்த ஒவ்வொரு தடவையும், அவன் தனது வலது கையை வாயில் வைத்து மூடி 'கப்சிப்' சொல்லிவிடாதே!' என்று ஜாடை காட்டிக் கொண்டேயிருந்தான்.


முனிசாமிப் பிள்ளை அன்றைக்கு ஒரு நிமிஷம் லேட்டாக வந்தார். அதனால் அவசரமாக வகுப்பில் நுழைந்து வழக்கம்போல் நாற்காலியின் அருகில் சென்று கையிலிருந்த பிரம்பை மேஜையின் மேல் வைத்துவிட்டு மேஜையைப் பார்த்தபடியே இடது கையால் நகர்த்தி உட்காரப் போனார். என் மனம் கேட்கவில்லை. நான், உடனே குதித்தெழுந்து, "சார்! சார்! அதில் உட்கார வேண்டாம்" என்று கத்தினேன்.

"ஏண்டா?" என்று சொல்லிக் கொண்டே குனிந்து நாற்காலியைப் பார்த்தார். உண்மை விளங்கி, உட்காராமல் தப்பித்துக் கொண்டார்.

மணலையும், முட்களையும் அப்புறப் படுத்தச் செய்து விட்டு, "இது யாருடைய வேலை?" என்றார்.

நான் குப்புசாமிக்குப் பயந்து, "யாரோ அப்படிச் செய்திருந்தார்கள் சார்" என்றேன். வாத்தியாரை நாற்காலியில் உட்கார வேண்டாம் என்று கத்தித் தடுத்துவிட்ட போதே குப்புசாமி எழுந்து வகுப்பை விட்டு வெளியே போய்விட்டான்.

பிறகு, வழக்கம் போல் பாடங்கள் நடந்து பள்ளிக்கூடம் பகல் சாப்பாட்டிற்காகக் கலைந்தது. நான் வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தேன். குப்புசாமியைப் பற்றியும், அவன் முள் வைத்ததைப் பற்றியும் கூட மறந்து நடந்துகொண்டிருந்தேன். திடீரென்று




யாரோ பின்னால் வந்து சடை போட்டிருந்த என் தலை மயிரை அடியோடு பிடித்துக் கொண்டது தெரிந்தது. யார் என்று பார்க்கத் திரும்பக் கூட முடியவில்லை. என் தலை மயிரை இறுக்கிப் பிடித்திருந்த குப்புசாமி, ஒரு வார்த்தையும் பேசாமல் சடையைப் பிடித்தபடியே என் முகத்தை அவன் முகத்துக்கு நேராகத் திருப்பி, என் கன்னத்தில் 'பளீர்! பளீர்!' என்று ஐந்தாறு அறைகள் கொடுத்துவிட்டு ஓடிவிட்டான்.

அடுத்த சில மாதங்களில் என் தந்தையை கோயம்பத்தூருக்கு மாற்றி விட்டார்கள். நானும் முதல் பாரப் படிப்புக்கு அங்கே போய்விட்டேன். பிறகு, நாமக்கல்லுக்கு வரும் போதெல்லாம் குப்புசாமியைப் பார்ப்பதுண்டு. இது நடந்து இருபது வருடங்களுக்குப் பிறகு குப்புசாமி வந்து என்னுடன் சில நாட்கள் தங்கியிருந்து, சில உதவிகளும் பெற்றுச் சென்றான்.

நன்றி: 'பூஞ்சோலை' ஜூன் 1951.

அடுத்த இதழில்:
என் குழந்தைப் பருவம்
—வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன்



# கந்தசாமியின் கடிதம்

பா.சிவக்குமார் (5251)



கந்தசாமியின்பெற்றோர்மதுரையில் வசித்து வந்தனர். அவர்களுக்கு ஏராளமான சொத்துக்களும் நில புலன்களும் இருந்தன. அவர்களின் ஒரே மகனான கந்தசாமி தன் மாமா மகனான சிவராமனுடன் சென்னையில் ஒரு விடுதியில் தங்கிப் படித்து வந்தான். அவனுக்குத் தமிழ் என்றால் பிடிக்காது. அவன் அடிக்கடி தன் நண்பர்களிடம் 'தமிழ்— அதை உமிழ்' என்று ஏளனமாகக் கூறுவான். அவனுக்குத் தமிழில் கடிதம் சரியாக எழுதத் தெரியாது. அவன் அப்பா அம்மாவுக்குஆங்கிலத்தில்தான் கடிதம்எழுதுவான். ஆனால், சிவராமன் நன்றாகப் படித்து வந்தான். அவனுக்கு ஆங்கிலத்தில் கடிதம் எழுதத் தெரியாது. அதைச் சுட்டிக்காட்டி கந்தசாமி சிவராமனைக் கேலி செய்வான்.

ஒருநாள் சிவராமனை, கந்தசாமி கேலிசெய்யவே, அவன்கோபத்துடன் "நம் தாய்மொழி தமிழ். அதில் கடிதம் எழுதத் தெரியாதவன் என்னைக் கேலி செய்யலாமா?" என்றான்.

"நான் தமிழில் கடிதம் எழுதிவிட்டால் நீ எனக்கு 10 ரூபாய் தர வேண்டும்" என்றான். சிவராமனும் அதை ஏற்றுக் கொண்டான்.

அடுத்தநாள் கந்தசாமி அஞ்சல் அட்டை வாங்கி, தன் பெற்றோருக்குக் கடிதம் எழுதினான்.

அதில் எழுதியது.

சென்னை
2.7.85

அன்புள்ள ஆப்பம்மாவுக்கு,

உங்கள் அன்பு மகான் கந்தசாமி எழுதுவது. நலம். நலம் அறிய அவல். நான் சவராமனுடன் ஊர் வந்து சேர்ந்தோம். நீங்கள் கெடுத்தனுப்பிய நெய் கிடைத்தது. எனக்கு காய்ச்சலாக இருந்ததால் இரண்டு நாள் லீவு பொட்டுவிட்டேன். லீவ் லெட்டரில் விடுமுறை என்று எழுதுவதற்குபதிலாக விடுதலை என்று எழுதிவிட்டேன். ஆசிரியர் ஆடி ஆடி என அடித்துவிட்டார். வேறு சம்சாரங்கள் இல்லை. மற்றவை நேரில்.

இப்படிக்கு அன்பு மகான்,

கந்தசாமி.

இதை உடனடியாக சிவராமனிடம் காட்டினான். அவன் சிரித்துக் கொண்டே கடிதத்தைப் படித்துவிட்டு "இது நீ எழுதியதா?" என்றான்.

"ஆமாம், நான்தான் எழுதினேன்" என்றுசொல்லிவிட்டு, "நான் வெற்றியடைந்துவிட்டேன். 10 ரூபாயைக் கொடு" என்றான் கந்தசாமி.

சிவராமன் 10ரூபாயைக்கொடுத்துவிட்டு, "இதை உன் பெற்றோருக்குக் கட்டாயம் அனுப்பு" என்றான், உள்ளூரச் சிரித்துக் கொண்டே. 'சரி' என்றான் கந்தசாமி.

# பிருந்தாவனக் கதையரங்கம்

கடிதத்தை மதுரைக்கு அனுப்பினான் கந்தசாமி. அது அவனுடைய அப்பாவுக்குக் கிடைத்தது. அவர் கந்தசாமியின் தாயை அழைத்து அருகில் வைத்துக் கொண்டு கடிதத்தைப் படித்தார்.

அப்பா: சொன்னை

அம்மா: அதென்னங்கசொன்னை?

அப்பா: உன் ஆசைமகன் சென்னை என்பதற்குத்தான் சொன்னை என்று எழுதியிருக்கிறான்.

அம்மா: மேலே படிங்க.

அப்பா: அன்புள்ள ஆப்பம்மாவுக்கு

அம்மா: அதென்னங்க ஆப்பம்மாவு? அவன் ஊருக்குப் போகும் போது ஆப்ப மாவு ஆட்டி வைச்சிருந்தேனே, அதை நினைச்சிருக்கான்.

அப்பா: நான் சவராமனுடன் ஊர் வந்து சேர்ந்தோம்.

அம்மா: அதென்னங்க சவராமு.

அப்பா: சிவராம்கிறதிலே மேலே இருக்க வேண்டிய சிண்டைப் பிச்சுட்டு சவராம்னு போட்டிருக்கான்.

அம்மா: மேலே படிங்க.

அப்பா: நீங்க கெடுத்தனுப்பிய நெய் கிடைத்தது.

அம்மா: நாம நெய்யைக் கெடுத்தனுப்பினோமா? நல்லாத்தானே அனுப்பினோம்?

அப்பா: கொடுத்தனுப்பிய என்பதற்கு, கெடுத்தனுப்பிய என்று எழுதியிருக்கான்.

அம்மா: சரி, படிங்க.

அப்பா: எனக்குக் காய்ச்சலாக இருந்ததால் இரண்டு நாள் லீவு பொட்டு விட்டேன்.

அம்மா: அது என்னங்க லீவு பொட்டு? சாந்துப் பொட்டு, குங்குமப் பொட்டு போல இதுவும் ஒரு வகையோ?

அப்பா: ஆமாண்டி, உன் மகன் வாங்கி வருவான். நீ நெத்தி நிறைய அப்பிக்கிட்டு ஊர்வலம் போ.

அப்பா: விடுமுறைஎன்பதற்குபதிலாக விடுதலை என்று எழுதிவிட்டேன். வாத்தியார் ஆடி ஆடி என ஆடித்துவிட்டார்.

அம்மா: அது என்னங்க? இது வைகாசி மாசம்தானே? ஆசிரியர் ஆடி ஆடி என்று ஏன் சொன்னார்?

அப்பா: ஆமாண்டி, ஆசிரியர் ஆடி ஆடி என்று ஆடினார். உன் மகன் தை தைன்னு குதிச்சான்.

அம்மா: அப்புறம் என்னதான் எழுதியிருக்கான்?

அப்பா: வேறு சம்சாரங்கள் இல்லை. மற்றவை நேரில்.

அம்மா: அது என்னங்க, சம்சாரம்னு சொல்லியிருக்கான்.

அப்பா: ஆமா, நீ உன் மகனுக்குக் கட்டி வைக்காமலே சம்சாரமாம்.

அம்மா: என்னங்க இவன் தமிழிலேயே இப்படி எழுதியிருக்கானே! எப்பத் திருந்தப் போறான்? நீங்களாவது இந்தக் கடிதத்தைத் திருத்திப் படிங்க. அப்பத்தான் எனக்குப் புரியும்.

அப்பா கடிதத்தைத் திருத்திப் படிக்கிறார் (பிழையை நீக்கி):

சென்னை
2.7.85

அன்புள்ள அப்பா, அம்மாவுக்கு,

உங்கள் அன்பு மகன் கந்தசாமி எழுதுவது. நலம். நலமறிய ஆவல். நான் சிவராமனுடன் ஊர் வந்து சேர்ந்தேன். நீங்கள் கொடுத்தனுப்பிய நெய் கிடைத்தது. எனக்குக் காய்ச்சலாக இருந்ததால், இரண்டு நாள் லீவு போட்டுவிட்டேன். லீவு லெட்டரில் விடுமுறை என்பதற்குப் பதிலாக விடுதலை என்று எழுதிவிட்டேன். ஆசிரியர் அடி அடி என்று அடித்துவிட்டார். வேறு சமாச்சாரங்கள் இல்லை. மற்றவை நேரில்.

இப்படிக்கு அன்பு மகன்,
கந்தசாமி.

இக்கடிதத்தைக் கந்தசாமியின் அப்பா அவனுடைய தமிழாசிரியருக்கு அனுப்ப அவர் வகுப்பில் அதைப் படிக்க, அதைக் கேட்ட மாணவர்கள் கொல்லென்று சிரித்தனர். தமிழில் கடிதம்எழுதத்தெரியவில்லையே என்று கந்தசாமி வெட்கப்பட்டான். அவன் சிவராமனிடம் சென்று, "என்னை நீ திருத்திவிட்டாய். இனி, நான் தமிழை வெறுக்க மாட்டேன்" என்று உறுதி கூறினான். சிவராமன் கந்தசாமி திருந்திவிட்டதை அறிந்து மகிழ்ச்சியடைந்தான்.

* * *

# வெயிலா? மழையா?

சி.கே. இரவி ராஜ் (3958)



இரண்டு நாட்களாக வானம் ஒரே மப்பும் மந்தாரமுமாக மூடியிருந்தது. மேகம் மூடியிருந்ததே தவிர ஒரு சிறு தூறல் கூட இல்லை.

ராமு கவலையாக உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன் முன்னே தொலைக்காட்சிப் பெட்டி அலறிக் கொண்டிருந்தது. சென்னை சேப்பாக்கம் ஸ்டேடியம் காலை 10.30க்கே இருளாகக் காட்சியளித்தது. ஆஸ்திரேலியாவுக்கும், இந்தியாவுக்கும் சென்னையில் நடக்கும் மாட்ச்சே கடைசி மாட்ச்சும். அந்த மாட்ச் போதிய வெளிச்சம் இல்லாததால் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது. ராமுவின் கவலைக்கு இதுவே காரணமாகும்.

ராமு மனத்துக்குள் ஆண்டவனை வேண்டிக் கொண்டிருந்தான். "கடவுளே, மேகம் கலைந்து சூரிய ஒளி 'சுரீர்' என்று அடிக்க வேண்டும். மழை பெய்யக் கூடாது" என்பதே அவன் வேண்டுதல்.

அப்பொழுது வர்ணனையாளர், "போதிய வெளிச்சம் இல்லாததால் ஆட்டம் இப்போது நிறுத்தி வைக்கப்படுகிறது. மீண்டும் 11.45க்கு சந்திப்போம்" என தன் வர்ணனையை முடித்ததும், ராமு வெறுப்பாக எழுந்து சென்று தொலைக்காட்சியை அணைத்தான்.

கூடத்திலுள்ள ஊஞ்சலில் அமர்ந்து ராமுவின் அப்பா ஏதோ கணக்கு எழுதிக் கொண்டிருந்தார். அப்பொழுது காலிங்பெல் அலறியது. ராமு ஓடிச் சென்று கதவைத் திறந்தான். அவனது அப்பா எழுந்து வந்து யாரென்று பார்த்தார். பார்த்ததும், "முனியனா! உள்ளே வாப்பா!" என்றார். முனியன் கிராமத்திலிருக்கும் அவருடைய சொந்த நிலங்களைப் பராமரிக்கும் வேலையில் உள்ளவன்.

முனியன் உள்ளே வந்ததும் அவனுடைய நலமும், கிராமத்திலிருக்கும் மற்றவர் நலனையும் விசாரித்தார். பின்பு, "கோவிந்தனை வயலின் ஓரத்தில் வரப்புக் கட்டச் சொன்னேனே? கட்டினானா?" என்று கேட்டதும், முனியன், "இல்லீங்க, சாமி!" என கைகட்டியவாறு பதில் சொன்னான்.

"என்னது? இன்னும் கட்டலையா?" என்று ராமுவின் அப்பா சற்று கோபமாக வினவினார்.

"மழை வந்தாத்தானேங்க கிணறு நிரம்பும். கிணற்றிலே தண்ணீர் இருந்தா வரப்புக் கட்டலாம். கிணறெல்லாம் வறண்டு கிடக்குதுங்க! மழை பெய்யாத போனால், இந்த வருஷம் விளைச்சலே இருக்காது. பஞ்சமும், பட்டினியும்தான்..." என்று முனியன் பணிவாகக் கூறினான்.

இவர்களின் உரையாடலை ஓரமாக நின்று கேட்டுக் கொண்டிருந்த ராமுவின் மனத்தில் முனியன் கூறியவை 'சுரீர்' எனத் தைத்தன.

"என்னுடைய பொழுது போக்குக்கு மட்டும் நான் மழை வரவேண்டாமென்று இறைவனை வேண்டினேன். இதனால் நாட்டிலுள்ள நிலங்களெல்லாம் வறண்டு பஞ்சம் தலைவிரித்தாடும் என்பதை என்னால் உணர முடியாததற்குக் காரணம் என்னுடைய சுயநலம்தானே!" தன் தவறை உணர்ந்தான் ராமு.

'மழை பொழிந்து, நிலம் விளைந்து, பஞ்சம் ஒழிந்து நாட்டு மக்கள் நல்லபடியாக இருக்க அருள வேண்டும்' என்று ராமு தன் மனசுக்குள் இறைவனை வேண்டிக் கொண்டதும்தான் தாமதம்; மேகம் ஆனந்தக் கண்ணீர் விடத் தொடங்கியது.

* * *



# புதுமைப் போட்டி-3

## முதற் பரிசு ரூ. 50/-
## இரண்டாம் பரிசு ரூ. 25/-

பெரியோரின் வாழ்க்கை வரலாறுகள், நம் வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஒளிவிளக்குகள்.

இதை உணர்ந்து நீங்கள் பல பெரியவர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்திருக்கலாம். அல்லது, பத்திரிகைகள் வாயிலாக அறிந்திருக்கலாம். அல்லது, நூல் நிலையங்களில் வாழ்க்கை வரலாற்று நூல்களைத் தேடிப் பிடித்துத் தெரிந்து கொள்ள இனியாவது முயற்சி செய்யலாம்.

இந்தப் போட்டியில் 8 குறிப்புக்களைத் தந்திருக்கிறோம். ஒவ்வொரு குறிப்பையும் படித்து, அது யாரைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்:

1. கையில் தேசியக் கொடியுடன் நடந்து சென்றான் 12 வயதுச் சிறுவன். வழியில் கோட்டைமேல் பறந்த கொடியைப் பார்த்தான். "ஏ, ஆங்கிலக் கொடியே, இது எங்கள் நாடு. இது எங்கள் கோட்டை. இதில் அந்நிய நாட்டுக் கொடியாகிய நீ பறப்பதா? விரைவில் நீ கீழே இறக்கப்படுவாய். இதோ என் தாய்நாட்டுக் கொடி! இது அங்கு தலைநிமிர்ந்து பறக்கும்" என்று ஆவேசத்துடன் கூறினான் — பெயர் தெரியுமா?

2. "மிகவும் நோஞ்சானாக இருக்கிறான் இந்தப் பையன். இப்படியே இருந்தால், 30 வயது முடிவதற்குள் இவன் ஆயுளே முடிந்துவிடும்" என்று வகுப்பறையில் ஆசிரியர் கூறினார். ஆனால், அப்பையன் வளர்ந்தான்; நாட்டுக்குப் பல நன்மைகளைச் செய்தான்; 100 வயது வரை வாழ்ந்தான். தன்னுடைய நூறாவது பிறந்த தின விழாவை நாடு முழுவதும் நன்முறையில் கொண்டாடுவதைக் கண்டபிறகே மறைந்தான் — யார் தெரிகிறதா?

3. அந்தப் பையனுக்குத் திருமணம் செய்ய முதலில் ஒரு பெண்ணை நிச்சயம் செய்தார்கள். ஆனால், சில நாட்களிலே அப்பெண் இறந்து விட்டாள். பிறகு, மற்றொரு பெண்ணை நிச்சயம் செய்தார்கள். அவளும் இறந்து போனாள். மூன்றாவதாக நிச்சயம் செய்யப்பட்ட பெண்ணுக்கு நல்ல வேளையாக எந்த வித ஆபத்தும் ஏற்படவில்லை. நிச்சயம் செய்த ஆறாவது ஆண்டில் அப்பெண்ணுக்கும் அந்தப் பையனுக்கும் 'ஜாம், ஜாம்' என்று திருமணம் நடந்தது. —பெண் பெயர் என்ன?

4. 'செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்கு
இந்த நூல் உரியதாய் என்றும் வாழ்கவே'

என்று தாம் எழுதிய புத்தகத்தைத் தமிழ்நாட்டுக் குழந்தைகளுக்குச் சமர்ப்பணம் செய்தார் ஒரு பெரியவர். — அவர் பெயர் தெரியுமா?

5. அந்தப் பெற்றோரின் 14—வது குழந்தையாக — கடைசிக் குழந்தை யாகப் பிறந்தார் இவர். தமது 52—வது வயதிலே மிகப் பெரிய பரிசு ஒன்றைப் பெற்றுத் தாம் பிறந்த நாட்டுக்குப் பெருமை தேடித் தந்தார். அதுவரை ஐரோப் பியரே பெற்றுவந்த அப்பரிசு, முதல் முதலாக ஆசியாக்காரராகிய இவ ருக்குக் கிடைத்தது — இவர் யார்?

6. தம் நண்பராக இருந்த முதலியார் ஒருவரிடம் வண்டியிலே பூட்டி ஓட்டுவதற்கு ஏற்ற காளை மாடு ஒன்றை வாங்கி வரும்படி இவர் கூறினர். அந்த அப்பாவி முதலியார், ஏமாந்து போய் ஒரு சண்டிமாட்டை வாங்கி வந்துவிட்டார். அந்த மாட்டின் குணத்தைப் பற்றி இவர் ஒரு பாட்டுப் பாடி னர்:

இட்டமுடன் முதலியார் வாங்கிவந்த
காளைதினம் இருபோர் தின்னும்.
சட்டமுடன் கொள்ளுண்ணும்; புல் உண்ணும்
அதை வண்டிதன்னிற் பூட்டக்
கிட்டவரின் முட்டவரும்; தொட்டவர்
மேலே கழியும்; கீழேவிழும்.
எட்டாள்கள் தூக்கிடினும் தடிகொண்டு
தாக்கிடினும் எழுந்தி ராதே!

—பாடியவர் யார் தெரியுமா?

7. இவர் தமது 39—வது வயதிலே மனைவியை இழந்தார். அப்போது இவருக்கு ஐந்து குழந்தைகள். ''நீங்கள் மறுமணம் செய்து கொள்ள வேண்டி யது மிகவும் அவசியம். இந்த ஐந்து குழந்தைகளையும் வளர்ப்பதற்கு ஒரு தாய் வேண்டுமல்லவா?'' என்று உறவினர்கள் வற்புறுத்தினர்கள். அவர்களுக்கு இவர் சொன்ன பதில்:

''இந்த 5 குழந்தைகளுடன் 6—வது குழந்தையையும் பராமரிக்கும் பொறுப்புமல்லவா என்னை வந்தடையும்?'' என்றார்.

—இப்படிச் சொன்னவர் யார்?

8. தமிழ்நாட்டிலே முதல் முதலாக ரயில் பாதைகள் போடப்பட்ட ஆண்டிலே, ஒரு குழந்தை பிறந்தது. அக்குழந்தை வளர்ந்தது; கல்வி கேள்வி களில் சிறந்து விளங்கியது. அக்குழந்தையால் தமிழ் மொழிக்கு அதிர்ஷ்டம் பிறந்தது. அக்குழந்தை பிறந்திருக்காத போனல், பல தமிழ் இலக்கியச் செல்வங் கள் நமக்குக் கிடைக்காமலே போயிருக்கும்! — யார் என்று தெரிகிறதா?

இப்போட்டியில் 15 வயதுக்குட்பட்டவர்களே கலந்து கொள்ளலாம். 'கோகுலம் சிறுவர் சங்க' உறுப்பினராக இருந்தால், பெயருக்குப் பக்கத்திலே உறுப்பினர் எண்ணைக் குறிப்பிடுவது நல்லது.


மொத்தம் உள்ள எட்டுக்கும் சரியான விடைகளைக் கண்டுபிடித்து எழுத வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் வந்தால், அவற் றைக் குலுக்கிப் போட்டு முதலில் வரும் விடைக்கு முதற்பரிசு ரூ. 50/—ம் 2—வதாக வரும் விடைக்கு 2—வது பரிசு ரூ. 25/—ம் வழங்கப் பெறும்.

**உறையின்மேல் அல்லது கார்டில் 'புதுமைப்போட்டி—3' எனக் குறிப் பிடவும்.**

முதல் பரிசு, இரண்டாவது பரிசு பெறுவோரின் பெயர்கள், முகவரி களுடன் புகைப்படங்களும் 'கோகுல'த்தில் வெளியிடப்பெறும்.

**விடை அனுப்ப வேண்டிய கடைசித்தேதி: 31.8.85.**

# உரிமை உண்டா?



ஜகத்குரு
ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

செந்தில்நாதன் கூட்டில் அகப்பட்ட ஓர் எலியைச் சித்திரவதை செய்து கொண்டிருந்தான். அதை ரசிக்க அவனை ஒத்த சிலர் அங்கு நின்று கொண்டிருந்தனர்.

அந்த வழியாக, சுந்தரம் வந்து கொண்டிருந்தார். அவர் அவ்வூர் விவேகானந்தர் சபையின் தலைவராக இருந்து சமூக சேவை செய்து வந்தார். அவருக்கு இந்தக் காட்சி பிடிக்கவில்லை. எலியை விடுதலை செய்தார். அது ஓடி மறைந்து விட்டது.

செந்தில்நாதனுக்குக் கோபம் வந்து விட்டது. ''அது என்னுடைய எலி. அதை எதுவும் செய்வதற்கு எனக்கு உரிமை உண்டு'' என்று கூறினான். உடனே சுந்தரம் அவனை நோக்கி, ''உன் தகப்பனார் உன்னைப் பெற்றார். அதற்காக அவர் உன்னைக் கொல்லலாமா?'' என்று கேட்டார். செந்தில்நாதன் வாயடைத்துப் போனான். சுந்தரம் அவனையும் அவன் நண்பர்களையும் விவேகானந்தர் சபைக்கு அழைத்துச் சென்றார். அவர்களிடம் சில சொல்லத் தொடங்கினார்:

''நாம் உயிர்களைக் கொல்லக் கூடாது. உதாரணமாக, ஒருபூச்சியைக் கொல்வதாக வைத்துக் கொள்வோம். நம்மால் திரும்பவும் உயிர் கொடுக்க முடியாது. ஏனென்றால், உயிர் கடவுளுக்குச் சொந்தம். நாம் நினைத்த இடத்தில் பிறக்க முடியாது. அதுபோல நினைத்த வடிவத்திலும் பிறக்க முடியாது. அவை கடவுளின் விருப்பத்தில் அமைகின்றன.

''நம்முடைய பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப இத்தனை நாட்கள் வாழ வேண்டும் என்று கடவுள் விதித்திருக்கிறார். அத்தனை நாட்கள் வாழ்ந்தாக வேண்டும். அந்த இறுதிநாள் வரும் பொழுது யார் தடுத்தாலும் நம்மைக் காப்பாற்ற முடியாது. இப்பொழுது உயிர் கடவுளுக்கே சொந்தமானது என்பது உங்களுக்குப் புரிகிறது.

''அதனால் கடவுளுடைய பொருளான உயிரை யாரும் கொல்லக் கூடாது. அப்படிக் கொல்வது பெரிய பாவம். ஒருவருக்குத் தெரியாமல் கொன்றாலும் கடவுள் பார்த்துக் கொண்டே இருக்கிறார். உரிய காலத்தில் கடுந்தண்டனை கொடுக்கின்றார்.

''பிற உயிரைக் கொல்லக் கூடாது என்பது போலத் தன்னுயிரையும் கொல்லக் கூடாது. கொலையைவிடத் தற்கொலைமிகப்பெரியபாவம். என்ன மனக்கவலை வந்தாலும் அதைப் பொறுத்துக் கொண்டு வாழ வேண்டும். ஏனென்றால், நம் உயிரும் கடவுளுக்குச் சொந்தமன்றோ? தற்கொலை செய்து கொண்டவரின் குடும்பத்தில் பல சிக்கல்கள் உண்டாகும். அந்த உயிர் அதாவது கொலை செய்யப்பட்ட அல்லது தற்கொலை செய்து கொண்ட உயிர் தனக்குரிய காலம் வரை பசி

தாகத்து:.ல் அலைந்து கொண்டிருக்கும்.''

உடனே செந்தில்நாதன் அவரை நோக்கி, ''கொலை செய்கிறவர்களைத் தூக்கில் போடுதலும் கொலைதானே? அந்தக் கொலையை அரசாங்கம் செய்யலாமோ?'' என்று கேட்டான். அதற்குச் சுந்தரம் பதில் கூறத் தொடங்கினார்:

''குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை கொடுக்க அரசாங்கம் கடமைப் பட்டிருக்கிறது. ஆகவே, கொலை செய்தவர்களுக்குத் தூக்குத் தண்டனை தருகிறது. இது கொலையாகாது. மேலும் நம் நாட்டின் மீது படையெடுத்து வரும் பகைவர்களைக் கொல்வதும் கொலையாகாது.

''அதுபோல நல்ல நோக்கத்திற்காக ஒருவன் உண்ணாவிரதம் இருந்து உயிர் விட்டால், அது தற்கொலையாகாது. அதேசமயம் தவறான நோக்கத்திற்கு ஒருவர் உண்ணாவிரதம் இருந்தால் அதைத் தற்கொலை முயற்சி என்று கூறலாம்.

''ஆகவே, யாருக்கும் எந்த உயிரையும் கொல்ல எப்பொழுதுமே உரிமை இல்லை.''

சுந்தரத்தின் பேச்சு செந்தில்நாதன் உள்ளத்தில் வேலை செய்தது.

திருக்குறள்:

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்று அதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

---



# பிருந்தாவனம்



நோயாளியின் பதில்

டாக்டர்: இரண்டு மணிக்கு ஒரு ஸ்பூன் வீதம் நாலு நாளைக்குச் சாப்பிடணும்.''

நோயாளி: சார், சார், என் வீட்டிலே மொத்தமே ஐந்து ஸ்பூன்கள்தானே இருக்கு!

—ஆர். ஜானகிராமன் (6081), சேலம்—1.



குரங்கு எதிரி

ஆப்பிரிக்கக் காடுகளில் 'சிலியன் பைன்' (Chilean Pine) என்ற ஒருவகை மரம் இருக்கிறதாம். அந்த மரத்தில் குரங்குகளே ஏறுதாம். ஆதலால், அதை 'குரங்கு எதிரி' என்று ஆப்பிரிக்க மக்கள் குறிப்பிடுகிறார்கள்.

—கே. நரசிம்மன், (7378), ஒசூர்.

நீரும் ஊரும்

நீருடன் தொடர்புடைய ஊர்கள் :

ஏரியூர்
குளத்தூர்
ஜலகண்டபுரம்
கடலூர்
அம்பாசமுத்திரம்
பெரிய குளம்
மல்லாங்கிணறு
திருவையாறு

—எம். சிவகுமார் (7158), மதுரை—6.




எத்தனை குதிரைகள்?

''மந்திரி நம் அரண்மனையில் உள்ள காவல்படையில் எத்தனை ஆட்கள், எத்தனை குதிரைகள் உள்ளனர்?'' என்று அரசர் கேட்டார்.

''20 மனிதர்களும், மொத்தம் 84 கால்களும் உள்ளன'' என்றார் மந்திரி.

அப்படியானால், குதிரைகள் எத்தனை?

விடை: 11 குதிரைகள்

—ஜி. கே. சங்கர் (771), மகாதானபுரம்





**மலர்ப்பிரியர்கள்**

ஜப்பானியர்களுக்கு மலர்கள் என்றால் உயிர். இவர்கள் மலர்களை, அவற்றின் அழகை மிகவும் ரசிப்பார்கள். ஜப்பானில் அழகிய மலர்களைப் பொது இடங்களில் கூட குவளைகளில் வைத்திருப்பார்கள். தபால் நிலையம், ரயில் நிலையம், குளிக்கும் அறை போன்ற இடங்களிலும் மலர்களை அலங்காரம் செய்து வைத்திருப்பார்கள்.

சூரியன் மறையும் காட்சியை மிகவும் ரசிப்பார்கள். கவிதைகளை மிகவும் விரும்புவார்கள். மற்றவர்களை வரவேற்கும்போது தலையைத் தாழ்த்தி வரவேற்பார்கள். எவரையும் மரியாதையுடன் அழைப்பார்கள்.

—எஸ். ஜெயஸ்ரீ (204), திருச்சி—14





**ஏமாற்றம்**

பாபு: சே, ரேடியோக் கடைக்காரர் என்னை ஏமாத்திட்டார்டா.

கோபு: எப்படிடா?

பாபு: நான் பிலிப்ஸ் ரேடியோ வேணும்னு கேட்டேன். ரேடியோ வைத்திருப்பினால், இது 'ஆல் இந்தியா ரேடியோ'ன்னு சொல்றாங்க.

—ஆர். ஜானகிராமன், (6081)
சேலம்—1.




**இன்று வழங்கும் பெயர்கள்**

கீழே உள்ளவை தமிழகத்தில் உள்ள சில ஊர்களின் முற்காலப் பெயர்கள். தற்போது வழங்கும் பெயர்களைச் சொல்ல முடியுமா?

1. திருமுதுகுன்றம்
2. திருநணா
3. திருமறைக்காடு
4. திருநறையூர்
5. திருக்கூடல்
6. திருஆவினன்குடி
7. தகடூர்

விடை: 1. விருத்தாசலம்; 2. பவானி; 3. வேதாரண்யம்; 4. நாச்சியார் கோயில்; 5. தென்மதுரை; 6. பழனி; 7. தர்மபுரி

—எஸ். ஷம்சுதீன் (8817), உதகமண்டலம்.




### மாறாத எழுத்துக்கள்

**A H I M O T U W X Y**

இந்தப் பதினொரு எழுத்துக்களின் தனித்தன்மை என்ன?

(இந்த எழுத்துக்களைக் கண்ணாடியில் காட்டுங்கள். கண்ணாடியிலும் ஒவ்வோர் எழுத்தும் மாறாமல் இருக்கும்).

—கே. சங்கர் (8079), உடுமலைப்பேட்டை.





### முட்டை மேல் சிறுவன்!

குறும்பு மிக்க அந்தச் சிறுவனுக்குத் திடீரென்று ஓர் ஆசை எழுந்தது. கோழிக்கூட்டிலிருந்து ஒரு முட்டையை எடுத்து வந்தான். தன்னுடைய வீட்டின் ஒரு மூலையில் வைத்து அதன் மேல் ஏறி அமர்ந்து கொண்டான். 'ஏண்டா இப்படிச் செய்கிறாய்?'' என்று அவன் தந்தை கேட்ட போது, ''கோழி மட்டும் முட்டை மேல் அமர்ந்து குஞ்சு பொரிக்கிறதே! நம்மால் ஏன் முடியாது?'' என்று பதில் கேள்வி கேட்டான்.

இளமையிலே இப்படி ஆராய்ச்சியில் ஈடுபட்ட அவன், பிறகு உலகம் போற்றும் விஞ்ஞானி ஆனான். பெயர் தாமஸ் ஆல்வா எடிசன்.

—எஸ். சிவராஜ் (22). மன்னார்குடி






### பலகை மாற்றம்

செங்கற்பட்டிலே ஒரு பெரிய மளிகைக் கடையில் ஒரு போர்டு காணப்பட்டது. அதில்,

'காப்பிக்கோட்டை அறைத்துத் தரப்படும்'

என்று பிழைபட எழுதப்பட்டிருந்தது.

நானும் என் நண்பர்களும் அந்தக் கடையின் முதலாளியைப் பார்த்து, ''கோட்டையை அரைக்கும் அளவுக்கு உங்கள் கடையில் மிஷின் வைத்திருக்கிறீர்களா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டோம்.

அவருக்கு முதலில் புரியவில்லை. போர்டிலுள்ள தவறுகளைச் சுட்டிக் காட்டிய பிறகு, அவர், 'நாளையே பிழையில்லாமல் எழுதி மாட்ட ஏற்பாடு செய்கிறேன்'' என்றார்.

சொன்னபடி செய்துவிட்டார்.

—த. அருள் சிவபாலன் (647), செங்கற்பட்டு.

### என்ன விசேஷம்?

| | | | |
|---|---|---|---|
| 182 | 372 | 235 | 283 |
| 493 | 546 | 746 | 671 |
| 675 | 918 | 981 | 954 |

இந்த நான்கு கூட்டல் கணக்குகளிலும் அப்படி என்ன விசேஷம்?

ஒவ்வொரு கணக்கிலும், விடையுடன் சேர்த்து ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்கள் அத்தனையும் உள்ளன. இதே போல் வேறு எண்களை நீங்கள் போட்டுப் பாருங்கள்.

—கே. நரசிம்மன் (7378), ஒசூர்.



கவலை வேண்டாம்

**அறிவிப்பு**

விஷஉணவுபற்றிய கவலையில்லாமல் எங்கள் ஹோட்டலில் சாப்பிடலாம். ஏனெனில், இங்கு தயாரிக்கப்படும் பலகாரங்கள் ஒரு வார தீவிர பரிசோதனைக்குப் பிறகே விற்கப்படுகின்றன.

—பி. செந்தில்குமார் (6861), பேரூர்.



பாட்டியின் பதில்

"பாட்டி, சினிமாவுக்குப் போகும் போது, தூக்குச் சட்டியிலே பூரி கொண்டு போறீங்களே, எதுக்கு?"

"என்னமோ, அது மசாலாப் படமாம். பூரி மட்டும் கொண்டு போனால், அங்கே மசாலா இருக்கும். தொட்டு சாப்பிடலாம் என்றுதான்."

— ஆர். சசி (5593), காரைக்குடி. 2.

**பாதிப் பரீட்சையில்....**

பரீட்சை நடந்து கொண்டிருக்கும் போது பாதியில் எழுந்து வெளியில் செல்ல முயன்றான் ஒரு மாணவன். ஆசிரியர் கேட்டதற்கு, "போஸ்ட் ஆபீஸ் வரை போகிறேன். உடனே வந்து விடுவேன்." என்றான் அவன்.

"போஸ்ட்-ஆபீஸிற்கா! எதற்கு?"

"கேள்வித் தாளில் 'உன் மாமாவுக்கு இந்த விடுமுறையில் அவர் ஊருக்கு வருவதாக ஒரு கடிதம் எழுதவும்' என்றுகேட்டிருக்கு. கடிதம் எழுதி விட்டேன். தபாலில் போட்டுவிட்டு உடனே ஓடி வந்து விடுகிறேன் சார்"

—கே. ராஜா (6963), சென்னை—28



## ஒரே தலைப்பு

உங்களிடம் திருக்குறள் புத்தகம் இருக்கிறதா? அதில் ஒரே தலைப்புக் கொண்ட இரு அதிகாரங்கள் எங்கு எங்கே உள்ளன என்று கண்டுபிடியுங்கள், பார்க்கலாம்.

விடை: 1. அதிகாரம்—71, 2. அதிகாரம்—110.

—டி. ஜெய்சங்கர் (391), மதுரை,



# ஒரு பூனை புலியாகிறது



டாக்டர் பூவண்ணன்

## ௭. பிரிந்தவர் கூடினர்!

காரை ஓட்டிக் கொண்டிருந்த ஹனிமேன் அடிக்கடி சேரனைப் பார்த்துக் கொண்டே இருந்தான். ஒரு சிறுவனின் நாட்டுப் பற்றும் வீரச் செயல்களும் அவனை இன்னும் வியக்கச் செய்து கொண்டிருந்தன. "கவிஞர்கள் பிறக்கிறார்கள்! உண்டாக்கப்படுவதில்லை என்பது போலத் தேச பக்தர்கள் பிறக்கிறார்கள், உண்டாக்கப்படுவதில்லை! சுயநலம் கலவாத துணிவுமிக்க வீரர்களும் பிறக்கிறார்கள், உண்டாக்கப்படுவதில்லை!"

ஹனிமேன் சிந்தித்தவாறே மீண்டும் தனது பார்வையைத் தனக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த சேரனின் முகத்தில் படியச் செய்தான்!

சேரனின் முகத்தில் ஒரு மாறுதல்! பதற்றம் படர்ந்த முகத்தின் உணர்ச்சி மாறிவிட்டது! இப்போது அந்தச் சின்ன முகத்தில் விவரிக்க முடியாத வேதனை விரிந்து வேரூன்றியது.

"சேரா! திடீரென்று உன் முகத்தில் வேதனையைப் பார்க்கிறேன். என்ன விஷயம்? உன் வீட்டு ஞாபகமா? இல்லை ஏதோ அரசியல் சூழ்ச்சியிலே சிக்கி விட்டோமே என்கிற வேதனையா?"

ஹனிமேன் கேட்டான். என்றாலும் காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.

சேரன் ஹனிமேனின் முகத்தை ஏறிட்டுப் பார்த்துப் பேசினான்.

"இரண்டும் இல்லைங்க. இந்தச் சின்ன வயதிலே ஒருவனைச் சித்திரவதை பண்ணிட்டோமேன்னு நினைச்சேன். அதனாலே சங்கடப்பட்டுட்டேன்."

"சித்திரவதையா? யாரை?"

"நான் தப்பிச்சு வந்தேனே, அந்த வீட்டிலே இருந்தானே மாது... அவனைத்தான்! தீப்பற்றி எரியற துணியை அவன் மேலே போட்டேன். அவன் தலைமயிரும் சட்டையும் பத்தி எரிஞ்சதைப் பார்த்தேன். ஆனாலும் அறையைப் பூட்டிட்டு வந்துட்டேன். தீக்காயத்திலே அவன் துடிக்க மாட்டானா? நினைக்கிறபோதே நெஞ்சு நடுங்குதுங்க."

சொன்ன சேரனின் முகத்தை ஒரு கணம் உற்றுப் பார்த்தான் ஹனிமேன். அந்த மாது சிறுவனை சேரனை மிருகமாகத் தாக்கியவன். அவனுக்காக இவன் பரிதாபப்படுகிறானே!"

"சார்! யாரும் அவனுக்கு உதவி செய்யலைன்னு தீக்காயத்திலே அவன் செத்துப் போகலாம்! அப்போ, ஒருவனை நான் கொலை செய்தவன் ஆவேன்."

வாயிலிருந்து வார்த்தைகள் வருவதற்குள், கண்ணிலிருந்து நீர்த் துளிகள் விழுந்தன! "டேக் இட் ஈஸி" என்று கூறியபடி, ஹனிமேன் தன் இடக் கையை நீட்டி அவனை அணைத்துக் கொண்டான்.

கார் போய்க் கொண்டே இருந்தது! ஆனால் வேகம் குறைந்திருந்தது!

இந்திய ஒற்றர்களுக்கு எவ்வளவு தான் பயிற்சி கொடுத்தாலும், சமயத்தில் எங்கிருந்தோ, இரக்கம் — கருணை —பாவம் பற்றிய பயம் முதலியவற்றில் ஏதோ ஒன்று தலைகாட்டி விடுவதும், அதனால் ஏமாந்து விடுவதும் ஒரு குறை

என்று பலர் கூறுவது ஹனிமேனுக்குத் தெரியும். எல்லாச் சூழ்நிலையிலும் இரக்கமற்ற அரக்கர் போல நடக்க முடியாத பண்பு, இந்தியரின் இரத்தத்தில் கலந்து விட்ட ஒன்று. இந்தப் பிஞ்சு நெஞ்சத்தில் அந்த மனிதப் பண்பு செழுமையாகவே வளர்ந்திருப்பதை ஹனிமேனால் உணர முடிந்தது.

''சேரா! பயிர்த் தொழிலில் களை எடுப்பது முக்கியம். பயிரை வளர விடாமல் தடுக்கும் களைகளைப் பறித்து எறிவது பாவமல்ல; பயிருக்குச் செய்யும் சேவை! ஒரு முரடனைத் தீக்காயம் பெறுமாறு நீ தாக்கியது, ஒரு தேசத் தலைவரை நாளை கொலை செய்யப் போகும் நாச வேலையைத் தடுப்பதற்காக! அதனால் வீணாக எதையோ நினைத்து வேதனையடையாதே!''

ஹனிமேன் தந்த விளக்கம் சரி என்று நினைத்தாலும் சேரனால் அமைதி அடைய முடியவில்லை. அவன், ''சார்! தீக்காயத்துடன் அறைக்குள் கிடப்பவனுக்கு மருத்துவ உதவி கிடைக்கச் செய்யுங்களேன்! அதனால் என்ன தீமை நேரும்? ப்ளீஸ்!'' என்று கெஞ்சினான் சேரன்.

ஹனிமேன் ஒப்புக் கொண்டான். அதற்குக் காரணம், கருணையோ, இரக்கமோ அல்ல! தீக்காயம் பெற்றவனைக் கைது செய்ய வேண்டும். அவனிடமிருந்து பல தகவல்கள் பெற வேண்டும். அதை அவசரத்தில் மறந்துவிட்டான். சேரன் வேண்டிய போது, ஹனிமேன், தான் மறந்த கடமையை நினைவுபடுத்திக் கொண்டான். அவ்வளவுதான்! ஹனிமேன் உடனே காரைச் சிந்தாதிரிப்பேட்டைக்குத் திருப்பினான். சிங்கண்ணன் தெரு வந்ததும், சேரன் வழி காட்டினான். கார் ஊர்ந்து சென்றது.



தான் அடைபட்டுக் கிடந்த வீட்டை ஹனிமேனுக்குக் காட்டினான், சேரன். வெளிக்கதவு, அவன் தப்பி ஓடிய போதுமூடியபடியே இப்போதும்இருந்தது.

ஹனிமேன் அந்த வீட்டின் எண்ணையும் வீதியின் பெயரையும் குறித்துக் கொண்டு அங்கிருந்து, காரைக் கிளப்பினான். நேப்பியர் பூங்காவின் எதிரே இருந்த காவல் நிலையத்துக்குச் சென்றான். இன்ஸ்பெக்டரிடம் ஹனிமேன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, தீக்காயம் பெற்ற மாதுவைக் கைது செய்து, சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கக் கோரினான். அந்த வீட்டைக் காண்பித்து, யார் அந்த வீட்டுக்குள் நுழைந்தாலும் கைது செய்ய வேண்டினான்.

ஹனிமேன், "சேரா, இப்போது திருப்திதானே?" என்று கேட்டான்.

சேரன் முகமலர்ச்சியுடன், "நன்றி" என்று கூறினான். கூறியபடி தன் கால் சட்டைப் பையில் கையை விட்டு ஒரு சாவியை எடுத்து ஹனிமேனிடம் கொடுத்தான். "இது அந்த முரடன் இருக்கும் அறையின் சாவி" என்றான். ஹனிமேன் அதையும் இன்ஸ்பெக்டரிடம் ஒப்படைத்து விட்டான்.

அடுத்த அரை மணியில், ஹனிமேனும், சேரனும் போலீஸ் கமிஷனா அலுவலகத்தில் இருந்தனர். போலீஸ் கமிஷனர் கதைகள் எழுதும் எழுத்தாளரும்கூட! அவரே இப்போது ஹனிமேன் கூறிய சேரனின் கதையை வியப்போடு கேட்டுக் கொண்டிருந்தார்.

ஹனிமேன் ஒருவாறு அனைத்தையும் சொல்லி முடித்தார். கேட்ட போலீஸ் கமிஷனர் உடல் சிலிர்க்க, உள்ளம் சிலிர்க்க, "சேரா! உன் சென்னைப் பயணம், சேரன் செங்குட்டுவனின் இமயப் பயணம் போல வரலாற்றில் நிலைக்கப் போகிறது. உனக்கு என் பாராட்டுக்கள்!" என்றபடி கையை நீட்டினார். சேரன் நாணத்துடன் கையைக் குலுக்கினான்.

"சேரனின் நாயைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும். இப்போது மாலை ஆகிவிட்டது. நாங்கள் போனால் நாய்களைப் பிடித்து வைக்கும் இடத்திலிருந்து மீட்க முடியாமல் போகலாம். மறுநாள் காலை வரச் சொல்லித் திருப்பி அனுப்பி விடுவார்கள். அதனால், உங்கள் உதவியை நாடி வந்திருக்கிறோம். நாயைக் கண்டுபிடிக்க வேண்டும். மைக்ரோ பிலிம் எடுத்து டெவ



லப் செய்து பார்க்க வேண்டும். அதில் உள்ள பெயர்களை அறிந்து நீங்கள் தக்க நடவடிக்கை எடுத்து நாளை நடக்கப் போகும் கொலையைத் தடுத்து நிறுத்த வேண்டும்.''

ஹனிமேன் சொன்ன கொலை என்னும் வார்த்தை கமிஷனரின் இதயத்தில் ஓங்கி அடித்தது போல இருந்தது. அவர் துடித்தார். உடனே துடிப்போடு செயல்பட்டார். நாய்களைப் பிடித்து வைக்கும் நிலையத்தோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டார். அன்று பிடித்த நாய்களில் காக்கர்ஸ் ஸ்பானியல் ஒன்று உண்டா என்று கேட்டார். மறுமுனையில்வந்தபதிலைசுமார்மூன்று நிமிடம் 'உம்' போட்டவாறு கேட்டார். பிறகு, ரிசீவரின் வாய்ப் பகுதியைக் கையால் மூடிக்கொண்டு எதிரே இருந்தவர்களைப் பார்த்துப் பேசினார்.

''காக்கர்ஸ் ஸ்பானியல் ஒன்று இருக்கிறது. சுமார் அரை மணி நேரமாய் ஒருவன், அங்கு வந்து அந்த நாய் இல்லாமல் என் குழந்தை சாப்பிடாது, இப்பவே அதைக் கொடுங்கள் என்கிறானாம். இருநூறு ரூபாய் லஞ்சம் கொடுக்கவும் முன் வருகிறானாம்.''

கமிஷனர் சொன்னதும், ''கமிஷனர் சார்! அந்த ஆசாமி ஜாக்கியாகத்தான் இருக்கணும்! அவன் தான் மைக்ரோ பிலிமை என்னிடமிருந்து பறிக்க ஊட்டியிலிருந்து விரட்டிக் கொண்டு வருகிறவன். மைக்ரோ பிலிம் நாயிடம் இருக்கிறதுன்னு சொன்னதும்,நாயைத்தேடிப்புறப்பட்டான். எப்படியோ மோப்பம் பிடிச்சு சரியான இடத்துக்கு வந்துட்டான்'' என்றான், சேரன்.

சேரனின் யூகம் முற்றிலும் சரி. இரண்டு பேருடன் புறப்பட்டுப் பேருந்து நிலையத்தை அடைந்த ஜாக்கி, பலரிடம் விசாரணை செய்து, அழகான ஒரு நாயை நாய் வண்டி பிடித்துக் கொண்டு போனதை அறிந்தான். நாய் இருக்கும் இடத்தை அடைந்த போது, மாலை ஆகி விட்டது. அலுவலகத்தில் ஒரு அதிகாரியும் காவலுக்கு இரண்டு பேரும் இருந்தனர். அந்த அதிகாரியிடம்தன்மகன்நாயில்லாமல் சாப்பிட மாட்டான் என்று கூறி முதலில் நூறு ரூபாய் நோட்டை நீட்டினான். பிறகு இன்னொரு நோட்டை நீட்டினான். அதிகாரி அதை வாங்கவில்லை. காரணம், லஞ்சம் வாங்க விரும்பாதநேர்மையாளர்அவர் என்று நினைத்துவிட வேண்டாம். லஞ்சத் தொகையை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தவே வாங்கவில்லை.

அதிகாரி வெளிக் கதவுக்கு அருகே வந்து, அங்கு காவலாளியால் தடுத்து நிறுத்தப்பட்ட ஜாக்கியிடம் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போது, கொஞ்ச தூரத்தில் இருந்த அலுவலக அறையிலிருந்த தொலைபேசி ஒலித்தது. 'இதோ வருகிறேன்!' என்று கூறிவிட்டு வந்து, தொலைபேசியை எடுத்தவர், போலீஸ் கமிஷனரே பேசுவதைக் கேட்டு நடுங்கி நடந்ததைக் கூறிவிட்டார்.

மறுமுனையிலிருந்த போலீஸ் கமிஷனர், ''நாயைக் கேட்ட ஆசாமியை அங்கேயே நிறுத்தி வை. நான் ஆட்களை அனுப்புகிறேன்'' என்று கூறினார்.

போலீஸ் கமிஷனர் அறை உடனே சுறுசுறுப்பு அடைந்தது. துணைக் கமிஷனர் வரவழைக்கப்பட்டார். அவரே போதுமான காவலர்களுடன் சென்று நாயைக் கேட்டவனையும் அவனுடன் இருப்பவனையும் கைது செய்ய வேண்டும் என்றும், காக்கர்ஸ் ஸ்பானியல் நாயை இங்கே கொண்டு வர வேண்டும் என்றும், ஆணை பிறப்பித்தார்.

இரவு எட்டு மணி.

கமிஷனர் அறைக்குள் 'லொள், லொள்' என்று குரைத்துக் கொண்டே பாய்ந்த டாலரைச் சேரன் கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்தான்! டாலரும் அவன் உடம்பை நாக்கினால் ஈரப்படுத்தியது! ஈரம் என்பதற்கு அன்பு என்று ஒரு பொருள் இருப்பதைத் தமிழ் அகராதியைப் புரட்டிப் பார்த்துப் புரிந்து கொள்ளலாம்.

பத்து நிமிடம்!

நாயும், சேரனும் 'பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?' என்னும் பிரிய நிலையில் இருந்தனர்.

ஹனிமேன்தான் முதலில் பேசினான்.,

''சேரா! விடிந்தால் நவம்பர் ஞாலு! அதனால் மைக்ரோபிலிம் எவ்வளவு சீக்கிரம் எடுக்க முடியுமோ, அவ்வளவு நல்லது!''

சேரன் தன்னிலைக்குத்திரும்பினான். "இதோ, ஒரு நொடியில் பிலிமைத் தருகிறேன்," என்றபடி டாலரின் எதிரே மண்டியிட்டு உட்கார்ந்தான். அறைக்குள் இருந்த கமிஷனர், துணைக் கமிஷனர், ஹனிமேன் ஆகிய மூவருடைய ஆறு கண்களும் நாயிடமே பதிந்திருந்தன.

சேரன் நெஞ்சம் ஒரு கணம், 'நாம் வைத்த இடத்தில் மைக்ரோ பிலிம் இல்லாமல் போனால் என்ன செய்வது?' என்று நினைத்தது. மறுகணம், அவன் காதுகளே அவனுடைய இதயத் துடிப்பைத் தெளிவாகக் கேட்டன.

சேரனின் வலக்கை டாலரின் கழுத்தில் படிந்தது. மற்றொரு கை, தரையைத் தொடுவது போல நீண்டு தொங்கும் டாலரின் இடக்காதை மேலே உயர்த்தியது. சேரனின் வலக்கை காதுகளின் கீழிடத்தை மெல்லத் தடவியது. அங்கே ஒரு ஸ்டிக்கர் இருந்தது. சேரன் அந்த ஸ்டிக்கரை மெல்ல இழுத்தான். டாலர் சிணுங்குவது போலக் குரல் எழுப்ப, சேரன் பட்டென்று ஸ்டிக்கரை இழுத்தான். ஸ்டிக்கர் கைக்கு வந்து விட்டது. அந்த ஸ்டிக்கரிலேயே, தேனீ அவனிடம் கொடுத்த எக்ளேர் சாக்லேட் அளவிலான சில் செய்யப்பட்ட மைக்ரோ பிலிம் இருந்தது!

தேனீ மைக்ரோ பிலிமைத் தன்னிடம் கொடுத்ததை, நாட்டுவிரோதக் கூட்டத்தார் பார்த்து விட்டனர். அதனால் அவர்கள் தன்னைப் பின்பற்றி வந்து பிடிக்க முயலலாம். ஒருவேளை தான் பிடிபட்டாலும், இந்த பிலிம் அவர்களிடம் சிக்கக் கூடாது. இதற்கு என்ன வழி என்று யோசித்த போது டாலர் நினைவு வந்தது. டாலரைக் கொண்டு வந்து, அதன் இடக்காதின் கீழே ஒரு சதுர அங்குலப் பரப்பு முடியை பிளேடால் மழித்து, அங்கே பிலிமை வைத்து ஸ்டிக்கரில் ஒட்டி, முடியை அதன்மேல் படரச் செய்து, காதைத் தொங்க விட்டான், சேரன். டாலரின் இடக்காதைப் பிடித்துப் பார்த்தாலும், ஸ்டிக்கர் ஒட்டியிருப்பது தெரியாது. சேரனின் தந்திரம் பயன் அளித்துவிட்டது. பிலிம் அவனிடம் இருந்திருந்தால், அது பல மணி



என்ன காரணம்

"என்ன இது! அவரைக் காய்க்குக் கூட எறும்பு வருதே!"

"அது வெறும் அவரைக் காயா, என்ன? சீனி அவரைக்காய் ஆச்சே!"

— சிவசக்தி

நேரத்துக்கு முன்னரே ஜாக்கியிடம் சிக்கியிருக்கும் அல்லவா?

மைக்ரோ பிலிமை வாங்கக் கமிஷனர் கையை நீட்டினார்.

"சாரி சார்! இதை ஓ. பி. யூ.வின் தமிழ்நாட்டுத் தலைவரிடம் தர வேண்டும் என்பது தேனீ எனக்கு இட்ட கட்டளை" என்று கூறிய சேரன், அதை ஹனிமேனிடம் கொடுத்தான். "தேனீ! உங்களுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றி விட்டேன்." என்று கூறிக் கொண்டே கையெடுத்துக் கும்பிட்டான். தேனீயின் ஆன்மா அப்போது அந்த அறைக்கு வந்திருக்கும் என்று அவன் நம்பியிருப்பானோ?

ஹனிமேன், தான் பெற்ற பிலிமைக் கமிஷனரிடம் கொடுத்தான்., அவர் அதைத் துணைக் கமிஷனரிடம் கொடுத்தார்.

"எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக இந்த பிலிமில் இருக்கிற விவரங்கள் இங்கே வர வேண்டும். இந்த பிலிமில் பெயர்ப் பட்டியல்கள் இருக்கின்றன. பட்டியலில் உள்ள அத்தனை பேரையும் இரவோடு இரவாகக் கைது செய்ய வேண்டும். அதனால் நம் அலுவலகம் இரவு முழுவதும் வேலை செய்ய வேண்டும். போதுமான காவல் படையும் ஆயத்த நிலையில் இருக்க வேண்டும்."

கமிஷனர் ஆணையிட்டவுடனே, 'யெஸ் சார்' என்று வேகமான பதிலும், அதைவிட வேகமான சல்யூட்டும் துணைக்கமிஷனரிடமிருந்து வழக்கமாக வரும். அப்போது இரண்டுமே வரவில்லை.

(தொடரும்)

# கேளுங்கள்; சொல்லுகிறோம்

* எடிசன் கண்டுபிடித்த ஒலிப்பதிவு செய்யும் கருவிக்கு போனோகிராப் என்று பெயரா? கிராமபோன் என்று பெயரா?

—எஸ். குணாளன், மதுரை—2.



போனோகிராப் என்றாலே 'ஒலியைப் பதிவு செய்தல்' என்றுதான் அர்த்தம். இந்தப் பெயரைத்தான் எடிசன் அதற்கு வைத்தார். பிறகு, அதிலே சில மாற்றங்களைச் செய்தார் பெர்லினர் என்பவர். அவர் வைத்த பெயர் தான் கிராமபோன்.

* முஸ்லிம்களுக்கு மக்கா மதீனாவுக்கு அடுத்த புனித இடமாக விளங்குவது ஜெருசலம் என்று ஜூன் 85 கோகுலத்தில் கூறினீர்களே, ஜெருசலம் கிறிஸ்தவர்களுக்குத்தானே புனிதமான இடம்?

—ப. வைஜயந்தி, ஸ்ரீரங்கம்.

ஜெருசலம் கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல; முஸ்லிம்கள், யூதர்கள் மூவருக்குமே புண்ணியத்தலமாக விளங்குகிறது. பண்டைக் காலத்தில் யூதர்கள் தங்கள் கோயிலைக் கட்டியதால் இது அவர்களுக்குப் புனித இடம். கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்த இடமாதலால், இது கிறிஸ்தவர்களுக்குப் புனித இடம். புகழ் பெற்ற உமர் மசூதி இங்கு கட்டப்பட்டிருப்பதால் முஸ்லிம்களுக்கு இது புனித இடம்.

* பகலில் ஈக்களைக் காண முடிகிறது. ஆனால் இரவில் காண முடியவில்லையே! அவை எங்கு தங்குகின்றன?

—பா. ஆனந்தகுமார், துங்கை அணை.

ஈக்கு இரவில் கண் தெரியாது. ஆகையால், அது நிம்மதியாக ஒரு மூலையில் உட்கார்ந்து உறங்கும். இரவிலே, அது உறங்கும் இடத்துக்கு ஆபத்து வந்துவிட்டால், அது குருட்டுத்தனமாக அங்குமிங்கும் பறக்கும். அப்படி இரவில் பறக்கும் ஈயைக் 'குருட்டு ஈ' என்பார்கள்.

* நம் தமிழக முதல்வரான புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் சினிமாத் துறையிலிருந்து வந்தவர்தானே, அப்படியிருந்தும் எங்களுக்கென்று தமிழில் ஒரு சினிமாக் கூட வரவில்லையே!

—கே. சூரியமூர்த்தி, மேலூர்.



தமிழகத்தில் லட்சக்கணக்கான குழந்தைகளுக்குச் சத்துணவு அளித்துவரும் அருமையான திட்டத்தைக் கொண்டு வந்த நம் முதல்வர், குழந்தைகளின் கலையை வளர்க்கவும், பொது அறிவை வளர்க்கவும் விரைவிலே தக்க நடவடிக்கை எடுப்பார் என்றே நம்புகிறோம். நம் தேசத்திலுள்ள பல மாநிலங்கள் குழந்தைகளுக்கான திரைப்படங்கள் எடுக்கின்றன. குழந்தை நாடகங்களுக்கு ஊக்கமளிக்கின்றன. குழந்தைகளுக்கான பொது அரங்கங்களை நிறுவியுள்ளன. கதை, கட்டுரை, கவிதை, அறிவியல் புத்தகங்களை அழகாகவும், மலிவாகவும் வெளியிட சிறுவர் புத்தக டிரஸ்ட் போன்ற நிறுவனங்களை அமைத்துள்

ளன. அவற்றையெல்லாம் பார்க்கும் போது, நம் தமிழ்க் குழந்தைகளுக்கும் இத்தகைய அதிர்ஷ்டம் விரைவில் கிடைக்காதா என்ற ஏக்கமே ஏற்படுகிறது.

* பள்ளிகளில் மாணவர்களுக்கு யூனிபாரம் இருப்பது நல்லதுதானா?

—எஸ். பி. ஸ்ரீதர், கும்பகோணம்.

நல்லதுதான். அநேகமாக உடையைப் பார்த்துத்தானே ஏழை பணக்காரர் என்று தெரிந்து கொள்கிறார்கள்? எல்லோரும் ஒரே மாதிரிச் சீருடை அணிந்து கொண்டால், இந்த வேற்றுமை தெரியாதல்லவா? ஆனால், இந்தச் சீருடையிலும் சிலர் பட்டு உடைகளையும் பாலியஸ்டர் உடைகளையும் அணிந்து பணக்காரர் என்று காட்டிக் கொள்ளுகிறார்களே! அது நல்லதல்ல.

* கருங்கடல், செங்கடல் என்றெல்லாம் படிக்கிறோமே, எதனால் அப்பெயர்கள் வந்தன?

—பி. சரஸ்வதி, பேராவூரணி

கருங்கடல் உள்ள பிரதேசத்தில் குளிர் காலத்தில் எங்கு பார்த்தாலும் மூடுபனி இருக்கும். அப்போது நீர் கருமையாகத் தோன்றுவதால், கருங்கடல் என்று இதை அழைக்கின்றனர்.

ஆல்கா என்ற சிவப்பு நிறத் தாவரம் கடலில் நிறைய வளர்ந்து இருப்பதால் நீர் சிவப்பு நிறமாகத் தோன்றும். அதனால், இதை செங்கடல் என்று அழைக்கின்றனர்.

* கரும்புச் சாறு பழுப்பு நிறமாகத்தானே இருக்கிறது. அதிலிருந்து எப்படி வெள்ளை வெளேரென்ற சர்க்கரை கிடைக்கிறது?

—ஆர். லலிதா, கருங்குழி



கரும்புச் சாற்றைக் கொப்பரைகளில் ஊற்றிக் காய்ச்சினால், வெல்லம் அல்லது பழுப்புச் சர்க்கரைதான் கிடைக்கும். அதைத் திரும்பவும் காய்ச்சி சுத்தம் செய்தால் வெள்ளைச் சர்க்கரை கிடைக்கும்

* குழந்தைகளுக்கான அறிவியல் சம்பந்தப்பட்ட நூல்களைத் தமிழில் அதிகமாக எழுதியவர் யார்?

—அ. நடராஜன், அண்ணாமலைநகர்.



என். கே. வேலன் என்பவர்தான் ஏராளமான அறிவியல் நூல்களைத் தமிழிலே தந்திருக்கிறார். அவர் தற்போது இல்லை. அவர் எழுதிய பல புத்தகங்கள் மத்திய அரசு, தமிழக அரசுப் பரிசுகளைப் பெற்றிருக்கின்றன.

* தஞ்சாவூரிலுள்ள பிரகதீஸ்வரர் கோயில் கோபுரம், டில்லியிலுள்ள குதுப்மினார்—இந்த இரண்டில் எது அதிக உயரமானது?

—பி. பழனியப்பன், சென்னை—40.

பிரகதீஸ்வரர் கோபுரத்தின் உயரம் 216 அடி. குதுப்மினாரின் உயரம் 288 அடி. எது அதிக உயரம் என்பது தெரிகிறதல்லவா?

* காந்தித் தாத்தா பிறந்த அக்டோபர் 2-ல் பிறந்த குழந்தைகளின் புகைப்படங்களை வெளியிட்டு அறிமுகப்படுத்தினீர்களே, அதே போல் காந்தித் தாத்தா பிறந்த அக்டோபர் மாதம் பிறந்த பெரியவர்களின் பெயர்களைக் கூறுவீர்களா?

—மு. செண்பகம், திருப்பாதிரிப்புலியூர்.

தெரிந்தவரை கூறுகிறோம்: லால் பகதூர் சாஸ்திரி, சர்தார் படேல், திருப்பூர் குமரன், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், மாயூரம் வேதநாயகம் பிள்ளை.

* முற்காலத்தில் வாழ்ந்த தமிழர்கள் எலி மயிரினால் கூடத் துணி நெய்தார்களாமே, ஏன் இப்போது நெய்வதில்லை?

—சி. விஜயா, முதுகுளத்தூர்.


இப்போதும் நெய்யலாம், 2400 கோடி எலிகள் இந்தியாவில் இருப்பதால்! ஆனால் பல வகையிலே துணிகளும், அவற்றைத் தயாரிக்க நவீன கருவிகளும் வந்துவிட்டதால், எலி மயிரில் துணி நெய்வது நாளடைவில் மறைந்து விட்டது; நாமும் மறந்துவிட்டோம்.

* ரஷ்யாதான் உலகிலேயே மிகப் பெரிய குடியரசு நாடு என்கிறார்கள். அப்படியானால்,

மிகச் சிறிய குடியரசு நாடு எது?
—வி. சர்வோத்தமன், திருச்சி—2.

இத்தாலி தேசத்தில் உள்ள சான் மாரினோ என்ற நாடுதான் மிகச் சிறிய குடியரசு நாடு. சுமார் 90 சதுர கிலோமீட்டர் பரப்பளவுள்ள இந்நாட்டில் வசிப்பவர் தொகை கிட்டத்தட்ட 15000.

* சார்லஸ் டார்வின் எங்கே, எப்பொழுது பிறந்தார்?
—ப. இராஜேஷ், நெய்வேலி.



இங்கிலாந்திலுள்ள ஷ்ரூஸ்பரி என்ற ஊரில் 1809—ல் பிறந்தார்.

* டாக்டர் ஹரிகோவிந்த குரானா எதற்காக நோபெல் பரிசு வாங்கினார்?
—ந. பொன்ராஜ், கமுதி.

'மருத்துவமும் உடலியலும்' என்ற துறையில் மருத்துவத்துக்கான நோபெல் பரிசை 1968—ல் பெற்றார்.

* உலக அதிசயங்கள் ஏழு என்றும் அவைகளில் சில அழிந்து விட்டன என்றும் படித்தேன். எத்தனை இன்னும் அழியாமல் இருக்கின்றன?
—ப. சேதுராமன், திருவள்ளூர்.




ஏழிலே ஆறு அழிந்து விட்டன. ஒன்றே ஒன்று மட்டும் — அதாவது எகிப்து நாட்டிலுள்ள பிரமீடுகள் மட்டுமே அழியாமல் இருக்கின்றன.

* கடிகாரங்களைக் கண்டுபிடித்தவர் யார்?
—எஸ். ரமேஷ், நாகூர்

குறிப்பிட்டு ஒருவரைக் கூற முடியவில்லை. 13—ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சுக்காரர்கள் கண்டுபிடித்ததாக வரலாறு கூறுகிறது.

* குதிரை நின்று கொண்டே தூங்கும் என்கிறார்களே, உண்மையா?
—கு. நல்லசிவம், திருநெல்வேலி—2.



குதிரையுடன் யானை, ஒட்டகச்சிவிங்கி இரண்டையும் சேர்த்துக் கொள்ளலாம்.

* நம் மூளையின் எடை என்ன?
—ராஜு நவி, புதுவை—1

ஒரு மனிதனுடைய மூளை அவன் உடம்பின் எடையில் 40—ல் ஒரு பாகம் இருக்குமாம். ஆனால், மூளையின் எடையை வைத்து அறிவை எடை போட்டு விடக் கூடாது! பெரிய அறிஞர்களில் சிலரின் மூளைகள் சிறியவையாகவும், சில முட்டாள்களின் மூளைகள் பெரியவையாகவும் இருந்தன என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

* இக்காலத்துக் குழந்தைகளுக்கு அறிவு அதிகம் என்கிறேன் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?
—பெ. நாகலிங்கம், கரூர்.

மனதார ஒப்புக் கொள்கிறோம். ஆனால், 'அறிவு பெருகி, நெஞ்சம் குறுகி விடக் கூடாதே. அதுவும் விரிவடைய வேண்டுமே என்பதுதான் நம் கவலை.

* முன்னாள் ஜனாதிபதி இராஜேந்திரபிரசாத் எத்தனை ஆண்டுகள் பதவி வகித்தார்?
—உ. செந்தில்நாதன், எடையூர்.



1950 முதல் 1962 வரை.

# பிருந்தாவனக் கவியரங்கம்



## பாண்டியன் பெற்ற முட்டை!

கோழி ஒன்று வாங்கியே
கோபி நன்கு வளர்த்தனன்.
கோழி போட்ட முட்டையைக்
கோபி உடைத்துக் குடித்தனன்.

வாத்து ஒன்று வாங்கியே
வரதன் நன்கு வளர்த்தனன்
வாத்து போட்ட முட்டையை
வரதன் அவித்துத் தின்றனன்.

பாட நூல்கள் வாங்கியும்
பாண்டி படிக்க வில்லையே!
தேர்வில் கிடைத்த முட்டையை
தினமும் பார்த்து அழுதனன்.

— இ. பழனிவேலன் (9251)
முத்துராமலிங்கபுரம்.

## காவியம் ஓவியம்

வையகம் புகழும் ராணி — அவள்
வான வீதியில் வலம்வந்தாள்;

நட்சத் திரமாம் தோழிகள் — சூழ
நாளும் அவளோ நடைபயில்வாள்;

மக்கள் அனைவரும் மகிழ்ந்திடவே — அவள்
மங்கல வீதியில் உலாவந்தாள்;

ஏழை எளியவர் இன்புறவே — நன்கு
எழில்மிகு காட்சியை அவள்தந்தாள்;

கைபுனைந் தியற்றாக் காவியமாம் — அவள்
காட்சியோ உலகின் ஓவியமாம்!

—ல. ஆனந்தி (1416)
பொள்ளாச்சி.





## இன்பம்

சோலை அருகில் துள்ளி ஓடும்
மானைக் காணல் இன்பமே!

சோலை அருகில் ஓடும் நதியில்
மீனைக் காணல் இன்பமே!

சோலை மேலே அமர்ந்த குயிலின்
கீதம் கேட்டல் இன்பமே!

கீதம் கேட்டு ஆடும் மயிலைக்
காணக் காண இன்பமே!

இவற்றை விடவே சிறந்த இன்பம்
இல்லை, இல்லை, இல்லையே!

—எஸ். கோபால கிருஷ்ணன், (7692)
பழமார்நேரி.

## கணேசன் கண்ட மாங்கன்று

கருப்பன் மைந்தன் கணேசன்
கணக்கில் ஏழு எடுத்தனன்.

கோபம் கொண்ட தந்தையோ
கொல்லைப் புறத்தில் தள்ளினார்.

விழுந்த மைந்தன் பார்த்தது
விளைந்த மாவின் கன்றினை.

மாவின் கன்றைப் பார்த்ததும்
மனத்தில் நினைவு பிறந்தது.

அழுகல் பழம் ஒன்றினை
அன்று வெறுத்து வீசினேன்.

இன்று நன்றாய் முளைத்துமே
எதிரில் கன்றாய் நிற்குதே!

இதனை எண்ணிப் பார்த்தவன்
எழுந்து நின்றான் வேகமாய்.

விளையும் காலம் போலவே
விதைப்ப தற்கும் காலமாம்.

ஆடிப் பட்டம் விதைத்திடில்
அறுவ டையில் அளக்கலாம்.

இளமைக் காலம் கற்றிடின்
இன்பம் பெறலாம் வாழ்விலே!

என்றே எண்ணி அவனுமே
எழுந்து தந்தை யிடத்திலே,
"நானும் பள்ளி செல்லுவேன்
நன்கு கற்று வெல்லுவேன்"

என்று சொன்னான். அவனையே
இழுத்து அணைத்தார் தந்தையே!

— இரா. சரவணன் (3403),
தாழையூத்து.





## சென்னைக்குச் சென்றோம்

கோடை விடுமுறை அண்ணனுடன்
கொளுத்தும் வெயிலைப் பாராமல்
கூடச் சென்றேன் சென்னைக்கே
கும்மாள மிட்டது என்மனமே.

அடையாறு ஆல மரம்கண்டோம்
அடடா! பெரிதும் வியப்புற்றோம்!
நடந்தே மெரினாக் கடற்கரையில்
நல்லோர் சிலைகள் கண்டோமே!

வள்ளுவர் கோட்டம், வடபழனி
மகிழ்வுடன் அஷ்டலட்சுமியை
உள்ளம் உருக வணங்கிவந்தோம்
உயர்வாம் கல்வி வேண்டிநின்றோம்.

பாம்புப் பண்ணையில் பலவிதமாம்
பாம்புகள் கண்டே மகிழ்ந்தோமே.
சிறுவர் பூங்கா தனில்கண்டோம்
சிறிய முயல்கள் மான்களையே

அருங்காட் சியகம் அதனுள்ளே
அழகிய கலைப்பொருள் பழஞ்சிலைகள்,
பெரிய உயிரின உடல்கண்டோம்
பெருமைப் பட்டே மகிழ்ந்தோமே!


பதினாறு மாடிக் கட்டிடமும்
பற்பல ஆலைகள், வாகனங்கள்
எதிலும் வளர்நம் தலைநகரம்
இனிதுடன் கண்டே இன்புற்றோம்!

—கொ. மா. கோ. இளங்கோ (3017)
இராஜபாளையம்.

அட்டைப்படத்திலுள்ள புலி
அடுத்த இதழில்
தன் கதையைக் கூறுகிறது!





கம்ஸ வதம் முடிந்தது: அவனது மனைவியர் இருவரும் தங்கள் தந்தை மகத மன்னன் ஜராசந்தனிடம் முறையிட்டார்கள். மாவீரனான அவன்...
என் மருமகனைக் கொன்ற கிருஷ்ணனையும் யாதவ வம்சத்தையும் பூண்டோடு அழிப்பேன்!
ஜராசந்தன்
கதை: ஆனந்தி
படம்: விநு
சபதத்தை நிறைவேற்ற தன் படைகளுடன் சென்று மதுரா நகரைச் சூழ்ந்து கொண்டான் ஜராசந்தன்.
கண்ணனும் பலராமனும் ஆலோசனை நடத்தினர்...
அண்ணா! ஜராசந்தனுடைய படைகளை நிர்மூலம் செய்ய வேண்டும். அதற்கு...
கிருஷ்ணர் சொல்லி முடிவதற்குள் ஆகாயத்திலிருந்து இரண்டு திவ்ய ரதங்கள் இறங்கின.


முதலில் கண்ணன் போர் புரியக் கோட்டையை விட்டு வெளியேறி பாஞ்சஜன்யத்தை முழங்க ஜராசந்தனே...
மாமனையே கொன்ற பாவியுடன் நான் போர் புரிய மாட்டேன்!
கோட்டைக்குள் திரும்பிய கிருஷ்ணர் பலராமனை அனுப்பினார்.
நீங்கள் தான் அண்ணா தேவ ரதத்தில் ஏறி யுத்தம் செய்து வெற்றி வாகை சூட வேண்டும்!
பலராமன் - ஜராசந்தன் யுத்தம். மதுரா நகர மக்கள் கோட்டைச் சுவர் மீது நின்று பார்த்தபோது...
உக்கிரமான யுத்தம்.
ஒரே புழுதிப் படலம். யாரையும் தெரியலையே!
ஜராசந்தனுடைய பெரும் படையைப் பலராமன் தலைமையில் ஒரு சிறு படை எதிர்த்து அழித்தது...
சாரதியை இழந்து தேரிலிருந்து விழுந்தான் ஜராசந்தன். பலராமன் அவனைக் கொல்லப் போன போது கண்ணன் தோன்றி...
அண்ணா! வேண்டாம் விட்டு விடுவோம். திரும்பிப் போகட்டும்!


மகத ராஜ்யம் திரும்பிய ஜராசந்தன்...
சீ என்ன அவமானம்! இரு வாலிபர்கள் எனது மாபெரும் படையை அழித்து விட்டனரே!
அரசே! விதிவிளையாடிவிட்டது. தங்கள் வீரத்தில் பிழையில்லை.
நீங்கள் மறுபடி படை திரட்டுங்கள். நான் தவமிருந்து புதிய பலம் பெற்று வருகிறேன்.
இவ்வாறு பதினேழு முறை மதுரா நகரை முற்றுகையிட்டுத் தோற்றான் ஜராசந்தன். பதினெட்டாம் முறை படை திரட்டி வந்த போது...
காலயவனரு?.. வணக்கம்!
காலயவனன் மார்தட்டினான்...
உங்கள் தோல்வியை வெற்றியாக்கித் தரப் படையுடன் வந்திருக்கிறேன். யாதவர்கள் எனக்கும் எதிரிகள்..


நாம் இருவருமாகச் சேர்ந்து யாதவர்களைப் பூண்டோடு அழித்து விடலாம்!
மதுரா நகரை காலயவனனின் வீரர்களான மூன்று கோடி காட்டு மிராண்டிகள் சூழ்ந்தனர்.
கோட்டையின் உள்ளே கவலையோடு பலராமன்...
தம்பி! காலயவனன் என்ற பெயரைக் கேட்டதுமே நமது மக்கள் அனைவரும் நடுங்குகிறார்களே....
அதில் அதிசயமில்லை. கார்க்ய மகரிஷி கடுந் தவம் செய்து பெற்ற பிள்ளை காலயவனன். அவனை ஜெயிக்கவே முடியாது...!
இந்த இக்கட்டில் தப்ப வழி?
கடல் சூழ்ந்த ஒரு நகரத்தை உருவாக்கி மாயையால் யாதவர்களை அங்கே குடியேற்றுவோம்!
தேவலோகச் சிற்பி விசுவகர்மாவை அழைத்தார் கிருஷ்ணர்.
யாராலும் வெல்ல முடியாத ஒரு நகரத்தைக் கடலினிடையே கட்டி முடிக்க வேண்டும்.
அப்படியே ஆகட்டும்.



மேற்குக் கடலில் ஒரு அழகிய நகரம் எழும்பியது. உயர்ந்த கோபுரங்கள், தங்கக் கலசங்கள், அகன்ற சாலைகள், பூந்தோட்டங்கள்........
இந்திரன் சுதர்மா என்ற பெரிய மண்டபத்தை அளித்தான்; வருணன் அற்புதமான குதிரைகளைக் கொடுத்தான்; குபேரன் செல்வத்தைப் பொழிந்தான்.
சிறப்புமிக்க துவாரகையில் அத்தனை யாதவர்களையும் மாயையால் குடியேற்றினார் கிருஷ்ணர். பின்னர் மதுராபுரி வாசலில் காலயவனன் காண வந்து நின்றார். பொழுது விடிந்தது.....
கண்ணன் ஏன் கோட்டை வாசலில் தனியாக நிற்கிறான்...? சரணாகதி அடையப் போகிறானோ?
கண்ணன் தப்பி ஓட முயல்வது போல் நடிக்க...
நில், நில்! கம்சனைக் கொன்றாய்; ஜராசந்தனைத் தோற்கடித்தாய். .. என்னிடம் பயந்து ஓடுகிறாயே!
கண்ணனைப் பின் துரத்திச் சென்றான் காலயவனன்..
பயந்து ஓடும் உன்னைக் கொல்ல மனமே வரவில்லை. .. எதிர்த்துப் போரிட மாட்டாயா?.....



ஒரு பெரிய மலைக் குகைக்குள் புகுந்து மறைந்தார் கண்ணன்.
ஆ! இங்கே சிக்கிவிடுவான் எதிரி!
கண்ணனைத் தொடர்ந்து குகையில் நுழைந்த காலயவனனுக்கு இருட்டில் ஒன்றுமே தெரியவில்லை.
ஊண் உறக்கமின்றி எத்தனை நேரம் தேடுவது?
அட இங்கு ஏதோ இடறுகிறதே! ... யாரோ தூங்குகிறார்கள்...! டேய் கண்ணா... இங்கு ஒளிந்து கொண்டால் ஏமாந்து விடுவேனா... எழுந்து யுத்தம் செய்!
உறங்கியவர் கண் விழித்தெழுந்தார். அவர் கண்ணனில்லை என்று காலயவனன் உணர்வதற்குள், அவர் கண்களிலிருந்து நெருப்புப் பிழம்புகள் தோன்ற...
காலயவனன் பிடி சாம்பலானான்.
ஐயோ தகிக்கிறதே!


பரீட்சித்து மன்னனுக்கு ஸ்ரீமந் நாராயணனின் கதைகளைக் கூறி வந்தார் சுகப்பிரம்ம ரிஷி. காலயவனன் முடிவைக் கேட்டதும்...
சுகப்பிரம்மரே! என்ன அதிசயம்! பிறகு கண்ணனுக் என்ன ஆனான்?..
...காலயவனனைச் சுட்டெரித்தவர் யார்? அவர் ஏன் அந்தக் குகையில் உறங்கிக் கொண்டிருந்தார்? விவரமாகச் சொல்லுங்கள்!
பரீட்சித்து மன்னன் கோரிக்கைக்கு இணங்க கதையைத் தொடர்ந்தார் சுகப்பிரம்ம ரிஷி.
முசுகுந்த சக்கரவர்த்தியை தேவர்கள் உதவிக்கு அழைத்தார்கள்...
முசுகுந்தரே! அசுரர்களோடு நாங்கள் செய்யும் யுத்தத்தில் உதவ வேண்டும்.
ஆகட்டும் என்னாலானதைச் செய்கிறேன்.
இந்திரனுக்குப் பக்க பலமாக நின்று போரிட்டார் முசுகுந்த சக்கரவர்த்தி. ஆனால்...
இந்திரா! அசுரர்களை எவ்வளவு தடவை தோற்கடித்தாலும் மறுபடி புதிய பலத்துடன் வருகிறார்களே!



ஓய்வும் உறக்கமுமின்றி முசுகுந்த சக்கரவர்த்தி நீண்ட நெடுங்காலம் இந்திரனுக்குத் துணை நின்று அசுரர்களோடு போரிட்டார்.
முசுகுந்தரே! சிவபெருமான் மனம் வைத்தால் தான் இந்தப்போருக்கு முடிவு ஏற்படும்.
உரிய நேரத்தில் இந்திரனின் பிரார்த்தனை நிறைவேறியது.
தேவசேனாதிபதி பிறந்து விட்டான்!
சிவகுமாரன் தோன்றி விட்டார்!
இந்திரன் முசுகுந்த சக்கரவர்த்திக்கு நன்றி சொன்னான்.
நண்பரே! எத்தனையோ காலமாக தேவர்களுக்குத் துணை நின்றீர்கள். தேவ சேனாதிபதியான குமரக் கடவுள் அவதரித்து விட்டார். இனி இளைப்பாறுங்கள்.
அப்படியானால் நான் பூவுலகு திரும்பலாமா?
போகலாம் ஆனால்...
ஆனால் என்ன?
வருந்தலாகாது... பூமியில் இங்கே உள்ளதைவிடக் காலம் வெகு வேகமாக ஓடும். இப்போது அங்கு உமக்குத் தெரிந்தவர் யாருமே யில்லை.


நீர் வேண்டும் வரத்தைக் கேளுங்கள்...
யுத்தம் செய்து என் உடல் மிகவும் சோர்ந்திருக்கிறது. பூமியில் எனக்கு வேண்டியவர் யாரும் இல்லையாதலால் மனமும் சோர்ந்து விட்டது. எனவே...
எனக்குத் தூக்கம் ஒன்றுதான் வேண்டும்! என்னைத் தூக்கத்திலிருந்து எழுப்புகிறவன் எரிந்து சாம்பலாக வேண்டும்!
அப்படியே ஆகட்டும்!
முசுகுந்த சக்கரவர்த்தி குகையில் தூங்கத் தொடங்கியது இதனால் தான். காலயவனன் அவர் தூக்கத்தைக் கலைத்துச் சாம்பலானதும் கண்ணன் தோன்றினான்.
பிரபோ! நாராயணா! பாக்கியவானானேன். முசுகுந்தன் நமஸ்கரிக்கிறேன்.
வெகுநேரம் பகவானைத் துதித்து மகிழ்ந்தார் முசுகுந்த சக்கரவர்த்தி. பிறகு...
பிரபோ! தாங்கள் இங்கு வந்த காரணம்? சாம்பலாகிவிட்ட இந்த வீரன் யார்?
அதர்மத்தைப் போக்கி தர்மத்தை நிலைநாட்ட பூமியில் தற்போது கிருஷ்ணனாக அவதரித்திருக்கிறேன். சாம்பலான இவன்....


காலயவனனைப் பற்றிக் கூறினார் கிருஷ்ண பரமாத்மா.
யாதவ வம்சத்தினரின் குரு சியாளர். கார்க்ய முனிவரும் சியாலரும் நண்பர்கள்.
ஒரு நாள் கார்க்ய முனிவர் மனம் புண்படப் பேசி விட்டார் சியாலர்.
நீ பேடித் தன்மை கொண்டவன்!
இதைக் கேட்டு யாதவர்கள் சிரிக்க...
இன்று என்னைப் பரிகசிக்கும் யாதவர்குலமே நாளை பேடி போல் பயந்து நடுங்கும்படி செய்வேன்! சென்று வருகிறேன்!
கார்க்யர் ஒரு மலையை அடைந்து கடுந்தவம் இயற்றினார்.
பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு...
சிவபெருமானே! இரும்பை உண்டு தவம் செய்தேன். யாதவர்கள் கண்டு அஞ்சி நடுங்கும் புதல்வனை அருள்வீராக!
அத்தகைய தவ ஆற்றலும் இந்தப் பழிவாங்கும் உணர்வால் வீணானது. ஆனால் பகவான், கேட்ட வரத்தைத் தானே தரமுடியும்? பிறந்த காலயவனனை யவனேசன் என்ற அரசர் வளர்த்தார்.



காலயவனன் கதையைக் கூறி முடித்தார் கிருஷ்ண பரமாத்மா.
கார்க்யர் பெற்ற வரத்தின் படி காலயவனன் பெயரைக் கேட்டாலே யாதவர்கள் அஞ்சுகிறார்கள். நானும் யாதவன் தானே?...
... அதனால் அவனை என்னாலும் கொல்ல முடியாது. எனவே தான் தந்திரமாக இங்கே உன்னிடம் அழைத்து வந்தேன். நீ பெற்ற வரம் அவனை அழித்தது!
சுவாமி தாங்கள் விதித்தபடியே எல்லாம் நடக்கும். தங்கள் பாதார விந்தத்தை அடைய எனக்கு அருள் புரிய வேண்டும்.
கிருஷ்ணர் மதுரா நகர் திரும்பி, பலராமனுடன் சேர்ந்து காலயவனன் படைகளை அடித்து விரட்டினார்.
அதைக் கண்டு ஜராசந்தன் திகைத்தான்.
காலயவனன் மதுரா பட்டிணத்தை வென்று வாகை சூடுவதைக் காண வந்தால் இப்படி அவன் படையினர் சிதறி ஓடுகின்றனரே!
இன்னும் ஒரு பிறவி எடுத்து என்னையே நினைத்துக் கொண்டிருந்து என்னை வந்து அடைவாய்!
ஜராசந்தனையும் அவன் படைகளையும் பார்த்துப் பயந்து ஓடுவது போலக் கண்ணனும் பலராமனும் பாசாங்கு செய்ய ஜராசந்தன் படை அவர்களைத் துரத்தியது.


பலராமனும் கண்ணனும் பயந்து ஓடுவதாகவே எண்ணிய ஜராசந்தன் வியப்படைந்தான். மதுராபுரிக்குள் நுழைந்தான்.
ஒரே சூன்யமாய் இருக்கிறதே! இதென்ன அதிசயம்?
பிரவர்ஷண என்னும் குன்றின் மீது ஏறி ஓடினார்கள் கண்ணனும், பலராமனும். அங்கு வந்த ஜராசந்தன்...
குன்றைச் சூழ்ந்து கொள்ளுங்கள்! சுற்றிலும் தீ மூட்டுங்கள்!
குன்றைச் சுற்றி மூன்று பக்கம் தீ! நாலாவது பக்கம் கடல். கண்ணனும் பலராமனும் ஒரு பாறை உச்சியிலிருந்து...
கடலில் குதித்து நீந்தித் தப்புவதுதான் சிறந்த வழி!
கண்ணனும் பலராமனும் நீந்திக் கடலைக் கடந்து துவாரகாபுரியை அடைந்தார்கள். மக்கள் மகத்தான வரவேற்பு அளித்தார்கள்.
சுதர்மா என்ற கொலுமண்டபத்தில் கிருஷ்ணன் வீற்றிருக்க தூதன் வந்தான்.
யாரப்பா நீ...?
மகதத்திலிருந்து வருகிறேன்...


ஓ! ஜராசந்தன் அனுப்பினனா?
இல்லை சுவாமி! அவன் சிறைப்படுத்தி வைத்திருக்கும் அரசர்கள் அனுப்பினார்கள்.
என்ன செய்தி?
நூறு அரசர்களின் தலைகளை மாலையாகக் கோத்து சிவபெருமானுக்கு அளிப்பதாக ஜராசந்தன் சபதம் செய்திருக்கிறான்...
...இன்னும் நூறு அரசர்களை ஜராசந்தன் பிடிக்கவில்லை. அதற்குமுன் இப்போது கைதாகி உள்ளவர்களைத் தாங்கள்தான் காப்பாற்றவேண்டும்.
ஆகட்டும் பார்ப்போம்.
கண்ணன் பாண்டவர்களைச் சந்திக்க இந்திரப்பிரஸ்தம் சென்றார். தருமர் வணங்கிக் கூறினார்....
கண்ணா ராஜசூய யாகம் செய்ய உத்தேசம்.
உங்களைத் தடுப்பார் யார்? ஆனால்...


ஆனால் என்ன சுவாமி?
ஜராசந்தன் இடையூறு செய்யக் கூடும். அவனை வென்று விட்டால் கவலை இல்லை....
ஜராசந்தன் கதையைப் பாண்டவர்களுக்குக் கூறினார் கிருஷ்ணர்.
பிருகத்ரதன் என்ற அரசனுக்கு ஒரு முனிவர் ஒரு மாங்கனியை அளித்தார்...
அரசன் தன் இரு மனைவியருக்கும் பழத்தைச் சமமாகப் பங்கிட்டுத் தந்தது தப்பாகப் போய் விட்டது! இருவருக்கும் ஒரே குழந்தை இரு பகுதிகளாகப் பிரிந்து பிறந்தது!
உயிரற்ற இரு உடல் பகுதிகளையும் தூக்கி எறிந்து விட, உணவு தேடி அலைந்த ஜரா என்ற அரக்கி அவற்றைப் பார்த்தாள். இரு பகுதிகளையும் சேர்த்தபோது குழந்தை உயிர் பெற்று விட்டது.
தன்னால் உயிர் பெற்ற குழந்தையை அரசனிடம் ஒப்புவித்தாள் ஜரா.
ஜரா! என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தினாய். குழந்தைக்கு ஜராசந்தன் என்றே பெயர் சூட்டுகிறேன்!


ஜராசந்தன் கதையைக் கூறி முடித்தார் கிருஷ்ணர்.
தருமரே! ஜராசந்தன் பதினாயிரம் யானைபலத்தைப் பெற்றவன். அர்ஜுனனும் பீமனும் நானும் அவனுடன் போர்புரியக் கிளம்புகிறோம்.
தங்கள் சித்தம் எங்கள் பாக்கியம்
ஜராசந்தன் தினமும் பூஜை முடித்து பிராமணர்களுக்குத் தானம் கொடுப்பான்.
புதிதாக இன்று மூன்று பிராமணர்கள் வந்திருக்கிறார்களே....?
ஜராசந்தனுக்கு சந்தேகம் ஏற்பட்ட போதிலும்...
நீங்கள் யாராக இருந்தாலும் சரி, அந்தணர் வேடத்தில் வந்திருப்பதால் எதைக் கேட்டாலும் தருவேன்!
எங்களுக்குப் பொருள் வேண்டாம். எங்களில் ஒருவருடன் நீ மல்யுத்தம் செய்வதையே விரும்பிக் கேட்கிறோம்.
அப்படியே ஆகட்டும். இனி நீங்கள் யார் என்பதைத் தெரியப்படுத்தலாமே!
மூவரும் வேடம் கலைக்க...
சமபலமுள்ளவனை பீமனுடன் யுத்தம் செய்வேன்.


பீமனும் ஜராசந்தனும் நீண்ட நேரம் மல்யுத்தம் செய்தார்கள். பீமன் களைத்துப் போனான். கண்ணனை நோக்கினான்.
கிருஷ்ணர் ஜாடையாக ஒரு புல்லை எடுத்து நீளவாட்டில் கிழித்துப் போட்டார்.
சமிக்ஞையைப் புரிந்து கொண்டு பீமன் ஒரு ஹுங்காரத்தோடு ஜராசந்தனை இரு கூறுகளாகக் கிழித்துத் தலைகால் மாற்றிப் போட்டான். ஜராசந்தன் உடல் இணைய முடியவில்லை.
வெற்றி! வெற்றி!
ஜய விஜயீ பவ!
ஜராசந்தன் சிறைப்படுத்தியிருந்த அரசர்கள் விடுவிக்கப் பட்டனர். தருமர் ராஜசூய யாகம் நடத்தினார்.



# விளையும் பயிர்

கோகுலம்சிறுவர்சங்கஉறுப்பினர் எஸ். மாதவன் (204), வருங்காலத்தில் ஒரு சிறந்த விஞ்ஞானியாக வருவதற்கான அறிகுறிகள் இப்போதே தெரிகின்றன.

மாதவன் புதிதாக ஏதாவது கண்டுபிடிக்க வேண்டும் என்ற துடிப்புள்ளவன். சூரிய கிரகணத்தின் போது, தண்ணீரில் ஓர் இலையைப் போட்டு, அதனுடன் தர்ப்பைப் புல்லையும் போட்டு வைத்தான். மறுநாள் எடுத்துப் பார்த்தான். இலையில் எவ்வித மாற்றமும் தெரியவில்லை! நீரும் சுத்தமாக முன்போலவே இருந்தது!

சமீபத்தில்புதுமுறைத்தையல் ஊசி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளான்.

இந்த இரண்டு ஆராய்ச்சிகளையும் இவன் 'நேஷனல் ரிசர்ச் டெவலப்மென்ட் கார்ப்பரேஷ'னுக்கு அனுப்பினான். அவர்கள் மாதவனின் ஆர்வத்தைப் பாராட்டி, அவற்றை ஆராய்ந்து கொண்டிருப்பதாகத் தகவல் தெரிவித்திருக்கிறார்கள்.

சாரணர் இயக்கத்தில் 1980—ஆம் ஆண்டு முதல் இதுவரை நடந்த பல முகாம்களிலும் (ஹைதராபாத், சென்னை, ஹரித்துவார், போபால், பொன்மலை, டெல்லி, திருச்சி) கலந்து கொண்டான். இத்தனை முகாம்களிலும் கலந்து கொண்ட மாணவன் இவன் ஒருவன்தான்! இந்த முகாம்கள் அனைத்திலும் முதல்நிலைச் சான்றிதழ்கள் பெற்றிருக்கிறான்.

திருச்சி, கைலாசபுரம் பாய்லர் பிளாண்ட் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிச் சாரணப் படை மாணவர்களாகிய இவனும் இவனது நண்பர்களும் ஆசிரியர் திரு. கே. ஜெயகுமார் தலைமையில் டெல்லி சென்று ஜனாதிபதி ஜைல்சிங்கிடம் விருதுகளும் நற்சான்றிதழ்களும் 14.2.85—ல் பெற்று வந்தார்கள்.

முசிறி திரு. ரெங்கராஜன் அவர்களிடம் சங்கீதம் பயின்று மேடையில் பாடியிருக்கிறான்.

கராத்தேயில் கிராண்ட் மாஸ்டர் சௌசூட் (மலேஷியா) அவர்களிடம் 'பர்ப்பிள் பெல்ட்' பெற்றிருக்கிறான்.

இன்டர்நேஷனல் பாஸ் புக்கும் பெற்றிருக்கிறான்.

திருச்சி செயின்ட் ஜோசப் துவக்கப் பள்ளியில் மாணவர் தலைவனாக இருந்த இவன், தற்போது பாய்லர் பிளாண்ட ஆண்கள் உயர்நிலைப் பள்ளியிலும் தலைவனாக (S.P.L) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளான்.

பள்ளியில் நடந்த நாடகங்களில் நடித்துள்ளான். மாவட்ட அளவில் நடந்த ஆங்கிலம், தமிழ்ப்பேச்சுப்போட்டிகளில் கலந்து கொண்டு பல முதற்பரிசுகள் பெற்றிருக்கிறான். 18.2.79—ல் திருச்சியில் நடந்த 'தமிழ் நாடு அறிவியல் கண்காட்சியில் பங்கு கொண்டு நற்சான்றிதழ் பெற்றுள்ளான்.

இவனுக்கு விருப்பமான 'காரம் போர்ட்' விளையாட்டில் மாவட்ட அளவிலும், தமிழ்நாட்டு அளவிலும் பங்கு கொண்டுள்ளான்.

'கோகுலம்' நடத்திய பழமொழிப் போட்டியில் முதல் பரிசு பெற்றுள்ளான்.

இவனுடைய பொழுது போக்குகள்: நூல் நிலையங்களுக்குச் சென்று படிப்பது, கதை, கவிதை, துணுக்குகள் எழுதுவது.




## காட்சி-1

இடம்: வீடு.
பாத்திரங்கள்: பாலு, அம்மா.

பாலு: (மகிழ்ச்சியுடன்) அம்மா, நான் பரீட்சையிலே பாஸ் பண்ணிட்டேன். பிள்ளையாருக்குத் தேங்காய் உடைக்கணும். ரெண்டு ரூபா கொடும்மா...

அம்மா: பாஸ் பண்ணிட்டியா, பாலு! 'ஏழாவதிலே'யிருந்து எட்டாவதா! ம்... ம்... ரொம்ப சந்தோஷம். எல்லாம் விநாயகர் அருள்.

பாலு: நான் பரீட்சையிலே பாஸ் பண்ணிட்டா விநாயகருக்குச் சிதறு தேங்காய் உடைக்கிறதா வேண்டிக்கிட்டேம்மா. பிள்ளையாருக்குத் தேங்காய் உடைக்கணும்.

அம்மா: சரி, உன் இஷ்டப்படியே செய்வோம். இன்னைக்கு புதன்கிழமை தானே? வெள்ளிக்கிழமை கோயிலுக்குப் போவோமில்லே. அன்னைக்கு சிதறு தேங்காய் உடைச்சாப் போச்சு.

பாலு: வெள்ளிக்கிழமையா? இன்னும் ரெண்டு நாள் இருக்கே அம்மா. இன்னைக்கே கொடும்மா. என் கையாலே சிதறு தேங்காய் உடைக்கிறதா வேண்டிக்கிட்டேன்.

அம்மா: ஏண்டா, இப்படிப் பறக்குறே. அப்பா வரட்டும்டா. வாங்கித் தர்றேன்.

பாலு: அப்பா சாயந்திரமில்லே வருவாங்க. உன்கிட்டேதான் பணம் இருக்குமே. கொடும்மா. என் நண்பர்கள் எல்லாம் இந்நேரம் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைச்சிருப்பாங்க. நான்தான் லாஸ்ட்.

அம்மா: சரி சரி. இந்தா ரெண்டு ரூபா. பாலு, நேரா பிள்ளையார் கோயிலுக்குப் போயி தேங்காய் உடைச்சிட்டு 'நல்ல புத்தியைக் கொடு விக்னேஸ்வரா... ஒவ்வொரு வருஷமும் நான் நிறைய மார்க் வாங்கி பாஸ் பண்ணணும்'னு வேண்டிக்கோ.

பாலு: சரிம்மா.

## காட்சி-2

இடம்: வீதி,
பாத்திரங்கள்: பாலு, மோகன்.

(மோகன், வீதியில் பாலுவைப் பார்க்கிறான்.)

மோகன்: டேய் பாலு, எங்கேடா போறே?

பாலு: ஓ! மோகனா? வாடா வா.

மோகன்: எங்கேடா போறேன்னு கேட்டா? என்னை வாடா வான்னு கூப்பிடுறியே. எங்கேடா போறே?

பாலு: பிள்ளையார் கோயிலுக்கு.

மோகன்: பிள்ளையார் கோயிலுக்கா!: என்னடா விசேஷம் இன்னைக்கு?

பாலு: பரீட்சையிலே பாஸ் பண்ணிட்டேன் இல்லே. அதால பிள்ளையாருக்குத் தேங்காய் உடைக்கப் போறேன்.

மோகன்: நான் கூடத்தான் பாஸ் பண்ணிட்டேன்.

பாலு: நீதான் இரண்டாவது வருஷம் ஆச்சே. ம்.. ம்... அப்ப நீயும் கோயிலுக்குத்தான் போறியா?

மோகன்: உம்... ம்...

பாலு: என்னடா, ம். ம்.ன்னு சொல்றே?

மோகன்: பாலு, எங்க அம்மா கிட்டே பிள்ளையாருக்குத் தேங்காய் உடைக்கணும்னு சொல்லி ரெண்டு ரூபா கேட்டேன். கொடுத்தாங்க.

பாலு: நான் கூட எங்க அம்மா கிட்டேதாண்டா ரெண்டு ரூபா வாங்கிட்டு வர்றேன். வாடா பிள்ளையார் கோயிலுக்குப் போகலாம்.

(இருவரும் கோயிலை நோக்கிச் செல்கிறார்கள்.)

மோகன்: பாலு, கோயில் நெருங்க நெருங்க பிள்ளையாருக்குத் தேங்காய் அவசியம் உடைக்கணுமான்னு யோசிக்கறேன்.

பாலு: டேய் மோகன், என்னடா சொல்றே?

மோகன்: பாலு, நாம கஷ்டப் பட்டுப் படிச்சோம். பாஸ் பண்ணினோம்.

பாலு: யாருடா இல்லேன்னு. கஷ்டப்பட்டுப் படிச்சாத்தான் பாஸ் பண்ண முடியும். அதோட பிள்ளையாரோட அருளும் நமக்கு இருந்தது.

மோகன்: நான் ஒவ்வொரு வகுப்பிலேயும் பெயிலாகி... பெயிலாகித் தான் பாஸ் ஆகிறேன்.

பாலு:நீதான்விநாயகரையேஏமாத்தப் பாக்கிறியே. நாம் விநாயகரிடம் வேண்டிக்கிட்டபடி நேர்த்திக் கடனை செலுத்திடணும்.

மோகன்: அட, நீ ஒண்ணு. நாம என்னரொம்பஇதாவாவேண்டிக்கிட்டோம்? நம்பக் கூட படிக்கிற எல்லாப் பசங்களும் தான் பிள்ளையார்கிட்டே, 'விநாயகரே, நான் பரீட்சையிலே பாஸ் பண்ணணும்'னு வேண்டிக்கிட்டாங்க. எல்லாருமா தேங்காய் உடைக்கிறாங்க.

பாலு: அப்படி இல்லே மோகன். வேண்டுதலை, நிறைவேற்றணும். சொன்ன சொல் தவறக் கூடாதுன்னு நம்ப ஆசிரியர் அடிக்கடி சொல்வாரே?

மோகன்: ஆசிரியர் இன்னும் என்ன என்னமோதான் சொல்றாரு.

பாலு: ஆமாடா மோகன். பொய் சொல்லக் கூடாது; பிறரை ஏமாத்தக் கூடாது. நாணயமா நடந்துக்கணும்னு பாடம் சொல்லிக் கொடுக்கும் போதெல்லாம் வலியுறுத்துவார்.

மோகன்: உலகத்துலே உள்ளவங்க எல்லாம் அப்படித்தான் நேர்மையா, நாணயமா நடந்துக்கிறாங்களா?

பாலு: என்ன மோகன், இப்படிப் பேசுறே?

மோகன்: பாலு, இதெல்லாம் பார்த்தா ஒண்ணும் நடக்காது. வாடா ஜாலியா சினிமாவுக்குப் போகலாம்.

பாலு: சினிமாவுக்கா? நான் வரலேடா.

மோகன்: ஏண்டா இப்படிப் பயப் படுறே? உன்கிட்டே ரெண்டு ரூபா இருக்கு. என்கிட்டேயும் ரெண்டு ரூபா இருக்கு. ஜாலியா சினிமாப் பார்க்கிறதை விட்டுட்டு.

பாலு: மோகன், நான் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைக்கிறதாச் சொல்லித்தான் என் அம்மாகிட்டே பணம் கேட்டேன்.

மோகன்: நான் கூடத்தான் என் அம்மாகிட்டே நீ சொன்னது போலச் சொல்லிப்பணம்கேட்டேன்.கொடுத்தாங்க.

பாலு: எதுக்காக பணம் வாங்கினோமோ அதுக்காகத்தான் அதைச் செலவழிக்கணும். கண்டபடி செலவழிக்கக் கூடாது.

மோகன்: டேய் பாலு, பிள்ளையாருக்குத் தேங்காய் உடைக்காட்டி ஒண்ணும்மோசம்இல்லே.எவ்வளோபேரு தினம் தேங்காய் உடைக்கிறாங்க. நீ ஒண்ணும் கவலைப்படாதே. வாடா சினிமாவுக்குப் போகலாம்.

பாலு: நான் வரலேடா. பிள்ளையார் நம்மை நாளைக்குத் தண்டிச்சிடுவார்.

மோகன்: அதெல்லாம் ஒண்ணும் தண்டிக்க மாட்டார். வாடா, சினிமாவுக்குப் போகலாம்னு பிள்ளையார் தண்டிச்சிடுவாராம்.

பாலு: நான் வரலே. யாராவது எங்க அப்பாவுக்குத் தெரிஞ்சவங்க பார்த்துட்டா என் பாடு ஆபத்தாயிடும்.

மோகன்: அப்ப நீ சினிமாவுக்கு வரலே. சரி, அப்ப நாம பாஸ் பண்ணினதை ஸ்வீட் வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டாடலாம். வா, ஹோட்டலுக்குப் போகலாம். இன்னைக்கு ஸ்வீட் காரம் எல்லாம் சாப்பிடலாம்.

பாலு: அதுக்கு முன்னாடி கோயிலுக்குப் போய்...

மோகன்: டேய், என்ன இன்னமும் நீ பிள்ளையாருக்குத் தேங்காய் உடைக்கிறேன்... உடைக்கிறேன்னு சொல்றே. அந்தப் பணத்துலேதாண்டா ஸ்வீட் சாப்பிடணும்.

பாலு: அப்படியெல்லாம் சொல்லாதேடா. அது ரொம்பத் தவறு.

மோகன்: இவன் யார்ரா ஒருத்தன். இப்பத்தான் அந்த ஹோட்டலிலே சேகரும், சங்கரும் பாதாம் அல்வா சாப்பிட்டுவிட்டுவந்தானுங்க. அல்வா ரொம்ப இனிப்பா, ருசியா இருந்ததாம்.

பாலு: ம்... ம்...

மோகன்: அல்வான்னு சொன்னதும் நாக்குலே ஜலம் ஊறுதா... வா, பாலு ஹோட்டலுக்குப் போகலாம்... ம்... ம்!.. வா...

(இருவரும் ஹோட்டலுக்குச் செல்கிறார்கள்.)

# காட்சி-3

இடம்: வீடு.
பாத்திரங்கள்: பாலு, அம்மா.
(பாலு வருகிறான்.)

அம்மா: ஏண்டா பாலு, பிள்ளையார் கோயிலுக்குப் போய்ச் சிதறு தேங்காய் உடைச்சியா?

பாலு: ஓ, உடைச்சிட்டேம்மா.

அம்மா: தேங்காய் என்ன விலைக்கு வாங்கினே?

பாலு: தேங்காயா?... அதுதாம்மா.. நீ கொடுத்தியே ரெண்டு ரூபா... அந்த ரூபாயிலே தேங்காய் வாங்கி...

அம்மா: பாலு, உன்னைப் பார்த்தா கோயிலுக்குப் போனவன் மாதிரி தெரியலியே.

பாலு: ம்... ம்...

அம்மா: என்னடா முழிக்கிறே? பிள்ளையாருக்குத் தேங்காய் உடைக்கிறேன்னு வேற ஏதாவது செலவு பண்ணிட்டியா, என்ன?

பாலு: என்னம்மா அப்படிக் கேட்கிறே? தேங்காய் வாங்கி 'படார்'ன்னு உடைச்சிட்டேன்.

அம்மா: பொய் சொல்லக் கூடாதுடா. பொய் சொன்னா பிள்ளையார் தண்டிச்சிடுவார். நீ நல்ல பையன்னு எனக்குத் தெரியும். ஆனால், கெட்ட பசங்ககூடச் சேர்ந்துகெட்டுப்போகக் கூடாது. என்ன தெரிகிறதா?



பாலு: சரிம்மா.

அம்மா: ஆமா, வெளியிலேயிருந்து வந்ததும் 'டிபன் இன்னும் ரெடியாக லியா'ன்னு கேட்டுண்டே வருவே. இன்னைக்கு 'கம்'முனு இருக்கியே. பசிக்கல்லையா? இன்னைக்கு டிபன் பஜ்ஜி பண்ணியிருக்கேன். அதோ தட்டிலே எடுத்து வச்சிருக்கேன். எடுத்துக்கோ. நான் துணி துவைச்சிட்டு வாரேன்.

(செல்கிறாள்.)

பாலு: சரிம்மா. நான் எடுத்துக்கிறேன். (தனக்குள்) அம்மாவுக்கு விஷயம் தெரியுமோ? ஹோட்டலிலே பாதாம் அல்வா சாப்பிட்டதை யாராவது சொல்லியிருப்பாங்களோ? ம்... ம்... இருக்காது... ம்... ம்...'பொய் சொல்லக் கூடாதுடா... பொய் சொன்னா பிள்ளையார் தண்டிச்சிடுவார்'ன்னு அம்மா சொன்னாங்களே, ம்.. ம்... ஒரே குழப்பமா இருக்குதே.. ம்.. ம்.. சரி, சரி... இந்தப் பஜ்ஜியைச் சாப்பிடுவோம்!

## காட்சி-4

இடம்: வீடு.

பாத்திரங்கள்: பாலு, குரல்.

பாலு: (படுக்கையில் தனியாக) மணி பத்து அடிச்சிடுத்து. இன்னும் தூக்கமே வரலியே. வயிறு வேற லேசா வலிக்குது. கடமுடான்னு சத்தம் போடுதே. அம்மாவைக் கூப்பிட்டுச் சொல்லலாமா?

குரல்: சொல்லலாம். ஏன் திடீர்னு வயிறு வலிக்குதுன்னு கேட்பாங்களே!

பாலு: யார் பேசுறது?

குரல்: நான்தான் உன் வயிற்றுக்குள்ளிருக்கும் பாதாம் அல்வா.

பாலு: பாதாம் அல்வாவா?

குரல்: ஆம். பத்து நாட்களுக்குமுன் செய்யப்பட்ட பாதாம் அல்வாவாகிய நான்தான் பேசுகிறேன்.

பாலு: அப்படின்னா... நான் ஹோட்டல்லே சாப்பிட்டது கெட்டுப்போன பாதாம் அல்வாவா?

குரல்: சந்தேகம் வேறு, பாலு?

பாலு: என் பெயரைச் சொல்லிக் கூப்பிடுறியே. எனக்குப் பயமாக இருக்கே.

குரல்: பயமா இருக்கா? விநாயகருக்குச் சிதறு தேங்காய் உடைப்பதாக உன் அம்மாவிடம் இரண்டு ரூபா வாங்கிய நீ உன் நண்பனுடன் சேர்ந்து கொண்டு என்னை விழுங்கி வைத்தாய்.

பாலு: அவன்தான் என்னை வற்புறுத்திக் கூப்பிட்டான்.

குரல்: உனக்கு அறிவு எங்கே போயிற்று? பள்ளத்தில் விழு என்றால் விழுவாயா? முள்மேல் நட என்றால் நடப்பாயா?

பாலு: மாட்டேன்.

குரல். அது போல் நீ உன் வழியில் சென்றிருக்க வேண்டியதுதானே?

பாலு: (மௌனம்)...

குரல்: மௌனமாக இருக்கிறாய். பாதாம் அல்வா என்றதும் நாக்கில் ஜலம் ஊறியது இல்லையா?

பாலு: ஆமாம்... சாப்பிட நல்லா ருசியா இருந்தது.

குரல்: ம்... ம்... நாக்கை அடக்கி வைத்துக் கொள்ள வேண்டும். நாக்கிற்கு ருசியாக இருக்கிறது என்று கண்டதைச் சாப்பிட்டால் வயிற்றுக் கோளாறு வருவது நிச்சயம். நாக்கு நீளமாக இருக்கிறது என்று யோசியாமல் கண்டபடி பேசிவிட்டால் பற்கள் உடைபடுவது உறுதி. நாக்கினால் வயிறும், பற்களும் சேதமடையுமே தவிர நாக்குக்கு ஆபத்து இல்லை.

பாலு: இப்ப வயிறு வலிக்குதே!

குரல்: வலிக்கத்தான் செய்யும். பிள்ளையாரை ஏமாற்றினதாக நினைத்த நீ வயிற்றுவலியால் அவதிப்படத்தான் வேண்டும். உன் அம்மாவிடம் பொய் சொன்ன நீ, வயிற்று வலியால் துடிக்கத்தான் வேண்டும். நான் இப்பொழுது உன் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியே வரப் போகிறேன்.

பாலு: என் வயிற்றைக் கிழித்துக் கொண்டா? வேண்டாம்... வேண்டாம். இனிமேல் நான் கெட்ட பையன்களோடு சேரமாட்டேன். யாரையும் ஏமாற்ற மாட்டேன். பொய் சொல்ல மாட்டேன். சொன்ன சொல் தவறாமல் நடப்பேன். விநாயகரே, நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும். என்னைக் காப்பாற்று விநாயகா...

என்னைக் காப்பாற்று. நான் உனக்கு ரெண்டு தேங்காய் உடைக்கிறேன்.

குரல்: பிள்ளையாருக்கு ரெண்டு தேங்காய் உடைக்கிறாயா? ஆபத்துக் காலத்தில் விநாயகரின் நினைப்பு வருகிறது. ஆபத்து நீங்கியதும் கடவுளை மறந்துவிட வேண்டியது. நன்றிகெட்டவனே, உன்னை எப்படி நம்புவது?

பாலு: இல்லை. நான் நன்றி கெட்டவன் இல்லை. இனிமேல் சொன்ன சொல் தவறாமல் நடப்பேன். இது சத்தியம்... உறுதி... உறுதி...

(பாலு, திடுக்கிட்டு எழுகிறான்.)

பாலு: ஆ! நான் கண்டது கனவா? பொழுது விடிந்ததும் முதலில் பிள்ளையார் கோயிலுக்குப் போக வேண்டும். விநாயகரே, நீதான் என்னை நல்ல வழியில் திருத்தினாய். காலையில் உன் சன்னிதானத்துக்கு வருகிறேன்.

## காட்சி-5

இடம்: வீதி.

பாத்திரங்கள்: பாலு, மோகன்.

(மோகன், வீதியில் பாலுவைப் பார்க்கிறான்.)

மோகன்: டேய் பாலு, எங்கேடா போறே?

பாலு: யார்ரா அது? மோகனா, நீ என் கூடப் பேச வேண்டாம். உன்னாலே நான் கெட்டது போதும்.

மோகன்: என்னாலே நீ கெட்டுப் போயிட்டியா?

பாலு: ஆமா, நீ என் கூட இனிமே பேசாதே!

மோகன்: என் மேலே உனக்குக் கோபமா? பாலு, நான் என்னடா தப்பு செய்தேன்?

பாலு: நேற்று ஒழுங்கா பிள்ளையார் கோயிலுக்குப் போய்க்கிட்டு இருந்தவனை ஆசை வார்த்தை சொல்லி ஹோட்டலுக்கு அழைத்தாய். ஹோட்டல்லே ரெண்டு பேரும் பாதாம் அல்வா சாப்பிட்டோம்.

மோகன்: அதைச் சொல்லத்தாண்டா உன்னைக் கூப்பிட்டேன். ராத்திரி முழுவதும் எனக்கு ஒரே வயிற்று வலி.

## ஏசுவின் அன்பு



அன்பு ஏசுவின் அன்பு — அது
அளவிட முடியா அன்பு
நம்பு இதனை நம்பு — இந்த
நானிலம் காணா அன்பு.

தாய், தந்தையரின் அன்பு — ஒருநாள்
தனித்தே போய்விடும் அன்பு
பிள்ளைகள் காட்டும் அன்பு — ஒருநாள்
பிரிந்தே போய்விடும் அன்பு.

என்றென்றும் மாறா அன்பு — அது
ஏசுவின் தூய அன்பு
என் வாழ்வினிலே அன்பு — தேவன்
இதயம் தோய்ந்த அன்பு.

— வி. விஜயலட்சுமி (8510)
சென்னை—7.

பாலு: உனக்கும் வயிற்று வலியா?

மோகன்: ஆமா பாலு. என்னாலே தாங்க முடியலே. எங்க அம்மாவைக் கூப்பிடலாம்னு பார்த்தேன். எங்க அம்மா நல்லா அசந்து தூங்கிக்கிட்டு இருந்தாங்க.

பாலு: அப்புறம்...?

மோகன்: தண்ணீர் குடிக்கலாம்னு

எழுந்தேன்... அப்ப... சுவரிலேமாட்டியிருந்த விநாயகர் படம் என் கண்ணுலே பட்டுது. உடனே நான் விநாயகரே, என்னை மன்னிச்சிடு. நான் தப்புப் பண்ணிட்டேன். இனிமே நல்ல வனா நடந்துக்குறேன்னு சொல்லிட்டு ஒரு டம்ளர் தண்ணீர் குடிச்சிட்டுப் படுத்துட்டேன். வயிற்றுவலி சரியாயிடுத்துடா பாலு.

பாலு: அப்படின்னா, நீ இப்பபிள்ளையார் கோயிலுக்குத்தான் புறப்பட்டியா?

மோகன்: ஆமாண்டா. இதோ பார்த்தியா. ரெண்டுதேங்காய் வாங்கியிருக்கேன்.

பாலு: நான் கூட ரெண்டு தேங்காய் வாங்கியிருக்கேண்டா. இதோ பார்.

மோகன்: ஆமா, உனக்கு ஏதுடா காசு?

பாலு: நான் சேர்த்து வச்சதுடா...


மோகன்: அப்படியா? நானும் உன்னைப் போல சேமித்து வச்ச பணத்துலேதான் பிள்ளையாருக்குஉடைக்கத் தேங்காய் வாங்கினேன்.


பாலு: இனிமே நாம யாரையும் ஏமாற்றக் கூடாது; சொன்ன சொல் தவறக் கூடாது; பொய் சொல்லக் கூடாது.

மோகன்: அப்படியே நடப்போம். சரி வா, பிள்ளையார் கோயிலுக்குப் போகலாம்.

(இருவரும் பிள்ளையார் கோயிலுக்குச் செல்கிறார்கள்.)


# ஓவியராகலாம்





## பொங்கி எழும் சிங்கங்கள் 9

# வீர காவியம்



''மணி கர்ணிகா, என்ன செய்து கொண்டிருக்கிறாய்?'' என்று கூறிய வாறே குதிரையை விட்டுக் குதித்துவந் தான் நானாசாகிப்.

''நானாசாகிப், மண்ணினால் கோட்டை கட்டினேன். இப்போது அதனை இடிக்கிறேன். எதிரிகளின் கோட்டைகளை இப்படித்தானே இடிக்க வேண்டும்.'' மணிகர்ணிகா காலால், தான் கட்டிய கோட்டையைச் சிதைத்தாள்.

''எப்பொழுதும் கோட்டையைத் தகர்ப்பதும், அம்பு வீசுவதும், படை யெடுப்பதும்தான் உன் நினைவா, மணி கர்ணிகா! வா, வா, உனக்கும் ஒரு குதிரை கொண்டு வந்திருக்கிறேன். ஏறிக் கொண்டு போய் நதிக்கரையில் வாள் பயிற்சி செய்யலாம். வருகி றாயா?''

''இதோ வருகிறேன். அப்பாவிடம் சொல்லிவிட்டு ஓடி வருகிறேன்'' — துள்ளிக் கொண்டு ஓடிய சிறுமியைப் பார்த்துக் கொண்டு நின்றான் சிறுவ னான நானாசாகிபு.

குதிரையேற்றம் மட்டுமா, யானை யேற்றம், வாள் பயிற்சி என்று எல்லா விதமான போர்க்கலைகளையும், மணி கர்ணிகாவும், நானாசாகிபும் பயின்றார் கள்.

காசி நகரில் 1835ம் ஆண்டில் மௌரீபந்தன் என்பவருக்கும் பாகீ ரதிக்கும் பிறந்தவள் மணிகர்ணிகா. அவளது தந்தை, மராட்டிய பீஷ்வா வான பாஜிராவிடம் பணி புரிந்து வந்தார்.

பாஜிராவின் மகன் நானாசாகிப். இவன் மணிகர்ணிகாவின் விளை யாட்டுத் தோழனானான். போர்க் கலை களையெல்லாம் கற்றுத் தேர்ந்த மணி கர்ணிகாவை, அவளது பெற்றோர் ஜான்சி நாட்டு மன்னனான, கங்கா தரராவுக்கு மணம் செய்வித்தனர். திருமணம் ஆனபிறகு மணிகர்ணிகா, ''லட்சுமிபாய்'' என்ற சிறப்புப்பெயர்

**கங்கா ராமமூர்த்தி**

பெற்றார். ஜான்சி அரசரும், அரசியும் ஜான்சியை மிகச் சிறப்பாக ஆட்சி செய்தனர்.

இக்காலத்திலேயே ஜான்சி அரசருக்கு உடல்நிலை மோசமாகியது. குழந்தைகள் இல்லாததால், தனக்குப் பிறகு அரசாள மகன் வேண்டுமென்று எண்ணிய அரசர், ஆனந்தராவ் என்னும் சிறுவனைத் தத்தெடுத்துக்கொண்டார். சில நாளில் அரசர் இறக்கவும், ஜான்சியின் ராணியாக லட்சுமிபாய் ஆட்சி செய்தார்.

அக்கால ஆங்கில அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருந்தது. "பிள்ளை இல்லாதவர்களின் சொத்து அரசாங்கத்தைச் சேர்ந்தது" என்பதே அது. எனவே வாரிசு இல்லாத ஜான்சியை தன்வசப்படுத்த ஆங்கிலப் படை, ஜான்சியை நோக்கிச் சென்றது. ஆனால், இராணி லட்சுமிபாயின் திறமையும் வீரமும் ஆங்கிலப் படையைப் புறங்காண வைத்தது.

மக்களிடம் அன்பும், ஆட்சித் திறமும் கொண்ட அரசி லட்சுமிபாயை மக்கள் விரும்பியதில் தவறென்ன? எல்லோரும் போற்றிப் புகழ விளங்கும் ஜான்சி அரசியைக் கண்டு ஆங்கிலேயர் பொறாமைகொண்டனர். வெகு விரைவில் ஜான்சியைப் பிடித்துவிட வேண்டும் என்ற எண்ணத்துடன், ஹைதராபாத், போபால் படைகளையும் திரட்டிக் கொண்டு ஆங்கிலப் படை ஜான்சி வந்தது.

ஜான்சி நாட்டின் உயிர் நாடியாக இருந்ததே அதன் வீரப்படைதான். லட்சுமிபாய், வீரரை எந்த நேரத்திலும் படையெடுப்புக்குத் தயார்ப்படுத்தி இருந்தாள். அத்துடன் அரசியின் அருந்தோழனாக விளங்கிய நானாசாகிபின் படைகளும், ஜான்சியின் உதவிக்கு வந்தன.

சுதந்திர உணர்ச்சி மிக்க இருபதினாயிரம் போர் வீரர்கள் ஒருபுறம் நின்றார்கள்.

கூலிப்படைகளான, ஆங்கிலச் சிப்பாய்கள் கோட்டையின்மீது குண்டு மாரி பொழிந்தனர். ஜான்சி வீரர்கள் சளைக்காமல், போர் செய்தனர். ஜான்சி வீரர் தலைவனாகத் திகழ்ந்த குலாம் கௌஸ் மிக அற்புதமாகத் தலைமையேற்றுப் போர் புரிந்தான்.

குண்டுமாரி பொழிந்து, கோட்டைக்குள் புக முயன்ற ஆங்கில வீரரை ஜான்சிவீரர்களின் ஆவேசம்திகைக்க வைத்தது. இராணி லட்சுமிபாயின் தீரத்தையும், தலைமையேற்று நடத்தும் போர்த் திறமைகளையும் கண்டு வியந்தனர்.

குண்டுகளால் துளைக்கப்பட்ட கோட்டை தீப்பற்றியது. ஆயினும் இராணியின் வீரர்களின் தாக்குதல் நிற்கவில்லை. ஆங்கிலப் படையைக் கோட்டைக்குள் புகவிடாமல் தடுத்துப் போர் புரிந்தனர்.

போர் வீரர்கள் இருதரப்பிலும் மடிந்தனர்!

நெருப்பிலே வீழ்ந்து இறந்தவர் ஆயிரம் என்றால், குண்டுபட்டு இறந்தவர் பல்லாயிரம் வீரர்கள்.

சுதந்திர உணர்வுமிக்க ஜான்சியின் வீரர்களும், நானாசாகிபின் வீரர்களும் காட்டிய தீரத்தையும் போர் நுணுக்கங்களையும் முறியடிக்க இயலாத ஆங்கிலப் படைத் தலைவன் இயுரோசு நெஞ்சம் கொதித்தான்.

இராணியின் நண்பர்களின் படைகள் எல்லாம் அழிக்கப்பட்டன. கோபத்தோடு எழுந்து வந்த ஆங்கிலப் படை, கோட்டையைத் தகர்த்தது. போர் ஆயுதங்களையெல்லாம், கைப்பற்றியது. இந்நிலையிலே இராணி இலட்சுமிபாய் கலங்கினாள். இடிக்கப்படாத கோட்டையின் ஒருபுறத்திலே ஏறி நின்றாள். எஞ்சி நின்ற வீரர்களைக் கூவி அழைத்தாள். கலங்காத நெஞ்சத்தோடு கட்டளையிட்டாள்.

"வீரர்களே! உயிருள்ளவரை போராடுங்கள். நம் மானம், வீரம் விளங்கப் போரிடுங்கள்! செல்லுங்கள்!"

அருமை அரசியின் கட்டளையைக் கேட்டு வீராவேசமாகப் பாய்ந்தனர் ஜான்சியின் வீரர்கள்.

பெரும் ஆங்கிலப் படையோடு மோதுவதற்கேற்ற படை வீரர்கள் அதிகம் இல்லாததால், கோட்டை ஆங்கிலேயர்வசம்சென்றது. கோட்டையைக் கைப்பற்றியவுடனே கொலையும், கொள்ளையும் செய்து மக்களைச் சித்ரவதை செய்யத் துவங்கியது ஆங்கிலப் படை.

இந்நிலையிலும் நெஞ்சுத் துணிவை

இழக்காத இராணி லட்சுமிபாய், தனது தத்துப்புத்திரனை ஆனந்தராவை எடுத்துக்கொண்டு, சில குதிரை வீரர்களோடு ஜான்சி கோட்டையை விட்டு வெளியேறினாள்.

குவாலியர் நகருக்குச் சென்று அங்கிருந்து மீண்டும், ஆங்கிலேயரைத் தாக்கினாள். கோட்டையின் வாயிலைக் காத்து நின்றாள். உடலிலே கவசம். பின்புறம் குழந்தை, நெஞ்சிலே தீரம், அயராது குதிரையேறிப் போர் புரிந்தாள்.

அன்னியனை ஆங்கிலேயனைத் தாய் நாட்டிற்குள் புகவிடக் கூடாது என்பதிலே தீவிரமாக நின்றாள் லட்சுமிபாய்! அதுவே அவளது தீரத்துக்குத் துணையாக நின்றது.

ஆயினும் ஒரு பெண்மணியின் வீரம் மட்டும் வெற்றியைத் தருமோ? ஆயிரமாயிரம் அலையெறிந்து வந்த ஆங்கிலேயர் குவாலியர் கோட்டையையும் கைப்பற்றினர்.

வீரமே விளைநிலமாக இருந்த அரசியைப் பிடிப்பதல்லவா அவர்களின் முக்கிய நோக்கம்!

கோட்டையைக் கைப்பற்றியதும், வீரர்கள், அரசியைத் தேடி ஓடினார்கள்.

அரசியைச் சூழ்ந்து கொண்ட பல வீரர்களின் வாள்முனைகள், அவளது மேனியைத் தாக்கின.

வீராங்கனையான அம்மாதரசி இரத்தம் வழியக் கீழே சாய்ந்தாள்.


அரசியின் வீரக்குருதியில், இம்மண்ணில் ஆயிரமாயிரம் வீரர்கள் தோன்றி, அடிமைத்தனத்தைக் களையப் பிறந்தார்கள்!

வீரப் பெண்மணியான அரசி லட்சுமிபாய் இறக்கும்போது அவளது வயது இருபத்து மூன்றுதான்!

குருதியிலே மிதந்த அவளது உடலை வீரருக்குரிய முறையில் தகனம் செய்தனர்.

அவளுடைய உயிர்த்தியாகமானது, இந்திய சுதந்திர வரலாற்றிலே — வீரத்தால் — குருதியால் எழுதப்பட்டது. அவளுடைய வீர மரணம் கேட்பவரை வீரமடையச் செய்தது. ஜான்சி ராணி லட்சுமிபாயின் தீரமிக்க நெஞ்சமும், புகழும் இந்திய வரலாற்றிலே அழியாத வீரகாவியம் அல்லவோ!

# பழமொழிகள்



# பலவிதம்

**பிஞ்சு மொழி**

* பிஞ்சிலே பழுத்தால் வெம்பல்.

**காய் மொழிகள்**

* கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்தானாம்.
* முழுப் பூசணிக் காயைச் சோற்றில் மறைப்பது போல.
* வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ?
* நாளைக்குக் கிடைக்கும் பலாக்காயை விட, இன்றைக்குக் கிடைக்கும் களாக்காயே மேல்.
* கொடிக்குக் காய் பாரமா?


**கனி மொழிகள்**

* பழுத்த பழம் கொம்பிலே நிற்குமா?
* எட்டி பழுத்தென்ன? ஈயாதார் வாழ்ந்தென்ன?
* எட்டாத பழத்துக்குக் கொட்டாவி விடாதே!
* தானே கனியாத பழத்தைத் தடி கொண்டு அடித்தால் கனியுமா?

**கிழங்கு மொழி**

* கொட்டிக் கிழங்கும் ஒரு முட்டுக்கு உதவும்.

— சி. என். சத்திய நாராயணன் (5844), வளவனூர்.




(தலைப்பைப் படித்தவுடன் முப்பரிமாணத் திரைப்படம் '3—D' போல இதுவும் ஏதோ ஆறு பரிமாணப் படம் என்று நினைத்துவிடாதீர்கள்! காத்தவராயன்பட்டி நடுநிலைப் பள்ளியில் ஆறும் வகுப்பு 'D' பிரிவில் பயிலும் சுட்டிப்பயல் காத்தானின் கதைதான் இது. மந்திர மாயம் ஏதும் இதில் வராது. அறிவியல் அற்புதங்கள் வரும்.

## 1D பிடித்து விட்டேன்!

கருப்பண்ணசாமி வேகமாக சைக்கிளை மிதித்தார். அவர் நெஞ்சம் நடு நடுங்கியது. திடீரென்று 'பெடல்' கட்டை ஒன்று கழன்று கீழே விழுந்தது. ஆனால் அவர் சைக்கிளை நிறுத்தவில்லை. போனால் போகிறது என்று ஒருபக்கப்பெடலைவைத்துக்கொண்டு மிதித்தார். இடையிடையே பின்னால் திரும்பிப் பார்த்துக் கொண்டார்.

பின்னால் துரத்தி வருவது என்ன நீர்யானையா, இல்லை காண்டாமிருகமா?

ஊஹூம்! பின்னால் தூரத்தில் தொந்தி குலுங்க மனிதர் ஒருவர் ஓடி வந்து கொண்டிருந்தார். கீழே விழுந்து கிடந்த பெடல் கட்டையையும் தூக்கிக் கொண்டு துரத்திக் கொண்டே வந்தார் அவர்.


"ஓய், கருப்பண்ணசாமி! நில்லுமய்யா! இப்போ சைக்கிளை நிறுத்தப் போகிறீரா இல்லையா?" என்றபடி அவர் கத்திக் கொண்டே வந்தார்.

கருப்பண்ணசாமி சைக்கிளை நிறுத்துவதாக இல்லை! ஆனால், இதென்ன! எதிர்த்தாற்போல் ரயில்வே கேட்டை மூடி விட்டார்களே!

கருப்பண்ணசாமி, 'இன்று மாட்டிக் கொண்டோம்!' என்று எண்ணியவாறு சைக்கிளை நிறுத்திக் கீழே குதித்தார்.

வேறு ஒன்றுமில்லை. கருப்பண்ணசாமி பல ஆண்டுகளாகப் பால் வியாபாரம் செய்து வருகிறார். என்றைக்கும் வாங்குகிற பாலில் தாராளமாகத் தண்ணீர் மூன்று பங்கு கலந்தே விற்பது அவர் வழக்கம். அதில் அவர் கருமித்தனம் பண்ணுவதில்லை.

இவ்வளவு ஆண்டுகளாக அவர் ஆய்வாளரிடம் அகப்பட்டதே இல்லை. ஆனால் இன்று பால் 'கேனை' சைக்கிளில் வைத்து ஓட்டி வரும்போது ஆய்வாளர் பார்த்து விட்டார்! அவரிடம் மாட்டலாமா? பால்மானியைப் போட்டுப்பார்த்து விடுவாரே! பாலில்




ஆசிரியர்: நான் பாடம் நடத்தறப்போ யாரும் கவனத்தைச் சிதற விடக் கூடாது.
மாணவன்: ஏன் சார்?
ஆசிரியர்: என்னாலே அதைப் பொறுக்க முடியாது.

—ஆர். எஸ். சுப்பிரமணியன்.

தண்ணீர் கலந்ததற்காகக் கோர்ட்டில் நிறுத்தி விடுவார்! அதனால்தான் கருப்பண்ணசாமி வேகமாகச் சைக்கிளை ஓட்டி வந்தார். பாழாய்ப் போன இரயில்வே கேட் பழிவாங்கிவிட்டது.

அப்போது எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று நடந்தது.

"முட்டையோ, முட்டை!" என்று கூவியபடி முட்டைக் கூடை ஒன்றைத் தலையில் சுமந்து போய்க் கொண்டிருந்தான் முருகப்பன். அவனுக்கு எதிர்த்தாற்போல் ஓடிவந்துகொண்டிருந்தார் ஆய்வாளர் அற்புதசாமி.

முருகப்பனுக்குக் கண் பார்வை சற்று மங்கலாகத்தான் இருக்கும். அற்புதசாமியோ கருப்பண்ணசாமியைப் பிடிக்கும் பதற்றத்தில் இருந்தார். முடிவு? இருவரும் மோதிக் கொண்டு கீழே விழுந்தார்கள்.

அற்புதசாமி மெல்ல எழுந்த போது அவர் தலையிலிருந்து பாதம் வரை முட்டை அபிஷேகம் நடந்திருந்தது!

முருகப்பனோ கன்னாபின்னாவென்று திட்ட ஆரம்பித்து விட்டான்.

ஆனாலும் அற்புதசாமி அயரவில்லை. ஒரு கையில் பெடல் கட்டையைத் தூக்கிக் கொண்டார். மறுகையால் முகத்தில் வழிகிற முட்டைக் கருவைத் துடைத்துவிட்டுக் கொண்டார். தொடர்ந்து ஓடினார்.

அங்கே இதற்குள் 'கேட்'டைத் திறந்து விட்டார்கள். கருப்பண்ணசாமி சைக்கிளில் ஏறி மிதித்தார். 'இனி எப்படியும் தப்பிவிடலாம்! பயமில்லை!' என்று அவர் மனம் நினைத்தது. முட்டை விற்கும் மொட்டைத் தலை முருகப்பனை அவர் வாழ்த்திக் கொண்டார்.

* * * * *

காத்தவராயன் பட்டியிலிருந்த நடுநிலைப்பள்ளி மணி 'டாண்... டாண்... டாண்' என ஒலித்தது. சிறுவர்கள் 'ஓ'வென்று கத்திய வண்ணம் வெளியே ஓடி வந்தனர். ஆறாம் வகுப்பு D பிரிவிலிருந்து காத்தானும் ஓடி வந்தான்.

அவன் வீட்டிற்கு வந்த போது எதிர்பாராத விருந்தாளியொருவர் வந்திருந்தார். காத்தானின் சித்தப்பா கயிலைராஜன் பட்டணத்தில் பெரிய விஞ்ஞானி! மீ ஒலி அலைகளைப் பற்றி (Ultrasonic waves) ஆய்வு செய்து கொண்டிருப்பவர்!

கயிலைராஜன் தாம் கொண்டு வந்திருந்த அற்புதக்கருவிகள் சிலவற்றைக் காத்தானிடம் காட்டினார். அவற்றின் பயன்களையும் இயக்கும் விதத்தையும் விளக்கினார், காத்தானுக்கு ஒரே மகிழ்ச்சி. தானே பெரிய விஞ்ஞானியானாற்போல நினைத்துக் கொண்டான்.

சற்றுநேரத்திற்கெல்லாம்காத்தான் இரு கருவிகளை எடுத்துத் தோள் பையில் போட்டுக் கொண்டான். அடுக்குப் பானையில் அம்மா வைத்திருந்த 'சோமாஸ்'களையும் பையில் திணித்துக் கொண்டான். யாருக்கும் தெரியாமல் வீட்டை விட்டு ஓடினான்.

அவன் கையில் எடுத்துச் சென்ற ஒரு கருவி 'டார்ச் லைட்' அளவில் இருந்தது. மற்றொரு கருவியோ மூக்குக் கண்ணாடியும் இயர்ஃபோனும் இணைந்த அமைப்பாகும்!

முதல் கருவி மீ ஒலி அலைகளை உண்டாக்கக் கூடிய கருவியாகும்! இரண்டாம் கருவி தடைகளை உணர உதவும் கருவியாகும்!

சீட்டியடித்த வண்ணம் தெருவில் மகிழ்ச்சியாக நடைபோட்டுக் கொண்டிருந்தான் காத்தான். அப்போது அவனுக்கு எதிராகச் சைக்கிளை மிதித்துக் கொண்டு வந்தார் கருப்பண்ணசாமி.

அடுத்த கணத்தில்—

'டமால்!' என்ற வெடிச் சத்தம் சைக்கிளிலிருந்து எழுந்தது.

ஆம்! சைக்கிள் 'டியூப்' வெடித்து விட்டது!

முகம் வெளிறிக் கீழே இறங்கினர் கருப்பண்ணசாமி. அவர் பின்னல் திரும்பிப் பார்த்தார். சற்றுத் தொலைவில் அற்புதசாமி ஓடிவந்து கொண்டிருந்தார்.

''மாட்டிக்கொண்டேன்! வகையாக மாட்டிக் கொண்டேன்!'' என்று வாய் விட்டுக் கத்தினர் கருப்பண்ணசாமி. அவர்கண்களிலிருந்து 'கரகர'வென்று கண்ணீர் வழிந்தது.

காத்தான் கருப்பண்ணசாமியின் அருகில் சென்றான். அவரது துக்கத்தின் காரணத்தைவிசாரித்துத்தெரிந்து கொண்டான். இனி ஒரு பொழுதும் பாலில் தண்ணீர் கலப்பதில்லை என்று அவரிடம் உறுதிமொழி வாங்கிக் கொண்டான்.

பிறகு, ''கவலைப்படாதீர்கள்!'' என்றவன் கேனின் மூடியைத் திறக்கச் சொன்னான். தன்னிடமிருந்த 'டார்ச் லைட்' போன்ற கருவியைக் 'கேனிற்'குள் நுழைத்தான். கருவியிலிருந்த பட்டனைத் தட்டினான்.

சில நொடிகளுக்குப் பிறகு கருவியின் இயக்கத்தை நிறுத்திக் 'கேனை' மூடினான்.

அப்போது—

''ஆஹா! கருப்பண்ணசாமி! கடைசியில் பிடித்துவிட்டேன்! தண்ணீர் ஊற்றி நீர் பால் விற்பதைக் கையும் களவுமாகப் பிடிக்க இவ்வளவு காலமாயிற்று!'' என்று கூறியவாறு அருகில் வந்து விட்டார் அற்புதசாமி. அப்புறம்?

* * * * * *

## 20 குண்டா குண்டா

கருப்பண்ண சாமியின் கையும் காலும் தந்தியடிக்க ஆரம்பித்தன.

''நான் என்றைக்கும் சட்டப்படி நடக்கிறவன். இருந்தாலும் மனிதாபிமானமும் உண்டு. இந்தா, கீழே நீ போட்டு விட்டு வந்த உன் பெடல் கட்டை! வாங்கிக் கொள்!'' என்று பெடல் கட்டையை நினைவாகக் கருப்பண்ணசாமியிடம் தந்தார் அற்புதசாமி.

''சரி, சரி! கேனைத் திறந்து காட்டு!'' என்று அடுத்தபடி கட்டளையிட்டார் அவர்.

கருப்பண்ணசாமி நடுங்கியவாறு மூடியைத் திறந்தார்.

'ஹிஹ்ஹிஹ்ஹி!' என்ற வெற்றிச் சிரிப்புடன் எட்டிப் பார்த்தார் அற்புதசாமி. ஆனால் அவர் முகம் விஷவாயுவைச் சுவாசித்தவனைப் போல ஆயிற்று!

''என்ன இது... தயிர்... தயிரா இருக்குதே?'' என்று கேட்டார் அற்புதசாமி.

கருப்பண்ணசாமிக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும், ''ஹி..ஹி.. ஆமாம்! தயிர்வடை என்றால் எனக்குப் பிடிக்கும்! உங்களுக்கும் பிடிக்குமா?'' என்று கேட்டு வைத்தார்.

''பால்வியாபாரத்தைவிட்டுத்தயிர் வியாபாரம் நடத்துகிறாயா? இதற்குப் போய் இவ்வளவு சங்கடப்பட்டு ஓடி வந்தேன் பார்! நான் ஒரு மடையன்!'' என்று தம் தலையில் அடித்துக் கொண்டார் அற்புதசாமி.

தந்தை: ஏண்டா! வாசல்லே கிடக்கிற செருப்பை எடுத்துக்கிட்டு வரச் சொன்ன மாட்டேன்கிறே?

மகன்: இந்த செருப்புதானேப்பா நேத்து உங்க காலைக் கடிச்சுது! இப்போ நான் அதை எடுத்தா என் கையைக் கடிக்குமே!

—எஸ். ஆர். சின்னமணி





அப்போது தான் கருப்பண்ணசாமியும் 'கேனி'ற்குள் எட்டிப் பார்த்தார். உள்ளே கட்டி கட்டியாகத் தயிர் போல் தெரிந்தது!

அடடே! இதெல்லாம் காத்தான் செய்தமாயமா! காத்தானை அவர் நன்றியுடன் பார்த்தார். மீ ஒலி அலைகளைக் கொண்டு பாலைத் தயிராக மாற்றிய காத்தான் அவருடைய நன்றிக்காகக் காத்திருக்கவில்லை. அங்கிருந்து பறந்தோடினான்!

* * * * *

கருப்பண்ணசாமியைக் காப்பாற்றிய பெருமிதத்தில் கடற்கரையோரம் நடைபழகிக் கொண்டிருந்தான் காத்தான். திடீரென்று பின்புறம் யாரோ 'தபதப'வென்று ஓடிவரும் ஓசை கேட்டது.

அவன் திரும்பிப் பார்ப்பதற்குள் யாரோ அவன் கண்களை இறுக்கமாக மூடினார்கள். குரல் வராதபடி வாயை யாரோ அழுத்திப் பிடித்தார்கள். அவன் கைகளிரண்டையும் பின்னால் சேர்த்துக் கட்டினார்கள்.

''ஹூம்! தூக்கிக் கொண்டு போங்கள்!'' என்று யாரோ கத்துவதும் கேட்டது.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் 'சளபுள'வென்று தண்ணீரில் அவனைத் தூக்கிக் கொண்டு நடப்பது புரிந்தது.

பத்து நிமிடங்கள் கழிந்தன!

''தட் தட் தட் தட்...'' என்று மோட்டார் இயங்கும் ஒலி கேட்டது!

மோட்டார் படகில் அவனை ஏற்றிக் கொண்டு புறப்பட்டார்கள்!

அவர்கள் மூவரும் கடத்தல் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்கள். அவனையும் அத்தொழிலில் ஈடுபடுத்தவே கடத்திக் கொண்டு போகிறார்கள்.

படகு கொஞ்ச தூரம் சென்றதும் காத்தானுக்கு அந்தக் கருவிகள் இரண்டையும் பற்றிய நினைவு வந்தது. டார்ச் லைட் போன்ற கருவியையும் மூக்குக் கண்ணாடி வடிவில் இருந்த கருவியையும் ஒரு பையில் போட்டுத் தோளில் மாட்டியிருந்தான். அந்தப் பை என்ன வாயிற்று?

''என் பை! பை!'' என்று முனகினான் அவன்.

''டே, பயலே! கம்முனு கிட! உன்னோட பையும் விளையாட்டுச் சாமான்களும் பத்திரமா எங்ககிட்டே இருக்கு! அப்புறம் வாங்கிக்கலாம்! சொன்னதைக் கேட்டா உனக்கு நல்லது!'' என்று ஒருவன் மிரட்டினான்.

படகு எவ்வளவு நேரம் பயணம் செய்தது என்று காத்தானுக்குத் தெரியாது. ஏனெனில் சற்று நேரத்திற்கெல்லாம் களைப்பால் அவன் தூங்கிப் போனான்.

மறுபடியும் அவன் கண் விழித்த போது அவன் மணற் பரப்பில் கிடப்பதை உணர்ந்தான். இப்போது அவன் கண்கள் கட்டப்பட்டிருக்கவில்லை. கைகளும் கட்டப்பட்டிருக்கவில்லை. மெல்ல அவன் எழுந்து அமர்ந்து கண்களைக் கசக்கிப் பார்த்தான்.

சற்றுத் தொலைவில் மூன்று முரடர்கள் அமர்ந்து தீ மூட்டி உணவு ஏதோ ஆக்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. முரடன் ஒருவனின் காலடியில் அவனுடைய அறிவியல் கருவிகளடங்கிய பையும் கிடந்தது!

இளங்காலை நேரத்துச் சூரியனின் கதிர்கள் அவன் மேல் பட்டன. என்ன இது! அப்படியானால் 'ஓரிரவு' முழுவதும் பயணம் செய்து வந்திருக்கிறார்களா? இது என்ன இடம்?

அப்போது முரடன் ஒருவன், ''அண்ணே! இந்தத் தீவிலே மனிதனை உண்ணும் ஆதிவாசிகள் இருக்கிறாங்களாமே! உண்மைதானா?'' என்று அடுத்தவனைக் கேட்டான்.

அடுத்தவன் பதிலளிப்பதற்குள் தொலைவில் 'டமடம! டமடம!' என்னும் டமார ஒலி கேட்டது.

ஒலி வந்த திக்கில் எல்லாரும் திரும்பிப் பார்த்தார்கள். இலைகளையும் தழைகளையும் ஆடையாக உடுத்திக் கொண்டிருந்த ஆதிவாசிக் கும்பல் ஒன்று அவ்விடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது.

டமார ஒலிக்கு இடையே 'லொப லொப லொப லொப'வென்று ஆதிவாசிப் பெண்கள் வேறு குரவை யொலியிட்டார்கள்!

முரடர்களின் முகங்கள் வெளுத்தன! ''ஓடு! ஓடு!'' என்று கூவியபடி அவர்கள் பிடித்தார்கள் ஓட்டம். காத்தான் ஒரு முடிவிற்கு வருவதற்குள் தங்கள் படகை நோக்கி ஓடியே போய் விட்டார்கள்!

காத்தான் முதல் காரியமாகக் கீழே கிடந்த தன் பையை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்டான். நல்லவேளை! அதையாவதுபோட்டுவிட்டுப்போனார்களே!

இனி இந்த ஆதிவாசிகளைச் சமாளிப்பது எப்படி?

கும்பல் அவனை மிக நெருங்கி வந்துவிட்டது. அதில் தலைவன் போன்றிருந்தவன் சற்று நெருங்கி வந்தான். அவன் மிகப் பயங்கரமாகத் தோற்றமளித்தான். அவனுடைய தொந்தி வயிறும், மொட்டைத் தலையும், நீண்ட தாடியும் காத்தானை ஒரு கலக்குக் கலக்கி விட்டன.

தலைவன் அவனை நோக்கி, ''நண்டா சிண்டா குண்டா குண்டா!'' என்றான்.

காத்தானுக்கு ஒன்றுமே புரியவில்லை! 'நண்டாவது சிண்டாவது! யாரைப் பார்த்து அவன் குண்டன் என்று கூப்பிடுகிறான்?' என்று நினைத்தான் அவன்.


இவர்களை எப்படிச் சமாளிப்பது? பையிலிருந்து கருவிகளை வெளியில் எடுக்கலாமா? ஊஹூம்! நூற்றுக் கணக்கில் ஆதிவாசிகள் கூடிவிட்டார்களே!

* * * * *

## 3D-ஜோ ஜோ!

ஆதிவாசிகளின் தலைவன், ''நீ யார்? ஏனிங்கு வந்தாய்?'' என்ற பொருள் படும்படி அவர்கள் மொழியில் பேசினான். ஆனால் காத்தானுக்கு அது புரியவில்லை. எனவே அவன் மிரள மிரள விழித்தான்.

உடனே தலைவன், ''ஜிலேபி ஜிலேபி ஜில்ஜில் ஜிலேபி கிறிஞ்சி கிறிஞ்சி ஜூஜோடோ!'' என்று கத்தினான்.



காத்தான் உடனே தனக்கு அவன் ஜிலேபி தரப் போகிறான் போலும் என்று நினைத்தான். ஆனால் உண்மையில் அதுவல்ல பொருள்! 'கிறிஞ்சி என்கிறமலர்பூக்கிறவரையில்இவனைச் சிறையில் வைத்திருங்கள்!' என்பதே அதன் பொருளாகும்.

கிறிஞ்சி என்பது ஒருவகைச் சிறப்பான மலராகும். அந்தத் தீவில் மட்டுமே காணப்படும் மலர் அது! மேலும் அறுபது ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் மலர் அது! அத்தீவில் சென்ற ஆண்டுதான் அம்மலர் கடைசியாக மலர்ந்திருந்தது. அப்படியானால் எத்தனை ஆண்டுகள் காத்தான் சிறையில் காத்திருக்க வேண்டும் என்று நீங்களே கணக்கிட்டுப் பாருங்களேன்!

காத்தானை இரு ஆதிவாசி வீரர்கள் இழுத்துக் கொண்டு போனார்கள். சுற்றிலும் முள்வேலியிடப்பட்ட ஒரு தோட்டத்திற்குள் கொண்டு போனார்கள். தோட்டத்தில் எங்கும் ஒரு வகைக் குறுஞ்செடி படர்ந்திருந்தது. அது வேறு எதுவுமல்ல! கிறிஞ்சிச் செடிதான் அது!

தோட்டத்தின் நடுவில் ஒரு சிறு குடிசை! அதுதான் சிறைச்சாலை! பகலெல்லாம் அவன் தோட்டத்தில் உலவி வரலாம். இரவில் குடிசைக்குள் அடைக்கப்படுவான். வேடிக்கையான சிறை!

காத்தான் நினைத்தால் இச்சிறையிலிருந்து தப்பி ஓடிவிடலாம். ஆனால் இனி எங்கே தப்பி ஓடுவது? தாயகம் திரும்பப் படகில்லையே! மேலும் தாயகம் எத்திசையில் இருக்கிறதோ? ஆதிவாசிகளுக்கு அடங்கியிருந்து அவர்கள் உதவியைப் பெறுவதுதான் தக்கசெயல் என்ற முடிவுக்கு அவன் வந்துவிட்டான்.

ஆயிற்று! பத்து நாட்கள் உருண்டோடி விட்டன. தோள் பையில் கொண்டு வந்த 'சோமாஸ்'களில் பெரும்பகுதி தீர்ந்துவிட்டது. ஆதிவாசிகளின் தேனையும் தினை மாவையும் அன்றாட உணவாக அவன் நாக்கு அங்கீகரித்துவிட்டது! அது மட்டுமல்ல! காவல்காரனின் உதவியோடு ஆதிவாசிகளின் மொழியையும் அரைகுறையாய்ப் பேசக் கற்றுக் கொண்டுவிட்டது!

பிறகுதான் தனக்கு அளிக்கப்பட்ட கொடிய சிறைக் காலத்தை அவன் புரிந்து கொள்ள முடிந்தது. சிறைத் தோட்டத்தில் இருக்கும் கிறிஞ்சி மலர்கள் பூத்தால்தான் அவனுக்கு விடுதலை!

திடீரென்று அவன் உள்ளத்தில் ஏதோ பளிச்சிட்டது! ஹாங்! அவனிடமிருக்கும் கருவியைக் கொண்டே விடுதலை நாளை விரைவுபடுத்தலாமே! மீ ஒலி அலைகளை அச் செடியின் மீது தினமும் பாய்ச்சி வந்தால்? பூக்கும் காலத்தை மீ ஒலி அலைகள் விரைவு படுத்தும் என்று சித்தப்பா கயிலைராஜன் கூறினாரே!

தொடர்ந்து இரண்டு வாரங்கள் பகற்பொழுதுகளில் மீஒலி அலைகளைக் கிறிஞ்சிச் செடிகளின் மீது பாய்ச்சி வந்தான். டார்ச் லைட் இருந்த கருவி அதற்கு உதவிற்று!

சரியாகப் பதினைந்தாம் நாள்! விடிகாலைப் பொழுதில் கண்களைக் கசக்கிக் கொண்டு குடிசையை விட்டு வெளியே வந்தான் காத்தான்.

என்ன வியப்பு! கிறிஞ்சி மலர்கள் இளஞ்சிவப்பு நிறத்திலே மலர்ந்து அவனைப் பார்த்துச் சிரித்தன.

காவல்காரக் கிழவன் விழுந்தடித்துக் கொண்டு அவர்கள் தலைவனிடம் ஓடினான்.

''ஜூடோ, ஜூடோ! கிறிஞ்சி ஜூடோ!'' என்று கத்திக் கொண்டே ஓடினான்.

''பூத்தது பூத்தது! கிறிஞ்சி பூத்தது!'' என்பது அதன் பொருள்

தலைவன் உள்பட எல்லோரும் அதிர்ந்து போனார்கள். ஓராண்டிற்குள் எப்படி அது பூக்கும்?

(அடுத்த இதழில் முடியும்)

# ஆபத்துக்கு உதவி

**பேரளம் புகழ்மதி**

அன்று காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயிலில் மிகவும் திரளான கூட்டம். 'பெரியவாள், புதுப் பெரியவாள், இளைய பெரியவாள்' ஆகிய மூவரும் அங்கு மாலை ஐந்து மணிக்கு எழுந்தருளப் போகிறார்கள். பக்தர் கூட்டம் பரபரப்போடு இருந்தது.

மாநிலத்திலேயே மிகச் சிறந்த நான்கு மாணவர்களுக்கு அன்று பெரியவாள் தன் திருக்கரத்தால் தங்கப் பதக்கம் வழங்க இருப்பதால் மாணவர்களும் அங்கே நிரம்பி வழிந்தனர். மருத்துவத் துறையில் மிகச் சிறந்த மாணவியான — தற்போதைய 'ஹவுஸ் சர்ஜ'னை — லதாவும் அந்த நால்வரில் ஒருத்தி. அவள் அக்கா உஷா, அம்மா, அப்பா, உறவினர்கள் எல்லோரும் கூடியிருந்தனர். ஆனால், அவர்கள் முகங்களில் பதைப்பு காணப்பட்டது. லதா எங்கே, காணோம்?

உஷா கேட்டாள். "என்னம்மா இது? திண்டிவனம் போய் சிநேகிதியை அழைச்சுக்கிட்டு வந்துடறேன்னு போனவள் இன்னும் காணோமே! அப்பா வேறே திட்டுறார்."

அம்மாவுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. அழுது விடாமல் இருக்க மிகவும் கஷ்டப்பட்டாள். "இப்ப என்னடி பண்றது? காலையிலே போயிட்டா, 'மூணு மணிக்குள்ளே வந்துடறேன்'னு சொன்னதாலே 'சரி'ன்னேன். இப்படிப் பண்ணுவாள்னு தெரிஞ்சா நான் லதாவை அனுப்பிச்சிருக்கவே மாட்டேன். தெய்வ சந்நிதானத்திலே பெரியவாள் அனுக்கிரஹத்தோடு பதக்கம் வாங்க அவளுக்குப் பிராப்தம் இல்லை போலிருக்கு" சொல்லி முடிப்பதற்குள் அழுது விட்டாள். உஷா அம்மாவைத் தேற்றினாள்!

திடீரென ஜனக்கூட்டம் பரபரப்படைந்தது. "ஜய ஜய சங்கர" அனைவரின் மனமும் உதடுகளும் பயபக்தியோடு உச்சரித்தன. அதோ... விழா மேடை 'தேஜஸ்' பெற்று விட்டது. காமகோடி பீடங்கள் மூவரும் மேடையைப் புனிதப்படுத்தினர். அடியவர்களின் கண்களில் ஆனந்த புஷ்பங்கள் சொரிந்தன. இன்னமும் லதா... வரவில்லை!

விழா முக்கியமான கட்டத்தை நெருங்கியது. மிகச் சிறந்த மாணவர்கள் பெயரைக் கூப்பிட ஆரம்பித்தனர். பெரியவாளின் மலர்க்கரத்தால் பதக்கத்தை ஒவ்வொரு மாணவரும் பெறுகின்றனர்; பெரியவாளின் பாதாரவிந்தங்களில் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்கின்றனர்; அவர்களின் விழிகளில் பன்னீர் துளிர்த்தது. இதோ... லதாவின் பெயர் கூப்பிடப்படுகிறது...! எங்கே, எங்கே லதா? அனைவரும் சுற்றிச் சுற்றிப் பார்க்கின்றனர். அந்த ஒரு விநாடியில் பெரிய

வாளின் ஞானப் பார்வை எங்கோ மோனத்தில் லயித்தது; அவரின் உதடுகளில் புரிந்து கொள்ள இயலாத தெய்வீக நகை பூத்தது. மிக மிக அருகிலிருந்தவர்கள் மட்டுமே அதனைக் காண முடிந்தது!


லதாவின் அப்பா விழாக் குழுவினரிடம் மெல்லிய குரலில் சோகத்தோடு நடந்ததைக் கூறினார். பெரியவாள் பதக்கத்தைக் குழுவினரிடம் தராமல் தம்மிடமே வைத்துக் கொண்டு பின் மடத்திற்கு வருமாறு சைகை செய்தார்.

விழா முடிந்தது; கூட்டம் கலைந்தது! லதா அவசர அவசரமாக ஓடி வந்தாள்; அவளுக்கு மூச்சு வாங்கியது! அம்மா, அப்பா முகத்தில் கோபம் பொங்கியது!

''அப்பா, என்னை மன்னிச்சுடுங்க! திண்டிவனத்தில் இறங்கி சினேகிதி இருக்கற இடத்தை நோக்கி அவசர அவசரமாகப் போனேன். வழியில 'ஐம்பது, அறுபது' குடிசைகள் கொண்ட ஒரு பேட்டை இருந்தது. திடீர்னு ஒரு குடிசையிலே ஒரு தாயின் குரல் வீறிட்டு அலறியது! உள்ளே ஏழெட்டுப் பேர் பரபரப்பா இருந்தாங்க! ''ஐய்யோ... டாக்டர் வரலியா... 'பணம் கொடுத்தா தான் வருவேன்'னுட்டாரா... நான் பணத்துக்கு எங்க போவேன்? என் ஒரே பையன் இறந்துடுவானா?'' என்று மண் சுவரில் மோதியபடி தாய் அழுது கொண்டிருந்தாள்!

''அவளின் கணவர் பத்தாண்டுகளுக்கு முன்னேயே இறந்துட்டாராம்; இந்தத் தாய்தான் அந்தப் பையனை இரண்டு வயசிலேயிருந்து கஷ்டப்பட்டுக் காப்பாத்தருளாம்! அந்தப் பையனைத்தான் மலைபோல அவள் நம்பிக்கிட்டிருக்கா! மூணுநாள் முன்னாலே ஸ்கூலிலேயிருந்து வர்றப்போ மழையிலே நல்லா நனைஞ்சுட்டானும்; ஜன்னி வந்திட்டுது! கூட்டத்தினர் 'கோ'வென அழுது கொண்டிருந்தனர்!

''எனக்கு ஒரு நிமிஷம் என்ன செய்யறதுன்னே தெரியலை. கண்ணை மூடிப் பெரியவாளை ஸ்தோத்திரம் பண்ணினேன். 'எனக்கு இப்படி ஒரு சோதனையா?'ன்னு தேம்பினேன். திடீர்னு என் கண்ணிலே பெரியவாள் காட்சி தந்தாரு. அம்மா... நான் சொல்றதை நீங்க நம்ப மாட்டீங்க... என் உடம்பே



சில்லிட்டுப் போச்சு. "குழந்தை... திக்கற்றவங்களுக்கு தெய்வமே துணை... அந்தத் தெய்வந்தான் உன்னை அனுப்பிச்சிருக்கு! ஆபத்துக்கு உதவுவதுதான் டாக்டரின் முதல் வேலை. அதுவும் சொத்தில்லாத ஏழைகளுக்கு உதவுவதுதான் உண்மையான தொண்டு! உன் கடமையைச் செய்" என்று அருள் பாலிச்சாரம்மா. கேட்கக் கேட்க என் குழப்பமெல்லாம் நீங்கிப்போச்சு. நம்ம நடமாடும் தெய்வமே ஆணையிட்டவுடன் அந்தக் குடிசைக்குள்ளே போனேன். வியப்போடு என்னைப் பார்த்த கூட்டத்தை அன்போடு பார்த்தேன். அந்தப் பையனின் உடம்பைச் சோதனை செய்தேன். தேவையான மருந்துகளை நானே பணம் கொடுத்து வாங்கி வரச்சொன்னேன். இன்னும் அரை மணியாகியிருந்தால் கூட அந்தப் பையன் பிழைப்பது கஷ்டம்தான்! சரியான சமயத்தில் பெரியவாள் என்னை அனுப்பிச்சிருக்கார்! நெடுஞ்சாண் கிடையா அந்தத்தாய் விழுந்து என்னைக் கும்பிட்டப்போ, அந்த வணக்கத்தைப் பெரியவாளுக்கே அர்ப்பணிச்சுட்டேன்!" விசும்பினாள் லதா. ஸ்தம்பித்து நின்ற பெற்றோர்கள் லதாவை அழைத்துக் கொண்டு தெய்வ சந்நிதானத்தை நோக்கி—மடத்தை நோக்கி—நடந்தார்கள்.

"வாங்க... வாங்க... நீங்க வர்றதா பெரியவா ஞானப் பார்வையிலே சொன்னா...!" ஆச்சரியத்தோடு ஓர் அடியவர் அழைத்துப் போனார்.

உள்ளே... தெய்வீக மணம் கமழும் புனித பீடத்தில் பெரியவாள் மோன நிலையிலும், புதுப் பெரியவாள் மெல்லிய தெய்வீக முறுவலோடும், இளைய பெரியவாள் எப்பொழுதும் போல் சற்றே ஒதுங்கிக் கூச்சத்தோடும் அமர்ந்தபடி அருள் பாலித்துக்கொண்டிருந்தனர்!

விம்மியபடியே லதா பெரியவாளின் பாதாரவிந்தங்களில் வணங்கினாள்; ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அதற்குள் பெரியவாள் புன்னகையோடு "அந்த ஏழைப் பாலகனுக்கு என் ஆசீர்வாதம்" என்று மெல்லிய குரலில் கூறினார்.

லதாவின் பெற்றோருக்குத் திடீரென மின்னல் பாய்ந்தாற்போல மெய் சிலிர்த்தது; பெரியவாளுக்கு எப்படித் தெரிந்தது? 'ஓ... இறைவனின் பொம்மலாட்டம் பெரியவாளுக்குத் தெரியாதா என்ன?' சுற்றியிருந்தோர் இந்தத் தெய்வீக நாடகத்தைப் பார்த்துச் சிலிர்த்தனர்!

அதோ... அந்தத் தெய்வீகத் திரு உரு தந்த பதக்கத்தை ஆனந்தக் கண்ணீரோடு லதா பெறுகிறாள்!



# ஒரே ஒரு கத்திரிக்காய்

சின்னி வெங்கட்ராமன்

பசுமையான காய்கள்! பலவர்ணங்களில் பழங்கள். நீண்டும் உருண்டும் கிழங்குகள்...

அடுக்கு... அடுக்காய், அவைகள் வரிசையாக வைக்கப்பட்டு இருந்தன.

—அது ஒரு காய்கறிக் கடை. கடை நிறையக் கனிகளும் காய்களும் இருந்தன. பார்வைக்கும் அழகாகவே இருந்தது.

சின்னக் கடைதான்! இருந்தும்... அங்கே நல்ல கூட்டம்!

அதற்குள்...

சிவகாமி அம்மாள் நுழைந்தார். அவருடன் சேகரும் வந்தான். கூட்டத்தில் இடித்துக் கொண்டு உள்ளே புகுந்தான்.

பக்கத்தில் நிறையவே கடைகள். அங்கும் பல வகைக் காய்களும் கனிகளும் இருந்தன. இருந்தும்கூட—

அங்கெல்லாம் கூட்டம் இல்லை!

சேகருக்கு இது வியப்பாக இருந்தது. ஏன் அப்படி? தன்னுடைய அம்மாவிடம் கேட்டான்.

அவர் சொன்னார்...

"உண்மைதான் சேகர். அங்கேயும் விற்பனைதான் நடக்கிறது. இருந்தென்ன? மக்கள் இங்குதான் வருகின்றனர். அதற்குக் காரணம்... இங்கு நடக்கும் வியாபாரத்தில் நியாயம் இருக்கும். விலையில் நேர்மை இருக்கும். எண்ணிக்கையில் குறைவு இருக்காது. அளவுகள் சரியாக இருக்கும். அதனால்தான்... இந்தக் கடையில் மட்டுமே... கூட்டம் அலை மோதுகிறது."

சேகருக்கு அம்மாவின் சமாதானம் 'சரி' என்று தோன்றியது. தலையை அசைத்து அதனை ஆமோதித்தான். இப்போது அவனுக்கு ஒரு தொல்லை. தன்னை இடித்துக் கொண்டு நகருபவர்களை அவன் சமாளிக்க வேண்டி இருந்தது. அதில் கவனம் செலுத்தினான்.

அந்த நேரத்தில்—

நின்று கொண்டிருந்த கூட்டத்தில் சலசலப்பு...!

கத்திரிக்காய்களை அடுக்கி வைத்திருந்த கூடை! அதிலிருந்து சில காய்கள் கீழே விழுந்தன. அவைகள் உருண்டன. அங்குமிங்குமாகச் சிதறி ஓடின!


அங்கு நின்றவர்களில் சிலர்... அவைகளை ஓடிப் பிடித்து எடுத்து வந்தனர். மீண்டும் குவியலை நேர் செய்து வைத்தனர்.

அப்போதுதான்—

சேகரின் கால்டிக்கும் 'ஒரு காய்' உருண்டு வந்தது. சேகர் அதனை எடுத்தான்.

பளபளவென்று ஒரு மினுமினுப்பு! பந்து போல் உருவம். மெத்தென்று மிருதுத்தன்மை. மனத்தில் குளிர்ச்சி தரும் அழகு!

சேகருக்கு அது மிகவும் பிடித்திருந்தது.



கடையில் குவித்து வைத்திருக்கும் காய்களுடன் அதை வைத்திட நினைத்தான். காய்கறிக் கூடை உயரத்தில் இருந்தது. எட்டவில்லை. முயன்றான்; முடியவில்லை. ,அந்த வினாடிதான்...

ஒருசிறியநினைவு.நெருப்புப்பொறியாக அவனுடைய மனத்தில் விழுந்தது!

சேகர் கடைக்காரரைப் பார்த்தான். அவர் இவனைக் கவனிக்கவில்லை. வியாபாரத்தில் 'மும்முரமாக ஈடுபட்டிருந்தார். தன்னைச் சுற்றிலும் ஒருமுறைபார்த்துக்கொண்டான்.எவரும்இவனைக்கவனிப்பதாகவேதெரியவில்லை!

இப்போது... அவனிடம் ஒரு கத்தரிக்காய் இருந்தது. நல்ல... பருத்த... சுத்தமான கத்தரிக்காய்! ''இதை வைத்துக் கொண்டால் என்ன? வருகின்ற லாபத்தை விடுவானேன்?''

அவன்முடிவுசெய்துகொண்டான்.

சிவகாமி அம்மாள் வியாபாரத்தை முடித்தார். அவரும் கத்தரிக்காய்தான் வாங்கி இருந்தார். சேகருக்கு அதில் சந்தோஷம். தாயாருடன் வீட்டிற்குத் திரும்பினான்.

வீட்டிற்கு வந்ததும்...

அம்மாவிடம் நடந்ததைச் சொன்னான். தான் எடுத்து வந்த 'அந்தக் கத்தரிக்காயை' அவரிடம் கொடுத்தான்.

அம்மாவிற்கு இது அறவே பிடிக்கவில்லை. மிகவும் வருத்தப்பட்டார். சேகரும் தனது நடத்தைக்குச் சமாதானம் சொன்னான்.

''நான் விரும்பி எடுக்கவில்லை. அதனால் இதைத் 'திருட்டுத்தனம்' என்று சொல்ல முடியாது. அதுவே என்னைத் தேடி வந்தது! இந்தக் காய் சற்று வேகமாக வீதிக்கு ஓடி இருந்தால்... நிச்சயமாக நசுங்கிப் போயிருக்கும். அதனால் எவருக்கும் லாபம் இல்லை. கடைக்காரருக்கும் இந்த 'ஒரு காய்' போனதால் பெரிய நஷ்டமா?''

—இப்படிப் பல காரணங்களைச் சொன்னான்.


அம்மா எல்லாவற்றையும் கேட

## எதைக் காப்பி அடித்தான்?

அம்மா: ஏ, கோபு, தம்பி ரகு உன்னைப் பார்த்துப் பார்த்துக் காப்பி அடிச்சானு சொல்றியே! என்னத்தைடா காப்பி அடிச்சான்?

கோபு: நான் காலையிலே எழுந்து பல் தேய்ச்சு, குளிச்சு, சாப்பிட்டு பள்ளிக்கூடம் கிளம்பினா அவனும் என்னைப் பார்த்து அப்படியே செய்கிறானே!

—எம். கே. பசிகர்.



டார். கடைசி நேரத்தில் பதில் சொன்னார்.

"நமக்கு என்று இல்லாத பொருள்.. அது எதுவானால் என்ன? எப்படி வந்தால்தான் என்ன...? அதன்மீது 'இச்சை' வைத்தல் கூடாது. அதுதான் நல்லது. கெட்ட பழக்கத்திற்கு நம்மை இழுத்துச் செல்லும் எதையும் நாம் விரும்புவது கூடாது. அவரவர்களுக்கு உரியதை ஆண்டவன் நிச்சயம் செய்து வைக்கிறான்."

அம்மாவின் புத்திமதிகள்... சேகருக்கு அந்த நேரத்தில் 'திருப்தி' தரவில்லை. அம்மாவும் அதுகுறித்துப் பெரிது படுத்திக் கொள்ளவில்லை.

ஒரே ஒரு காய்...! இதை எடுத்துக் கொண்டு காய்கறிக் கடைக்குச் செல்வது நன்றல்ல. அது அவசியமில்லை. அம்மாவும் அந்தக் காயை எடுத்துக் கொண்டார். வாங்கி வந்த கத்திரிக் காய்களுடன் சேர்த்துக் கொண்டார்.

மறுநாள்... காலை நேரம்!

அம்மா சமையல் அறையில் இருந்தார்.

சேகர் பள்ளிக்கூடம் செல்லவேண்டும். பாடப் புத்தகங்களை எடுத்து வைத்துக் கொண்டு இருந்தான்.

"சேகர்... சேகர்..." — அம்மா அழைத்தார்.

அவன் சமையல் அறைக்குள் நுழைந்தான்.

அங்கே—

அவர் கத்திரிக்காயை நறுக்கிக் கொண்டு இருந்தார். கையில் 'ஒன்று' இருந்தது அதன் உள்ளே... இரண்டு மூன்று புழுக்கள்...! நெளிந்து கொண்டிருந்தன.

சேகர் வியப்போடு அம்மாவைப் பார்த்தான்.

அம்மா சொன்னார்:

"சேகர்... இந்தக் கத்திரிக்காய் கெட்டு விட்டது. உள்ளே பூச்சிகள் வந்து விட்டன. இப்போது பார்த்தாயா...? 'ஒரு காய் நமக்கு லாபம்' என்று கணக்குப் போட்டாயே...! அது நடக்கவில்லை."

சேகர் முந்திக் கொண்டான்.

"இந்தக் காயா...? இது நான் எடுத்து வந்தது இல்லை. அது வேறு ஒன்று அம்மா! எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது."

அவனுக்கு அம்மா பதில் சொன்னார்.

"சேகர்.... அது வேறுதான்! இருக்கட்டுமே. மொத்தக் கணக்கில் பலன் என்ன? லாபம் 'ஒரு காய்' என்று நினைத்தாய். இதோ... ஒரு காய் கெட்டு விட்டது. கடைசியாக... இலவசமாக நீ எடுத்து வந்த காய் நமக்குப் பயன் இல்லாதபடி... நாம் வாங்கி வந்த கத்திரிக்காய்களில் ஒன்று கெட்டு விட்டது. இதனால்தான் நான் சொன்னது.. தவறான வழியில் வருகின்ற 'லாபம்' வேறு வகையில் நஷ்டத்தை உண்டாக்கிவிடும். நமக்கு என்று நியாயமான வழிகளில் 'பெறுவது' தான் என்றும் நமக்கே உரியதாக அமைகிறது."

அம்மாவின் அறிவுரை சேகருக்குப் புரிந்தது போல் இருந்தது.

'தேவையற்ற வழிகளில் ஆசைகள் கொள்வது தவறு' என்று தீர்மானித்துக் கொண்டான்.

# சித்திரப் புதிர்! 6

ஆழி

நிழலுருவில் இருக்கும் இவர் **1** யார் தெரியுமா?





**2** நமது தேசியப்பறவை மயில். தெரியும். ஆனால், வெள்ளை மயிலைத் தனது தேசியப்பறவையாக வைத்திருக்கும் நாடு எது?




**3** இது எந்த நாட்டின் தேசியச் சின்னம்?



**4** தமிழ் இலக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கின்ற மலர்களில் இதுவும் ஒன்று. இது என்ன மலர், தெரிகிறதா?

**5** இந்தப் பெண் என்ன செய்கிறாள்?



• *விடைகள் வேறு பக்கம்....*



# மைதான விளையாட்டுக்கள்

1928ம் வருஷம் எண்ணூறு மீட்டர் ஓட்டப் பந்தயம் பெண்களுக்காக நடைபெற்றது. பதினோரு பெண்கள் அந்தப் பந்தயத்தில் ஓடிக் கொண்டிருந்தபோது ஐந்து பெண்கள் இறுதிக் கட்டத்தை அடைவதற்கு முன்பே பந்தயத்திலிருந்து விலகிக் கொண்டனர். இறுதிக் கட்டத்தை அடைந்த ஐந்து பெண்கள் மூர்ச்சையாகி விழுந்தனர். பந்தயத்தைத் துவக்கும் பெண்மணி டிரஸ்ஸிங் அறையில் இதைக் கேட்டு மூர்ச்சையாகியிருக்கிறார். இந்த எண்ணூறு மீட்டர் பந்தயத்தை ஒலிம்பிக்கில் மெல்லியளான பெண்களுக்கு வேண்டாம் என்று முடிவெடுத்தனர். ஆனால், 1960ம் வருஷம் பெண்கள் அதி தீவிரத்துடன் மறுபடியும் எண்ணூறு மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொள்ள முன் வந்தனர்.

ஓட்டப் பந்தயத்தில் steeple chase என்னும் பந்தயத்தில் ஓட்ட வீரர்கள் 3000 மீட்டர் தூரத்துக்கு 28 தடைகளைக் குதித்து ஏழு நீர்க்குதிகளையும் கடக்க வேண்டும். Steeple chase தடைகள் 80 லிருந்து 100 கிலோகிராம் எடையில் மைதானத்தின் குறுக்காகப் பொருத்தப்படும். தடைகள் உலோகத்தில் செய்யப்பட்டு மேல்தட்டு மரத்தினால் இணைக்கப்பட்டிருக்கும். தடையோட்டத்தைக் கடக்கையில் பந்தய வீரரின் பாதமோ, காலோ பட்டுவிட்டால் அவர் நிராகரிக்கப்படுவார். தனது பாதையை மீறி வேறு பாதையில் சென்று தடையைக் கடந்தாலும் அவருக்குநிராகரிப்புகிட்டும். வேண்டுமென்றே கையினாலோ, காலினாலோ தடைகளைக் கீழே தள்ளிவிட்டாலும் அவருக்குத் தடை உத்தரவு கிடைக்கும். சாதாரணமாகத் தடையோட்டப் பந்தயங்களில் தடைகள் ஆடவர்களுக்கு மூன்றடி மூன்றங்குல உயரத்திலும், பெண்களுக்கு இரண்டடி ஒன்பதங்குல உயரத்திலும் அமைந்திருக்கும்.

ஓட்டப் பந்தயங்களில் மாரத்தான் பந்தயம் மிகப் பிரசித்தமானது. மாரத்தான் ஓட்டப்பந்தயம் 42.195 கிலோமீட்டர் தூரத்துக்கு ஓட வேண்டியிருக்-

கும். ஆரம்பமும் முடிவும் மைதான அரங்கிலும் மற்றவை பாதைகளில் வேகமாக ஓடுவார்கள். ஓட்டப் பந்தய வீரர்களுக்கு, அவர்கள் கடந்துள்ள தூரத்தை வழி நெடுக அறிவிக்கப் பட்டிருக்கும்.

வெகு தூரம் மாரத்தான் பந்தயத்தில் ஓட வேண்டியிருப்பதால் உணவு வகைகளும் பானங்களும் 11 கிலோ மீட்டர் தூரத்தில் அதிகாரபூர்வமான ஸ்டால்களில் வழங்கப்படும்.

குச்சி வீசுதலை 'Javelin Throw' என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுகிறார்கள். ஜாவலின் குச்சியை வட்டப் பகுதியிலிருந்து குறிப்பிட்ட பிரதேசத்துக்கு வீச வேண்டும். யார் அதிக தூரம் வீசுகிறார்களோ அவர் வெற்றியாளர். ஒவ்வொருவருக்கும் ஆறுமுறை பயிற்சி செய்து வீசிக் கொள்ளலாம். போட்டியாளர் குச்சி மைதானப் பகுதியைத் தொடுவதுவரை-அவர் நிற்கும் பிரதேசத்திலிருந்து விலகக் கூடாது. நீதிபதி போட்டியாளருக்கு வெள்ளைக் கொடி காட்டினால் அவர் சரியாக வீசியிருக்கிறார் என்று அர்த்தம். சிவப்புக் கொடி காட்டினாலோ 'தவறு' என்று புரிந்து கொள்ளலாம். குச்சியின் தலை தொடும் பகுதியைக் குறிப்பிட்டு



வைத்துக் கொண்டு தூரத்தைக் கணக்கிடுவார்கள். அமெரிக்காவில் கேட் ஸ்கிமிட் 1977 ல் 227 அடி 5'' தூரம் வீசி உலகரிகார்டுஸ்தாபித்திருக்கிறார். பதினைந்து வயதில் பின்லாந்துக்குச் சென்று நான்கு வருஷப் பயிற்சியை கேட் ஸ்கிமிட் வழங்கப்பட்டும் அதை அவர் மறுத்துவிட்டார். இவரைப்பற்றி கிழக்கு ஜெர்மனி, ரஷ்யப் பயிற்சியாளர்கள், நல்ல பயிற்சி கிடைத்தால் 240 அடி தூரமும் வீசுவார் என்று நம்பிக்கை உள்ளதாகத் தெரிவித்தனர்.

'ஷாட்புட்' அல்லது குண்டு வீச்சு மைதான விளையாட்டுக்களில் ஒன்று. வட்டப் பகுதியிலிருந்து குண்டினை எறிய வேண்டும். அது குறிப்பிட்ட எல்லைப் பகுதியினைச் சென்றடைந்தால்தான் வெற்றி இலக்கைப் பெறும். ஆறு வீச்சுக்களில் எந்த வீச்சு அதிக தூரத்தைக் கடக்கிறதோ, அதுவே வெற்றியைக் குறிக்கும். போட்டியாளர் குண்டு மைதானப் பகுதியைத் தொடும்வரை அவர் வீசும் பகுதியிலிருந்து விலகக் கூடாது.

பல்கேரியாவைச் சேர்ந்த இவல்கா கிறிஸ்தோவா பெண்களுக்கான 'ஷாட்புட்' உலக ரிகார்டைக் கண்டவர். அவர் வீசிய தூரம் 71 அடி 9 3/4 அங்குலம். அவர் சரித்திரத்தில் பிரசித்தி பெற்ற பன்னிரண்டு வீராங்கனைகளை முறியடித்த சிறப்பைப் பெற்றவர்.

தட்டு வீச்சு (Discus Throw), Hammer Throw என்று இரு மைதான விளையாட்டுக்களும் பிரசித்தமானவை. 'Discus Throw'வில் ஒலிம்பிக், உலக சாம்பியன் பைனா மைல்னிக் ரஷ்யாவின் புகழை உயர்த்தியவர். இவர் வீசிய தூரம் 231 அடி 3 அங்குலமாகும். இவர் பதினோரு தடவை உலக ரிகார்டை நிரூபித்தது தனிச் சிறப்பு.

உயரம் தாண்டலில் இரு கம்பங்களுக்கிடையே குச்சி பொருத்தப் பட்டுப் போட்டியாளர்கள் தாண்டுவார்கள். போட்டியாளர்களுக்கு

## குண்டுமணி



மூன்று தோல்விகளே அவரை மேலும் தாண்டுவதிலிருந்து விலக்கி வைக்கும். மூன்று நீதிபதிகள் இந்த உயரம் தாண்டல் போட்டிகளை நிர்வகிப்பார்கள்.

உயரம் தாண்டும்போது போட்டியாளர் குச்சியைத் தட்டிவிடக்கூடாது.

கிழக்கு ஜெர்மனியைச் சேர்ந்த ரோஸ்மேரி அக்கர்மான் 9½ அடி தாண்டி உலக ரிகார்டு கண்டவர். இவர் 1977ல் மேற்கு பெர்லினில் 6' 6 3/4'' உயரம் தாண்டி முதல் உலக ரிகார்டு கண்டவர். இவருக்கு நான்கு தடவை ஐரோப்பிய சாம்பியன் பட்டம் கிட்டியது. 1976ல் ஒலிம்பிக் தங்கப் பதக்கம் இவரது திறமைக்கு மற்றொரு சான்று.

'போல்ட்வால்ட்' குச்சியின் உதவியினால் அதிக உயரத்தை தாண்டுவதாகும். மூன்று நீதிபதிகள் இந்தப் போட்டியினை நிர்வகிப்பார்கள்.

நீண்ட தூரம் தாண்டலும் மைதான ஒட்டப் பந்தய விளையாட்டுக்களில் இடம் பெறுகிறது. போட்டியாளர்கள் நீண்ட தூரம் மணலில் போய் குதிப்பது ரசிக்கத்தக்கது. இந்தப் போட்டிக்கு நான்கு நீதிபதிகள் உண்டு.

நீண்ட தூரம் தாண்டலில் கிழக்கு ஜெர்மனியைச் சேர்ந்த சிகுரன்சிகல் 1976 ஒலிம்பிக் பந்தயத்தில் தங்கப் பதக்கம் சூடியவர். இவரது நீண்ட தூர 22 அடி 11¼ அங்குலம் தாண்டியது உலக ரிகார்டாகும்.

# சித்திரப் புதிர்-6

## விடைகள்

1. சுவாமி விவேகானந்தர்
2. பர்மா
3. ஆஸ்திரேலியா
4. காந்தள் மலர்
5. ரப்பர் மரத்தில் ரப்பர் பால் எடுக்கிறாள்.



# மாலியும் ஜாலியும் (16) கருத்து: எம்.ஆர்.ராஜன்






மேலே உள்ள படங்களைப் பாருங்கள். இவை பாரதி பாடல்களில் காணப்படும் 12 வரிகளுக்கு ஏற்ற வகையில் வரையப்பட்டுள்ளன. அந்தப் பன்னிரண்டு வரிகள் யாவை? கண்டுபிடித்து எழுதிப் பாருங்கள்.



# இரண்டு பெண்டாட்டிக்காரர்

பழைய கதைப் புதிய பாடல்

அற்புத சாமி நல்லவராம்
அவர்க்கு இரண்டு மனைவியராம்

மூத்தவள் அவரைக் காட்டிலுமே
மூன்று வயது முதிர்ந்தவளாம்

இளையவள் அவரது வயதைவிட
எட்டு வயது குறைந்தவளாம்.

* * * * *

ஒரு நாள் இளையவள் அவர்தலையை
உற்றுப் பார்த்தாள்; பார்த்ததுமே

"ஐயோ! தலைமயிர் நரைக்கிறதே!
அனைவரும் என்ன சொல்லிடுவார்?

'கிழவரை மணந்த குமரியெனக்
கேலி செய்வரே! என் செய்வேன்?'

என்றே அவளும் எண்ணினளே
இதற்கொரு வழியும் கண்டனளே

தினமும் காலையில் அவர்தலையில்
தெரிந்திடும் நரைமயிர் சிலவற்றை

'வெடுக்கு வெடுக்'கெனப் பிடுங்கினளே,
வேதனை யால்அவர் துடித்தனரே.

* * * * *

மூத்தவள் மட்டும் சளைத்தவளா?
மும்முர மாக எண்ணினளே

"எனது தலையில் பெரும்பகுதி
ஏற்கென வேதான் நரைத்துளதே.

என்றன் கணவரின் தலையுடனே
எனது தலையைப் பார்ப்பவர்கள்,

'வாலிப ரான கணவர்க்கு
வாய்த்தனள் நரைத்த கிழவி'யென

என்னைக் கேலி செய்திடுவர்
இதற்கொரு வேலை செய்திடலாம்."

என்றே எண்ணினள், அதன்படியே
எழுந்ததும் தினமும் அவர்தலையில்,

கறுப்பாய் உள்ள மயிர்களையே
கருத்துடன் அகற்றிட லாயினளே

தலையில் ஒருமயிர் பிடுங்கிடினும்
தாங்கிட நம்மால் முடிகிறதோ?

எப்படி அற்புதசாமியுமே
இதனைப் பொறுத்தார்? யானறியேன்!

தினம்தினம் மனைவியர் இருவருமே
சிலசில மயிர்களை அகற்றியதால்

குறைந்தன; குறைந்தன; வெகுவிரைவில்
மறைந்தன தலைமயிர் யாவையுமே!

* * * * *

சத்திகள் எவையும் இல்லாமல்
சைத்திறம் ஒன்றே துணையாக

மொட்டை அடித்தனர் அவர்தலையை
மூத்தவள், இளையவள் இருவருமே!


'சிப்பும் எண்ணெயும் இனிவேண்டா
சிக்கன மாக வாழ்ந்திடலாம்.'

என்றே அற்புத சாமியுமே
எண்ணிட வில்லை, அச்சமயம்!

"இருவரை மணந்தேன், ஆதலினால்
என்றன் தலையும், ஐயையோ,

பாலை வனமாய்ப் போனதுவே!
பட்டது போதும்' என்றனரே!

**கிழந்தைத் கவிஞர்**



# தாடிக்காரர் தப்பித்தார்!

'வையவன்'

"இந்தப் பக்கமாத்தாண்டா அவன் ஓடி வந்திருக்கணும்!"

தெருக்கோடியில் திமுதிமுவென்று பல பேர் ஓடிவரும் காலடி ஓசை. கூடவே அந்தக் கூக்குரல்.

"இங்கேதான் ஏதாவது ஒரு வீட்டுக்குள்ளே புகுந்திருப்பான்" என்று ஒரு குரல் இப்போது ஓங்கி ஒலித்தது.

"அப்ப வீடு வீடா போய்த் தேடுங்க. இதோ இந்தக் கதவைத் தட்டு."

தெருக்கோடியில் இருந்த வீட்டின் கதவு பலமாகத் தட்டப்படும் ஒலி தெளிவாகக் கேட்டது.

தனது வீட்டில் தெரு ஓர அறையில் உட்கார்ந்து கண்களில் வழியும் கண்ணீரைத் துடைத்தவாறே ரேடியோ கேட்டுக் கொண்டிருந்த பாபு ரேடியோவை நிறுத்தினான். எழுந்து போய் விளக்கை அவித்தான்.

கூடத்து நடையில் உட்கார்ந்திருந்த அம்மா திகிலோடு புலம்பினாள்.,

"நமக்கு எதுக்குடா வம்புன்னு சொன்னேனே; கேட்டியா? இப்ப வீடு வீடா வந்து தேடறாங்க. நாம்பதான் இந்த லாரி டிரைவர் சிங்கை ஒளிச்சு வச்சிருக்கோம்னு தெரிஞ்சா நம் கதி என்ன ஆகும்?"

அம்மாவின் குரல் பதறிற்று.

பாபு பதில் சொல்லவில்லை. அறையில் கட்டில் மீது போர்த்திக் கொண்டு படுத்திருந்த தாடிக்கார சிங்கைத் தொட்டு எழுப்பினான்.

இருளில் அவன் தடுமாறியவாறே எழுந்து நிற்பது தெரிந்தது. அவன் கையைப் பிடித்து இழுத்து, கட்டிலுக்கடியில் ஒளிந்து கொள்ளுமாறு சமிக்ஞை செய்தான் பாபு.

அந்த சிங் பதறிப் போய்க் குனிந்து காலடியில் படுத்தான். அவனுக்கு மூச்சு இரைத்தது. பாபு தொட்ட போது சிங்கின் கை நடுங்கியது. ஓர் உயிரின் துடிப்பு பாபுவின் இதயத்தில் வந்து தாக்கிற்று.

"அவன் நல்லவனோ கெட்டவனோ! அப்பா ஊர்லே இல்லாத நேரத்திலே, உனக்கு எதுக்குடா இந்தப் பெரிய தனம்?" அம்மா, குரலை அடக்கிக் கொண்டு தவித்தாள்.

கும்பல் இன்னொரு வீட்டுக் கதவை இடிக்கும் ஓசை கேட்டது. இடித்த கதவு உடனே திறக்கவில்லை. மீண்டும் இடிக்கும் ஒலி.

"பாபு... நான் சொன்னா நீ கேக்க மாட்டே... இந்த வீண் தொல்லை நமக்கு

வேணும். அவங்க நம்ம வீட்டுக் கதவை இடிச்சதும் நான் போய், 'இவன் இங்க தான் ஒளிஞ்சிருக்கான்'னு சொல்லத் தான் போறேன்.''

பாபு ஒரு பெருமூச்சு விட்டான். பிறகு ''என்ன நடக்கும்னு தெரியுமா ஒனக்கு?'' என்றான்.

அம்மா பதில் சொல்லவில்லை.

''இந்த ஆளை அடிச்சு நொறுக்கிக் கூறு கூறாக்கிடுவாங்க. ஏற்கெனவே இவர் ஓட்டி வந்த லாரியை சொக்கப் பனைக் கொளுத்தறாப்பிலே கொளுத்திட்டாங்க; இப்ப அதே வெறியிலே இவரைக் கொலையும் பண்ணிடுவாங்க!'' என்றான் பாபு.

''இவங்கள்ளே ஒருத்தன்தானேடா இந்திராகாந்தியம்மாவைச் சுட்டவன். இவங்களுக்கு ஏண்டா கருணை காட்டி நாம்ப சிக்கல்லே மாட்டிக்கணும்?'' என்று கேட்டாள் அம்மா.

''அதைச் செய்தது இவர் இல்லியேம்மா. ஏதோ வயித்துப் பிழைப்புக்காக முந்நூறோ நானூறோ கிடைக்கும்னு ஆயிரம் ஆயிரத்தைந்நூறு கிலோ மீட்டர் லாரியை ஓட்டிக்கிட்டு வர்றாரு.''

கும்பல் இன்னும் நெருங்கி வந்துவிட்டது. இன்னொரு கதவைத் தட்டும் ஓசை கேட்டது.

''இவர் ஓடி வந்தப்ப பார்த்திருந்தா நீ கூட உருகிட்டிருப்பே அம்மா. வேட்டைக்காரர்களுக்குப் பயந்து ஓடி வர்ற மான் மாதிரி சட்டையும் பைஜாமாவும் கிழிஞ்சு போய் என்ன கிலி...! எவ்வளவு திகில்! தெரியுமா?''

அம்மா பதிலுக்கு ஒரு கேள்வி கேட்டாள்.

''நீ காப்பாத்திட்டா மட்டும் இவன் திருந்திடுவானா?''

பாபு பதிலுக்கு ஒரு கேள்வி கேட்டான்.

''திருந்தறதுக்கு இவர் என்ன தப்பு செஞ்சிருக்கார்?''

''அவன் சிங்காப் பொறந்திருக்கானே!'' என்றாள் அம்மா.

''நீயும் அந்த வெறிபிடித்த கும்பல் மாதிரியே பேசறியே அம்மா. எவனாவது ஒருத்தனுக்குப் பைத்தியம் பிடிச்சுட்டா ஒரு இனத்துக்கே பிடிச்சுடுமா?''

கும்பல் இன்னும் நெருங்கிவிட்டது. எதிர் வீட்டுக் கதவைத் தட்டினார்கள்.

''தேசிய ஒருமைபபாடு... ஒற்றுமைன்னா ஒனக்குப் புரியாது. ஒண்ணு சொல்றேன் கேளு. நமது புதிய பிரதமர் அம்மாவை இழந்துட்டார். இப்ப இவரை வெளியிலே விட்டா, இவர் மனைவி கணவனை இழந்துடுவாங்க.



இவர் குழந்தைகள் அப்பாவை இழந்துடுவாங்க. கணக்கு சரியாயிடுமா? ஒண்ணுமே தெரியாத அப்பாவியின் உயிர் போனால் யாருக்கு என்ன பயன்? சொல்லும்மா!''

அம்மா மௌனமானாள்.

இப்போது அவர்கள் வீட்டுக்கதவை இடிக்கிற ஒலி வந்தது.

''யாரது?'' என்று கேட்டான் பாபு.

''லைட்டைப்போடு'' என்றுவெளியிலிருந்து உத்தரவு வந்தது.

பாபு விளக்கைப் போட்டுவிட்டு ஓரக் கண்களால் படுக்கை விரிப்பு கட்டிலின் கீழே இருபுறமும் தரையைத் தொடுவதைக் கவனித்தான்.

''என்னங்க இவ்வளவு கூட்டம்?''

பாபு கேட்டுக் கொண்டே கதவைத் திறந்தான்.

அம்மாவும் எழுந்து கதவருகில் வந்தாள். அந்த நேரத்தில் அவள் உண்மையைச் சொல்லி, காட்டிக்கொடுத்து விடுவாளோ என்ற அச்சம் பாபுவின் மனத்தைச் சில்லிடச் செய்தது.

''இந்தப் பக்கம் ஒரு தாடிக்கார சிங் ஓடியாந்தானா?''

''இல்லியே'' என்றான் பாபு.

''யாருமே வரலியே! இவ்வளவு நேரம் இவன் ரேடியோ கேட்டுக்கிட்டிருந்து இப்பத்தான் படுத்தான். லைட் அவ்ச்சு அஞ்சு நிமிஷம் ஆயிருக்கும்!'' என்றாள் அம்மா.

கூட்டத்தில் ஒரு குரல். ''இங்க இருக்க மாட்டாம்பா... அதான் அந்த அம்மாவே சொல்றாங்களே... லைட் எரியற வீட்டிலேயா நுழைவான்... மலைப்பக்கமா ஓடியிருப்பான்.''

''சரி வாங்கப்பா.''

கும்பல் நகர்ந்தது. அதற்கப்புறம் கதவுகள் தட்டப்படும் ஓசை கேட்கவில்லை. அந்தக் குரல்கள் தேய்ந்து மறைந்தன.

''தீமைக்குஎதிரா ஒருநன்மைசெய்ய நமக்கு ஒரு வாய்ப்பு இது. மனுஷங்களும் மனுஷத்தன்மையும் அவ்வளவு சீக்கிரமா சாகக் கூடாது. சாக விடக் கூடாது.. இதை நம்பினாத்தானேம்மா இந்த நாட்டுக்கு நல்லது.''

அம்மாவுக்கு ஒரே ஒரு பயம் மிச்சமிருந்தது.

''பொழுது விடிஞ்சா... எப்படி?''

பாபு தைரியமளித்தான்.

''நீ பயப்படாதே. ஊர் சந்தடி அடங்கியதும்இவரைபோலீஸ்ஸ்டேஷன்லே பாதுகாப்பா சேத்துடறேன். நீ போய் சப்பாத்தி தயார் பண்ணு. இவர் எப்போ சாப்பிட்டாரோ! இவருக்கு சப்பாத்திதான் பிரியமா இருக்கும்.''

பாபு கதவைத் தாளிட்டான்.


## பாரதி புதிர்-2 விடை.

கொத்தித்திரியுமந்தக்கோழி— அதைக்
கூட்டி விளையாடு பாப்பா.
எத்தித்திருடுமந்தக்காக்காய்— அதற்கு
இரக்கப் படவேண்டும் பாப்பா.

பாலைப் பொழிந்துதரும் பாப்பா—
அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா
வாலைக் குழைத்துவரும் நாய்தான்—
அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா.

வண்டி இழுக்கும் நல்ல குதிரை—
நெல்லு
வயலில் உழுது வரும் மாடு.
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு—
இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா.

ருஷ்ய நாட்டுக் கதை



# சுந்தர இளைஞனும் சூரியன் தங்கையும்

தமிழில்: எச். கிருஷ்ணமூர்த்தி

தண்ணீர் கொண்டு வருவதற்காக ஒரு பெண் ஆற்றுக்குச் சென்றாள். அங்கே புதிதாக ஒரு பாசில் செடி முளைத்திருந்தது. அதிலிருந்து நறுமணம் வீசியது. அதன் இலைகளைப் பறித்து அவள் முகர்ந்தாள். உடனே கருவுற்றாள்.

வீட்டிற்கு வந்ததும் அவளுடைய பெற்றோர்கள் அவளைத் திட்டினர். அடித்தனர். வீட்டை விட்டே துரத்தி விட்டனர். அழுது கொண்டே அவள் காட்டிற்குச் சென்றாள்.

அங்கே கூனல் முதுகும், நீண்ட தாடியும் கொண்ட ஒரு தாத்தா இருந்தார். அவர் அவள் மீது இரக்கப்பட்டுத் தம்முடைய குகைக்கு அவளை அழைத்துச் சென்றார். சொந்தப் பெண்ணைப் போல அவளை வளர்த்தார். குகை வாசலில் வெள்ளாடுகள் இருந்தன. ஆட்டுப் பால்தான் அவர்களுடைய முக்கிய ஆகாரம்.

நாட்கள் உருண்டன. அந்தப் பெண்ணுக்கு ஓர் அழகான ஆண் குழந்தை பிறந்தது. தாத்தாவுக்கும், பெண்ணுக்கும் ஒரே சந்தோஷம். குழந்தை நல்லவனாகவும், வல்லவனாகவும் வளர வேண்டும் என்று தாய் இறைவனை வேண்டினாள். குழந்தையின் காதில் சில மந்திரங்களை ஓதினாள். மண்ணில் தோன்றும் அநீதிகளை எல்லாம் அவன் வீரத்தோடு எதிர்த்துப் போராட வேண்டும் என்பதற்காக ஒரு வாளை ஆட்டித் திருஷ்டி கழித்தார் தாத்தா. பிறகு, தாம் சேகரித்து வைத்திருந்த அபூர்வ ஆயுதங்களான ஒரு குறுந்தடியையும், ஒரு நீண்ட வாளையும் அளித்துத் தாத்தா குழந்தையை வாழ்த்தினார். குழந்தை அழகாக இருந்ததால் அதற்கு பெத்-புருமஸ் என்று அம்மா பெயரிட்டாள் 'புரு' என்று சுருக்கமாக அழைத்தாள்.

சிறிது நாட்களில் தாத்தா இறந்தார். புருவும், அம்மாவும் ஒருவர் மீது ஒருவர் உயிரையே வைத்திருந்தனர் புரு வளர்ந்து பெரியவன் ஆனான்.

ஒருநாள் புரு வேட்டையாடுவதற்காகக் காட்டில் வெகுதூரம் சென்றான். அங்கே ஓர் அபூர்வ அரண்மனையைக் கண்டான். கதவுகள் திறந்தே இருந்தன. ஆட்கள் யாரும் இருக்கவில்லை. புரு உள்ளே நுழைந்தான். ஒவ்வொரு அறையிலும் பல அதிசயப் பொருள்களைக் கண்டான்.

திடீரென வாசலில் பேரிரைச்சல் கேட்டது. கூட்டமாக ஆட்கள் வரும் ஒலிகள் எழுந்தன. ஒரு தூணின் மறைவில் நின்று கொண்டு புரு வாயிலை நோக்கினான். அதி பயங்கரமான ஏழு மிருக பூதங்கள் அட்டகாசத்தோடு உள்ளே நுழைந்து கொண்டிருந்தன

பூதங்கள் நல்ல உயரம். அதற்கேற்ற பருமன். விநோத உருவம். வெள்ளாட்டுத் தலை. வளைந்த கொம்புகள். விஷக்

கண்கள். வெறிப் பார்வை. ஓநாய் வாய். உளிப் பற்கள். கழுதைக் கால்கள். நீண்ட இறக்கை. அடர்ந்த வால். இத்தகைய கோலத்துடன் பூதங்கள் குதித்துக் குதித்து வந்தன. ஒவ்வொரு பூதமும் ஒரு மனிதனைத் தூக்கி வந்தது. முற்றத்தில் இருந்த ஒரு பிரும்மாண்டமான அண்டாவுக்குள் மனிதர்களைப் போட்டு அடியில் தீ மூட்டின. பாவம் மனிதர்கள்! அண்டா நீரில் முழுகி உயிர் துறந்தனர். வெந்த உடல்களை வெளியே எடுத்துப் பூதங்கள் கூத்தாடிக் கொண்டே சாப்பிட்டன.

புருவால் இதை நம்பவும் முடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை, தயாராக வாளைப் பிடித்துக் கொண்டே மறைந்து நின்றான். தற்செயலாக ஒரு பூதம் அவனைப் பார்த்தது. ''மனிதன்! மனிதன்! அவனைப் பிடியுங்கள்! சாப்பிடலாம்!'' என்று கூச்சலிட்டது.

எல்லா பூதங்களும் புருவின் மேல் பாய்ந்தன. புரு, தாத்தா தந்த வாளை வீசி ஒரே மூச்சில் பூதங்களின் தலைகளைச் சீவினான். முட்டைக்கோஸ் உருள்வது போலப் பூதத்தின் தலைகள் தரையில் உருண்டன. ஆறு பூதங்கள் மாண்டன. ஏழாவது பூதம் காயமடைந்து வலி தாங்க முடியாமல் பின் வாங்கியது. அது ஒரு ரகசியக் கதவைத் திறந்து, சுரங்கப் பாதையில் ஓடியது. கடைசியில் பாதாளச் சிறையை அடைந்தது. துரத்திச் சென்ற புரு உடனே சிறைக்கதவைத் தாளிட்டான். வெளிக் கதவைப் பூட்டிச் சாவியை எடுத்துக் கொண்டான். குகைக்குத் திரும்பினான்.

புருவும், அம்மாவும் குகையிலிருந்து அந்த அரண்மனையில் குடியேறினர். சிறைச் சாவியை அம்மாவிடம் கொடுத்து, ''இதைப் பத்திரமாக வை. சிறையில் ஒரு பூதம் இருக்கிறது'', என்றான் புரு. தாயும், மகனும் அரண்மனையிலிருந்த செல்வங்களை எல்லாம் அனுபவித்தனர்.

அடுத்த நாட்டில் ஒரு மந்திரக் கிழவி இருந்தாள். மக்களுக்குத் தொல்லை



கொடுப்பதே அவளுடைய வேலை. அந்த ஏழு பயங்கர பூதங்களையும் வளர்த்து உலகில் உலாவ விட்டவள் அவள்தான். அவை திரும்பி வராததால் அவள் கவலைப்பட்டாள்.

கிழவி பூதங்களைத் தேடி அரண்மனைக்குப் போனாள். ஆறு பூதங்கள் இறந்த செய்தியை அறிந்து வருந்தினாள். புரூ வெளியே போயிருந்தான். தனியாக இருந்த அம்மாவைத் தாக்கிச் சாவியை கைப்பற்றினாள். சிறையிலிருந்தபூதத்தைவிடுவித்தாள். புரூவின் அம்மாவை அதே சிறையில் அடைத்தாள்.

"புரூவை உடனே கொன்று விட்டு வா", என்று பூதத்திற்குக் கிழவி கட்டளையிட்டாள். புரூவின் பெயரைக் கேட்டதுமே பூதம் பயந்து நடுங்கியது. "என்னால்முடியாது",என்றுசொல்லியது. "உன்னால் முடியாவிட்டால் நானே அவனை ஒரு கை பார்க்கிறேன். நான் கூப்பிடும்போது என் உதவிக்கு வா",என்றுசொல்லிக்கிழவிபூதத்தை வேறோர் அறையில் ஒளித்து வைத்தாள். கிழவி புரூவின் அம்மாவைப் போலவே உருவம் தரித்தாள். ஒரு கொடிய நோயால் கஷ்டப்படுவதைப் போல நடித்துக் கொண்டே அவள் புரூவின் வருகையை எதிர்நோக்கினாள்.

சில நாட்கள் கழிந்தன. வேட்டைக்குப் போன புரூ வீடு திரும்பினான். அங்கு நடந்த நிகழ்ச்சிகள் எதுவும் அவனுக்குத் தெரியாது. அம்மாவைச் சிறையில் தள்ளிப் பூட்டிவிட்டு, மந்திரக் கிழவி, அம்மாவாக நடித்துக் கொண்டிருந்தாள். அவளையே புரூ தன் சொந்த அம்மாவாக நம்பினான்.

புரூவைகண்டதுமே அவள் ஓவென அழுதாள்: புலம்பினாள். "மகனே புரூ! நான் ஒரு கொடிய நோயால் கஷ்டப் படுகிறேன். ஒரே ஒரு சொட்டுப் பறவைப் பால் எப்படியாவது கொண்டு வா: அதைச் சாப்பிட்டால் தான் என் நோய் நீங்கும்" என்றாள். புரூ அம்மாவைச் சமாதானப் படுத்தினான். ஒரு குடுவையை எடுத்துக் கொண்டு, பறவைப் பாலைத் தேடிப் புறப்பட்டான்.



புரு மலையையும், மடுவையும் கடந் தான். நடந்தான். முதலில் ஒரு ஒளி வீசும் மாளிகையை அடைந்தான். அங்கே ஓர் அழகான பெண்ணைக் கண்டான். தான் வந்த நோக்கத்தை அறிவித்து, அவளுடைய உதவியைக் கோரினான். "எனக்குச் சூரியன்தான் அண்ணா. அவன் பார்க்காத பொருள் இல்லை. அவனுக்குத் தெரியாத விஷயம் இல்லை. அவனைக் கேட்டு உனக்கு உதவி செய்கிறேன்", என்றாள் அந்தப் பெண்.


அந்தப் பெண்ணின் பெயர் கோசி. அவள் சூரியனின் செல்லத் தங்கை. அவளுக்கு முக்காலத்தையும் உணரும் சக்தி இருந்தது. புருவுக்கு எதிர்காலத்தில் வரப்போகும் ஆபத்தை அவள் உணர்ந்தாள். ஆகவே, அவனுக்கு எல்லா வகையிலும் உதவி செய்யத் தீர்மானித்தாள். பறவைப் பாலைப் பற்றித் தன் அண்ணனிடம் விசாரித்தாள்

"கிழக்கே வெகு தூரம் போனால் ஒரு செம்பு மலை வரும். அதை அடுத்த காட்டில் பால் கொடுக்கும் ஒரு ராட்சசப் பறவை இருக்கிறது. அது பயங்கரமானது. மனிதர்களைக் கொத்திக் கிழித்துவிடும்", என்றான் சூரியன்.

புருவிடம்செய்தியைச்சொன்னாள் கோசி. மேலும் பன்னிரண்டு இறகுகள் கொண்ட ஒரு மாயக் குதிரையையும் அவனுக்குப் பரிசாக அளித்து வழி அனுப்பினாள்.

குதிரையின் உதவியால் புரு பல நாடுகளையும் விரைவில் கடந்தான். செம்பு மலையை அடைந்தான். அதை அடுத்த ஒரு குன்றின் உச்சியில் ஒரு பிரம்மாண்டமான கூடு இருந்தது. அதில் ஆனைக் குட்டி அளவுள்ள பல குஞ்சுகள் கத்திக் கொண்டிருந்தன. தாய்ப் பறவை ஒவ்வொரு குஞ்சுக்கும் பால் ஊட்டி வந்தது. புரு அருகில் பறந்துசென்றுகுடுவையைநீட்டினான். பறவை சொரியும் பாலை அதில் பிடித்





தான். குஞ்சுகள் அவனைப் பார்த்துக் கூச்சலிட்டன. தாய்ப் பறவை புருவைத் தாக்க வந்தது. அவன் குதிரையைத் தட்டிவிட்டுப் பறந்து சென்று தப்பித்துக் கொண்டான்.

வழியில் கோசியின் வீட்டில் தங்கிப் புரு ஓய்வு எடுத்தான். அவன் உறங்கும்போது கோசி பறவைப் பாலை எடுத்து ஒளித்து வைத்துவிட்டுக் குடுவையில் அதே மாதிரி தோன்றக் கூடிய பாலை ஊற்றினாள். மறுநாள் புரு தன் ஊருக்குப் புறப்பட்டான்.

அந்தக் கொடிய பறவையிடமிருந்து புரு உயிரோடு திரும்ப மாட்டான் என்று மந்திரக் கிழவி எண்ணிக் கொண்டிருந்தாள். பாலையும் சேகரித்துக் கொண்டு அவன் திரும்பி வந்ததை அறிந்ததும் அவள் மனமுடைந்து போனாள். இருந்தாலும் மறுபடியும் அவனுக்கு என்ன தீங்கிழைக்கலாம் என்று யோசனை செய்தாள்.

பறவைப் பாலை அன்போடு அவளிடம் கொடுத்தான் புரு. அதைப் பருகிவிட்டு அவள் இன்னும் நோயால் அவதிப்படுவதைப் போலப் பாசாங்கு செய்தாள்.

"அம்மா, உனக்கு வேறு என்ன வேண்டும்?" புரு கேட்டான்.

"மகனே, நேற்று ஒரு கனவு கண்டேன். அதன்படி காட்டுப் பன்றியின் குட்டி ஒன்று வேண்டும். அதன் கறியைச் சமைத்துச் சாப்பிட்டால் என் உடம்பு சரியாகிவிடும்", என்றாள்.

"கட்டாயமாகக் கொண்டு வருகிறேன், அம்மா!" என்று சொல்லிக் குதிரை மீதேறிப் புறப்பட்டான் புரு.

புரு நேராகக் கோசியின் மாளிகைக்குச் சென்றான். அவளிடம் ஆலோசனை கேட்டான். அவள் தன் அண்ணனிடம் கேட்டுக் காட்டுப் பன்றிக் குட்டி கிடைக்கும் இடத்தைப் பற்றித் தகவல் சொன்னாள்.

அதன்படி புரு வடக்குத் திசையில் குதிரையைத் தட்டிவிட்டான். வெகு தூரம் போனதும் அகில் மரங்கள் நிறைந்த காடு வந்தது. காட்டுக்கு அருகில் ஓர் ஆறு ஓடியது. ஆற்றங்கரையில் ஒரே சேறு. வெயில் வேளையில் அந்தச் சேற்றில் புரளுவதற்காகக் காட்டுப் பன்றிகள் கூட்டங் கூட்டமாக ஓடிக் கொண்டிருந்தன. கூட்டத்தில் ஒரு குட்டியும் இருந்தது.

புரு சிறிதும் பயப்படாமல் தாவிச் சென்று அந்தப் பன்றிக் குட்டியைப் பிடித்தான். தாய்ப் பன்றி கோபத்தோடு அவனைத் துரத்தியது. புருவின் குதிரை ஆகாயத்தில் கிளம்பிப் பறந்தது. புருவையும், பன்றிக் குட்டியையும் சுமந்து சென்ற குதிரை கோசியின் மாளிகையின் முன்பு நின்றது.

அம்மாவுக்குத் தேவையான பொருள் கிடைத்து விட்டதில் புருவுக்கு அளவில்லாத சந்தோஷம். அவன் ஓய்வெடுக்கும்போது, கோசி காட்டுப் பன்றிக் குட்டியை ஒளித்து வைத்தாள். காட்டுப் பன்றியைப் போலத் தோன்றும் வேறு ஒரு பன்றிக் குட்டியை அந்த இடத்தில் வைத்தாள். கோசியிடம் விடை பெற்றுக்கொண்டு புரு தன் அம்மாவைக் காண விரைந்தான்.

புரு காட்டுப் பன்றிகளிடம் சிக்கி இறந்துபோயிருப்பான் என்றுமந்திரக் கிழவி எண்ணினாள். அதற்கு நேர் மாறாக அவன் வெற்றியோடு திரும்பினான். ஆகவே, அவளுடைய ஆத்திரம் அதிகரித்தது. இருந்தாலும்அதைஅடக்கிக் கொண்டு அவள் இனிமையாகப் பேசி அவனை வரவேற்றாள். பன்றிக் கறியைச் சுவையாகச் சமைத்துப் புரு அவளுக்குக் கொடுத்தான்

அவள் அதை உண்ட பிறகு பெருமூச்சு விட்டாள். ''மகனே! உனக்கு எவ்வளவு கஷ்டம் கொடுத்துவிட்டேன். என்னுடைய நோய் பாதிகூட இன்னும் குணமடையவில்லை. நான் பூரண நலம் பெற வேண்டுமானால், நீ மறுபடியும் பயணம் போக வேண்டும். செத்துப் போன தண்ணீரும், உயிருள்ள தண்ணீரும் எனக்குத் தேவை. அவற்றை நீ கொண்டு வருவாயா?'' என்று கெஞ்சிக் கேட்டாள்.

''அம்மா உனக்குத்தேவையான பொருளைக் கொண்டு வருவதை விட எனக்கு வேறு என்ன வேலை இருக்கிறது? அவை எங்கே இருந்தாலும் கட்டாயமாகக் கொண்டு வருகிறேன்,'' என்று சொல்லிவிட்டுப் புரு புறப்பட்டான்.

குதிரையில் வெகுதூரம் சென்றான். எங்கே போவது என்றே அவனுக்குத் தெரியவில்லை. குதிரை தானாகவே அவனைக் கோசியின் மாளிகைக்கு அழைத்துச் சென்றது. புரு மூன்றாம் முறையாகக் கோசியின் உதவியைக் கோரினான். கோசி, தன் அண்ணனை சூரியனிடம் போய் அந்த அபூர்வத் தண்ணீர் கிடைக்குமிடத்தையும், அந்தக் காவல் செய்யும் ஒரு பயங்கர பூதத்தைப் பற்றியும் தகவல்களை அறிந்தாள். அவற்றைப் புருவிடம் சொன்னாள்.

கோசிகூறியதிசையில்புரு முன்னேறினான். இருபத்தேழு நாடுகளையும், கடல்களையும் கடந்தான். அற்புதமான ஓர் உலகத்தை அடைந்தான். கண்ணுக்குக் குளிர்ச்சியாகத் தாவரங்கள் செழித்து வளர்ந்திருந்தன. ஒரு பெரிய புல்வெளியின் மத்தியில் ஒரு பாறை. அந்தப் பாறையில் இரண்டு ஊற்றுக்கள். அவற்றிலிருந்து இரண்டு அருவிகள் வீழ்ந்து கொண்டிருந்தன.

அந்த அருவிகளே தான் தேடி வந்துள்ள செத்துப் போன நீரும், உயிருள்ள நீருமாக இருக்க வேண்டும் என்று கருதினான். உண்மையை அறிய விரும்பி ஒரு வண்ணத்துப் பூச்சியைப் பிடித்தான். அதைச் சிறு சிறு துண்டுகளாகப் பிய்த்து, அதன்மேல் முதல் அருவியின் நீரைத் தெளித்தான். பிய்க்கப்பட்ட துண்டுகள் ஒன்றாக இணைந்தன. அதன்மேல் இரண்டாவது அருவியின் நீரைத் தெளித்தான். உடனே



அசைவற்று இருந்த அது உயிர் பெற்று எழுந்தது. சிறகடித்துப் பறந்தது. புரூ தனித்தனியாக இரண்டு குடுவைகளில் அந்த நீரை நிரப்பிக் கொண்டான். சந்தோஷமாகத் திரும்பினான்.

எல்லைக்கு அருகில் ஓர் இடத்தில் மனித எலும்புக் கூடுகள் குவிந்து கிடந்தன. புரூ யோசிப்பதற்குள் பத்து தலைகளைக் கொண்ட காவல் பூதம் கூச்சலிட்டுக் கொண்டே அவனை நோக்கிப் பாய்ந்தது. இருவருக்கும் பெரும்போர் மூண்டது. புரூ வாளைச் சுழற்றிப் பூதத்தின் தலைகளை ஒவ்வொன்றாக வெட்டி வீழ்த்தினான். பூதம் மாண்டது.

வெற்றிப் பெருமிதத்தோடு புரூ கோசியின் மாளிகையை அடைந்தான். இரண்டு நாட்கள் தங்கி இளைப்பாறினான். கோசி புரூவின் தண்ணீர்க் குடுவைகளை உள்ளே ஒளித்து வைத்து விட்டுச் சாதாரண நீர்க் குடுவைகளை அந்த இடத்தில் வைத்தாள். புரூ கோசியின் உதவிக்கு நன்றி கூறிவிட்டு அம்மாவைப் பார்க்கப் புறப்பட்டான்.

மூன்றாம் முறையும் வெற்றியோடு திரும்பிய புரூவைக் கண்டதும் மந்திரக் கிழவிக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. இருந்தாலும் அவனை வரவேற்பது போல நடித்தாள். அவன் கொடுத்த குடுவைகளை வாங்கித் தண்ணீரைக் குடித்தாள். "வெகு தூரத்திலிருந்து வந்திருக்கிறாய். ஓய்வெடுத்துக் கொள், மகனே!" என்று அவனை அனுப்பிவிட்டு, அவனை எப்படி ஒழித்துக் கட்டுவது என்று மனத்திற்குள்ளேயே திட்டமிட்டாள்.

அடுத்தநாள் அவள் புரூவை அழைத்து, "மகனே! நீ அரிய செயல்களைச் செய்திருக்கிறாய். பெரிய வெற்றிகளைப் பெற்றிருக்கிறாய். ஆனால் உன்னுடைய ஆற்றலை நான் நேரில் கண்டதில்லை. ஆகவே, உனக்கு ஒரு சோதனை வைக்கப் போகிறேன். ஒரு பட்டுக் கயிற்றால் உன்னைக் கட்டுகிறேன். உன்னால் அதை அறுக்க முடியுமா என்று பார்க்கலாமா?" என்று கேட்டாள். அதை ஒரு விளையாட்டு என்று எண்ணிப் புரூ ஒப்புக் கொண்டான்.

அவள் ஒரு பட்டுக்கயிற்றை எடுத்துப் புரூவைச் சுற்றிக் கட்டினாள். புரூ மூச்சை உள்ளுக்கு இழுத்துக் கைகளை அகலவிரித்தான். பட்டுக்கயிறு படீரென அறுந்தது. அவனை அவள் இரண்டு கயிறுகளால் சுற்றிக் கட்டினாள். அவற்றையும் அவன் ஒரே மூச்சில் அறுத்தான். அடுத்து அவள் அவனை மூன்று கயிறுகளால் கட்டினாள். புரூ தன் முழு பலத்தையும் பயன்படுத்திக் கயிறுகளை இழுத்துவலித்தான். போராடினான், அறுக்க முயன்றான்; முடியவில்லை. கயிறுகள் இறுகி இறுகி அவனுடைய சதையை வெட்டின. இரத்தம் கொட்டியது.

வீரனான புரூவின் பரிதாப நிலையைக் கண்டு அவள் வருத்தப்படவில்லை. பதிலுக்கு மிகுந்த இறுமாப்புடன் சிரித்தாள். உற்சாகமாக ஏழாவது பூதத்தைக் கூவி அழைத்தாள். "பூதமே! பூதமே! புரூவைக் கட்டிப் போட்டுவிட்டேன். பயப்படாமல் வா! சீக்கிரம் வந்து புரூவைக் கொல்லு!" என்று கூச்சலிட்டாள்.

ஒளிந்திருந்த ஏழாவது பூதம் ஓடி வந்தது. ஒரு பெரிய வாளால் புரூவைத் தாக்கி அவனைக் கண்ட துண்டமாக வெட்டியது. துண்டங்களை ஒரு மூட்டையாகக் கட்டிப் புரூவினுடைய குதிரையின் முதுகில் அதை வைத்தது "இனிமேல் இந்த மூட்டைதான் உன் எஜமானன். இந்தச் சுமந்து கொண்டு ஓடு!" என்று ஏளனமாகச் சொல்லிப் பூதம் குதிரையை விரட்டியது.

குதிரை சிட்டாய்ப் பறந்து கோசியின் மாளிகை வாசலில் நின்றது. கோசி மூட்டையைத் திறந்து பார்த்தாள். புரூவின் வெட்டப்பட்ட உடலைக் கண்டதும் அதிர்ச்சி அடைந்தாள். ஆனால், அவள் சோர்ந்து விடவில்லை. புரூவை உயிர்ப்பிக்க விரைந்து செயல்பட்டாள்.

துண்டு துண்டாக இருந்த புரூவின் உடலைக் கோசி ஒன்று சேர்த்தாள். ஒளித்து வைத்திருந்த பறவைப்பால் முதலிய அபூர்வப் பொருள்களைத் தேடி எடுத்தாள். புரூவின் உடலில் தசைப் பகுதிகள் இல்லாத இடங்களில் காட்டுப் பன்றிக் குட்டியின் ஊனை வைத்து நிரப்பினாள். உடலின் மேல் செத்த தண்ணீரைத் தெளித்தாள். உடனே ஓர் ஆச்சரியம் நிகழ்ந்தது. தனித்தனியாக இருந்த துண்டுகள் இணைந்து ஒரே உடம்பாயிற்று! பிறகு

உயிர்த் தண்ணீரைத் தெளித்தாள். புருவின் உடலுக்கு உயிர் வந்தது! அவன் துயில் நீங்கி விழிப்பது போல் இமைகளைத் திறந்து சுற்றிலும் நோக்கினான்.

தன் முயற்சி வீண் போகவில்லை என்று கோசி சந்தோஷப்பட்டாள். அவனுக்கு உண்மையான பறவைப் பாலைக் கொடுத்தாள். அதை அருந்தியதும் புருவின் சோர்வு நீங்கியது. அவன் முன்னைவிட அதிக பலசாலி ஆனான். கோசியின் மூலம் நடந்த கதையை அறிந்தான்.

புரு தனக்குத் தீங்கிழைத்த பூதத்திற்குச் சரியான தண்டனை கொடுக்க விரும்பினான். கோசிக்கு மனமார நன்றி சொன்னான். அரண்மனைக்கு விரைந்தான்.

அரண்மனையில் அவனுடைய உண்மையான அம்மா ஓர் ஏவலாளாகப் பணி செய்து கொண்டிருந்தாள். மந்திரக் கிழவி தன் சுய உருவில் இருந்தாள். அவளும், பூதமும் உல்லாசமாக விருந்து உண்டு கொண்டிருந்தனர்.


திடீரெனப் புரு உள்ளே நுழைந்தான். ஒரு கையால் பூதத்தையும், இன்னொரு கையால் மந்திரக் கிழவியையும் இழுத்துச் சென்று முற்றத்தை அடைந்தான். அங்கே ஒரு பிரும்மாண்டமான அண்டாவில் நீர் கொதித்துக் கொண்டிருந்தது. அவர்கள் இருவரையும் தூக்கி அந்த நீரில் போட்டான். கிழவியும், பூதமும் அப்புறம் எழுந்திருக்கவே இல்லை.

புரு அம்மாவை அன்போடு கட்டிக் கொண்டு பல ஆறுதல் மொழிகள் சொன்னான். ஒரு நல்ல நாளில் புருவுக்கும், கோசிக்கும் திருமணம் நடந்தது. மணப்பெண்ணின் அண்ணாவான சூரியனே முன்னின்று அந்தக் கல்யாணத்தைக் களிப்போடு நடத்தி வைத்தான்.

இப்படத்தில் இருக்கும் 'பசுமாடு' ஒரு மாதத்திற்கு எத்தனை லிட்டர் பால் தரும் என்பது உங்களுக்குத் தெரியுமா?

எண்களாலேயே உருவாக்கப்பட்ட இந்தப் பசுவை நீங்களும் பேப்பர் — பென்சில் எடுக்காமல் கூட்டிப் பாருங்கள். அதில் கிடைக்கின்ற விடைதான் ஒவ்வொரு மாதமும் இது தருகின்ற பால்.

எங்கே கூட்டிப் பாருங்கள்?




படம் உதவி: டெக்கான் ஹெரால்டு
தகவல்: ப. மூர்த்தி

# பெரிய கோயில்

பெரிய கோயில் தெரிகிறது!
பெருவுடை யாரின் கோயிலது!
அரிய பெரிய கோயிலது!
அனைவரும் போற்றும் கோயிலது!

தஞ்சை நகரில் அமைந்துள்ள
தன்னே ரில்லாக் கோயிலது!
நன்செய் வயல்கள் சூழ்ந்திட்ட
நெடிது யர்ந்த கோயிலது!

கோயில் நந்தி மிகப்பெரிது!
கோயில் பெருமான் பெருவுடை யார்!


கோயில் சுற்றி அகழிகளைக்
கொண்ட சோழர்க் கோயிலது!

கோபுர நிழலும் நிலமீதில்
கொஞ்சமும் விழாத வகைசெய்து
கோபுர வடிவை அமைத்திட்ட
கோயில் ஒன்றே உலகினிலே!

ராஜ ராஜன் எழுப்பியது!
ரசிப்போர்க் குவகை பொங் கிடுமே!
ராஜ ராஜன் புகழினையே
நன்கு பரப்பும் கோயிலது!

நாமும் பார்க்கச் செல்வோமே!
நாமும் அதன்புகழ் சொல்வோமே!
நாமும் நேரில் கண்டறிந்து
நாளெலாம் பெருமை கொள்வோமே!!

குடந்தை புகழேந்தி



# கீதா ஏன் அழுதாள்?

கே. ஜெயலக்ஷ்மி

மகள் கீதாவுடன் பங்களாவுக்குள் நுழைந்தாள். அங்கே சமையல் வேலை செய்யும் மீனாட்சியம்மா. பின் பக்கத்து வழியாக நேராகச் சமையலறைக்குச் சென்றாள்.

"யாரது... உன் பெண்ணா?" பூஜை அறையிலிருந்து வெளியே வந்த பெரியம்மா கேட்டார்.

"ஆமாம்" சொல்லிக் கொண்டே மளமளவென்று காஸ் அடுப்பில் காபிக்குத்தண்ணீர் காயப்போட்டாள் மீனாட்சியம்மா.

"கடைக்குட்டியாக்கும்... படிக்கிறாளா?"

"ம்... நாலாவது படிக்கிறாள்".

"உன்னைப்போலவேபளிச்சென்று துடைத்துவிட்ட மாதிரி இருக்கா..." காய்கறிக் கூடையை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டாள் பெரியம்மா.

"அழகா இருந்து என்ன பிரயோசனம் மாமி! அதிர்ஷ்டத்தைக் காணோமே!" பில்டரில் காபிப் பொடியைப் போட்டுக் கொண்டே சொன்னாள் மீனாட்சியம்மா.

"உன் பெயர் என்னடியம்மா?"

"கீதா".

"நல்ல பெயர். தோட்டத்திலே போய் பூ பறிச்சிண்டு வருகிறாயா?"

"ஓ! வரேனே..." உற்சாகமாகச் சொன்னாள் கீதா.

"அதோ எவர்சில்வர் பூக்கூடை இருக்கு பாரு... அதை எடுத்திண்டு போ! மொக்குகளையெல்லாம் பறிக்காமல் பார்த்து ஜாக்கிரதையாக, பூவாகப் பறிச்சிண்டு வா பார்க்கலாம்...."

எவர்சில்வர் பூக்கூடையை எடுத்துக் கொண்டு தோட்டத்துப் பக்கம் ஓடினாள் கீதா.

* * * * *

வேலைக்காரி துலக்கி வைத்திருந்த பாத்திரங்களையெல்லாம் எடுத்து வந்து உள்ளே வைத்துக் கொண்டிருந்தாள் கீதா.

"மாமீ.... காபி ரெடியா?"

திரும்பிப் பார்த்தாள் கீதா.

வீட்டுக்காரரின் பெண் ஷீலாதான் 'ஜம்'மென்று டிரஸ் பண்ணிக் கொண்டு வந்து நின்றிருந்தாள்.

"இந்தா, ஷீலா! சூடு சரியாக இருக்கு. சாப்பிட்டு விடு" காபியைப் பதமாக ஆற்றி அவளிடம் கொடுத்தாள் மீனாட்சியம்மா.

காபியைக் கையில் வாங்கிக் கொண்ட ஷீலா, "மாமீ! உங்களுக்குத் தெரியுமா? இன்று எனக்குப் பிறந்த நாள். அம்மா, அப்பா, நான் எல்லாம் கோவிலுக்குப் போகப் போகிறோம்" என்றாள் சந்தோஷம் பொங்க.

"அப்படியாம்மா! ரொம்ப சந்தோஷம். தீர்க்காயுசா இருடியம்மா!" என்றாள் மீனாட்சியம்மா, அன்பு ததும்பும் குரலில்.

"மாமீ! இது யாரு....?"

"என் பெண் கீதா".

"ஜோரா இருக்காளே.. இருங்கோ. நான் போய்ச் சாக்லேட் கொண்டு வரேன்" என்று சொல்லிவிட்டு ஹால் பக்கம் ஓடினாள் ஷீலா.

உடனே கைநிறையசாக்லேட்டுடன் திரும்பி வந்தாள். அப்படியே கீதாவின் கைகளில் வைத்தாள். "சாப்பிடு" என்றாள் குதூகலமாக. கீதாவுக்கு வெட்கமாக இருந்தது. அம்மாவின் முகத்தைப் பார்த்தாள்.

''எல்லாம் சாப்பிடுவாள்... நீ புறப்படு'' என்ருள் மீனுட்சியம்மா.

ஷீலா ஓடிவிட்டாள்!

கீதா அம்மாவிடம் வந்தாள்.

''அம்மா!''

''என்னடி....?''

''ஷீலா போட்டுக் கொண்டு இருக்கிற கவுன் ரொம்ப நன்ருக இருக்கிறது அம்மா!''

''நன்ருகத்தான் இருக்கும். அமெரிக்காவிலே அவளுடைய சித்தப்பா இருக்கிருர். வரும்போதெல்லாம் டஜன் கணக்கில் வாங்கிக் கொண்டு வந்து குவிக்கிருர். தினம் ஒரு புது கவுன் போட்டுக் கொள்கிருள். மூன்று பிள்ளைகளுக்குப் பிறகு பிறந்திருக்கும் ஒரே பெண்ணுச்சே!'' படபடவென்று பொரிந்து கொட்டினுள் மீனுட்சியம்மா.

''ஷீலா கிட்டே இந்த மாதிரி கவுன் நிறைய இருக்கிறதாம்மா?''

''நிறையத்தான் இருக்கும்''.


''அது மாதிரி எனக்கு ஒரு கவுன் வாங்கிக் கொடும்மா....'' கெஞ்சினுள் கீதா.

''அத்தனைக்குவசதியிருந்தால்நான் ஏண்டியம்மா இந்த வீட்டில் வந்து சமையல் வேலே செய்து கொண்டிருக்கிறேன்....? இப்படியெல்லாம் மனத்திலே ஆசையை வரவழைத்துக் கொள்ளக் கூடாதுடி கீதா. நாமெல்லாம் ஏழையாச்சே!''

''கிழிஞ்சதா....பழசா இருந்தால் கூடப் பரவாயில்லேம்மா... ஷீலாவின் அம்மாவிடம் கேட்டு வாங்கிக் கொடும்மா...'' ஆசையை அடக்கிக் கொள்ள முடியாமல் கேட்டாள் கீதா.

''பழசுதானே? ஆகட்டும்.. கேட்டுப் பார்க்கிறேன். நீ போய்த் தேங்காய் மூடியைத் துருவிண்டு வா...'' மகளின் மனத்தைத் திசை திருப்பி விட்டாள் மீனுட்சியம்மா.

* * * * *



அம்மா வேலையிலிருந்து திரும்பியதும் ஆவலாக ஓடி வந்தாள் கீதா.

''அம்மா, கவுன் வாங்கிண்டு வந்தியா?''

''மறந்து விட்டேன். நாளைக்கு கேட்கிறேன்'' என்றாள் மீனாட்சியம்மா.

மறுநாளும் ஆசையாகக் கேட்டாள் கீதா. ''அம்மா! வாங்கிண்டு வந்தியா?''

''இப்போதைக்குக் கொடுக்கிற மாதிரி பழசாக எதுவும் இல்லையாம்! கொஞ்ச நாள் போகட்டும். தருகிறேன் என்று சொன்னாள்'' என்றாள் அம்மா.

கீதாவின் முகம் காற்றுப் போன பலூன் மாதிரி சுருங்கிவிட்டது. அதன் பிறகு அவள் தன் அம்மாவிடம் 'கவுன் வாங்கிண்டு வந்தியா?' என்று கேட்பதையே விட்டுவிட்டாள்.

* * * * *

கோடை விடுமுறை பூராவும் தன் மாமா வீட்டில் போய் இருந்து விட்டுத் திரும்பி வந்தாள் கீதா.

அவளுடைய பள்ளிப் புத்தகங்களெல்லாம் வைத்திருந்த இடத்தில் ஒரு பெரிய பை வைத்திருந்தது. ஆர்வம் மேலிட அந்தப் பையை எடுத்துப் பார்த்தாள். அதன் உள்ளே புத்தம் புதிய கவுன்கள் — அமெரிக்காவிலிருந்து வாங்கி வந்திருந்த வண்ண வண்ணக் கவுன்கள் நிறைய இருந்தன. அவளுக்கு உண்டான ஆச்சர்யத்திற்கு அளவேயில்லை. ஆனந்தத்திற்கும் எல்லையே இல்லை.

''ஷீலா எவ்வளவு நல்லவள்! அவளுடைய அம்மாவும் ரொம்ப ரொம்ப நல்ல மாமி போலிருக்கிறது! இத்தனை கவுன்களையும் கொடுத்தனுப்பியிருக்கிறார்களே!'' என்று பூரித்துப் போனாள் கீதா.

அவளால் ஆசையை அடக்கவே முடியவில்லை. அவசரம் அவசரமாகத் தன் உடம்பிலிருந்த பழைய அழுக்குக் கவுனை கழற்றி தூர வைத்தாள்! ஷீலாவின் புதிய கவுன்களில் ஒன்றையெடுத்துப் போட்டுக் கொண்டாள்.

ஷீலாவை விட அந்தக் கவுன் கீதாவுக்கு ரொம்ப அழகாக எடுப்பாக இருந்தது! அவளுக்குப் பெருமை பிடிபடவில்லை. கிடுகிடுவென்று அம்மாவிடம் ஓடி வந்தாள்.

''அம்மா! திரும்பிப் பாரேன்...'' என்றாள் ஆசையாக.

புடவையிலிருந்த கிழிசலைத் தைத்துக் கொண்டிருந்த மீனாட்சியம்மா அலட்சியமாகத் திரும்பிப் பார்த்தாள்.

''எப்படியம்மா இருக்கு?''

''எப்படியிருக்கும்! நன்றாகத்தானிருக்கிறது!'' என்றாள் அம்மா எரிச்சலாக.

''ஏம்மா... எரிஞ்சு விழறே?''

''ஒண்ணுமில்லே....''

''இத்தனை கவுனையும் ஏம்மா கொடுத்துட்டா! நான் ஒண்ணே ஒண்ணுதானே கேட்டேன்...?''

''இத்தனை கவுன்களையும் அவர்கள் இனிமேல் யாருக்குப் போட்டு அழகு பார்க்க முடியும்?'' அம்மாவின் குரல் ஏன் இப்படித் தடுமாறுகிறது?

''என்னம்மா சொல்றே?''

''உனக்குத் தெரியாது இல்லையா... அந்த ஷீலா... செத்துப் போயிட்டாடி கீதா... என்னமோ.... மூளைக் காய்ச்சலாம்... மூன்றே நாள்... சிரிப்பும், விளையாட்டுமா துள்ளித் திரிந்த பச்சைப் பசுங்கொடியை வாரிண்டு போயிடுத்துடி கீதா! பங்களாவே அழறதுடி... அங்கே போகவே பிடிக்கலை. நேற்றுத்தான் இந்தக் கவுன்களையெல்லாம் வாரிக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்து 'சீக்கிரமா எடுத்துக் கொண்டு போங்கோ மாமி'ன்னு சொன்னார்கள்...'' மீனாட்சியம்மா குலுங்கக் குலுங்க அழுதாள்.

கீதா அவசரம் அவசரமாக ஷீலாவின் புதிய கவுனை தன் உடம்பிலிருந்து கழற்றி எடுத்து இருந்தபடியே பைக்குள் வைத்தாள். பிறகு தன்னுடைய பழைய அழுக்குக் கவுனை எடுத்துப் போட்டுக்கொண்டாள். அம்மாவிடம் வந்தாள்.

''ஏண்டி கழற்றினாய்!'' என்று கேட்டாள் மீனாட்சியம்மா.

''எனக்கு அதெல்லாம் வேண்டாம்மா! வேறு யாருக்காவது கொடுத்து விடு'' என்றாள் கீதா. உடனே 'ஓ'வென்று அழுதாள். அழுது கொண்டேயிருந்தாள்.

மீனாட்சியம்மாவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

குழந்தைகளின் உள்ளம் குழந்தைகளுக்குத்தானே புரியும்!



# எழுத்துக்கள் சிரித்தன!

மன்னர் மன்னன்

அம்மா மளிகைக் கடைக்குப் போனால், குறைந்தது ஒரு மணி நேர மாகும். அப்பா இன்னும் வீடு திரும்ப வில்லை. தங்கை செல்வியும் அம்மா வுடன் போயிருக்கிறாள்.

அம்மா வருவதற்குள் தெருப் பிள்ளைகளோடு கிரிக்கெட் ஆடிவிட லாமே! — ரவிக்கு ஒரு யோசனை!

"நேத்து அந்தராஜாப்பயல் என்னை சோனின்னு ஏளனமாப் பேசினானே, இன்னைக்கு அவனை ஒரு கை பார்த்தா. என்ன?"

வீட்டில் ஒரு நோட்டம் விட்டான் ரவி.

சமையல் அறைக்குள் நுழைந்த உடனே அவன் கண்ணில் முறுக்கு டின் கண்ணில் பட்டது. திறந்து பார்த் தான். மூன்று நான்கு முறுக்கை நொறுக்கினான். நல்ல சுவை!

இன்னும்... அதோ பாட்டில் நிறையப் பொட்டுக் கடலை. இரண்டு பிடி அள்ளிப் போட்டான். பக்கத்தில் சர்க்கரை. அதில்ஒருபிடியும்பொட்டுக் கடலையும் சேர்த்துத் தின்றான்.

அடேயப்பா! ருசியோ ருசி.

மூலைத் தட்டுப் பலகையில் பழைய மிட்டாய்ப் பெட்டி. இவனுடைய பிறந்த நாளுக்குப் பட்டணத்து மாமா கொடுத்தது. திறந்தான்; பத்துக் காசு நாலைந்து கிடந்தன. பையில் போட்டுக் கொண்டு, திரும்பியபோது,

அம்மாவின் கைப்பை சுவரில் தொங்கியது தெரிந்தது.

சரக்!

ஜிப்பை இழுத்தான்.

அழகிய கண்ணாடிக் குப்பி.

'மருக்கொழுந்து சென்ட்' என்று அழகாக அச்சிட்ட சீட்டு ஒட்டியிருந் தது.

பள்ளிக்கூட ஆண்டுவிழாவுக்குப் போகும் போது அதைக் கேட்டுப் பிடி வாதம் பண்ணிய போதும் அம்மா தரவில்லை.

இப்போது — அந்தக் குப்பி ரவியின் கையில்! பைக்குள் போட்டுக் கொண் டான்.

சரி, அம்மா வருவதற்குள் தெரு விற்கு ஓடி, கிரிக்கெட்டில் கலந்து கொள்ள வேண்டியதுதான்!

ராஜாவுக்கு எதிர் அணியில் போய் நின்றான் ரவி.

அம்மா வீட்டிற்குள் நுழைந்து 'ரவி' என்று உரக்கக் கூவியது இவன் காதில் விழுந்தாலும், எதுவும் தெரியாதவன் போல் ஆட்டத்தைக் கவனித்தான் ரவி.

சிறிது நேரத்தில், பைக்குள்ளிருந்த குப்பியை எடுத்துத் திறந்தான். சட்டை, மார்பு, கழுத்து, தோள் பட்டை, முகம் எல்லாவற்றிலும் அவசர அவசரமாகத் தெளித்துக் கொண்டான். மறு விநாடி முகத்தில் ஏதோ எரிந்தது... அப்புறம்? நெற்றியில், கையில்... என்னவென்றே புரியவில்லை.

திரும்பிப் பார்த்தான் — அம்மா.

'வாடா!' — அம்மாவின் அதட்டலுக்குப் பணிந்து அம்மாவைத் தொடர்ந்தான்.

அம்மா தன் கைப்பையை ரவியின் முகத்துக்கு எதிரில் பிடித்தபோது ரவிக்கு வியர்த்து விட்டது.

''நான் ஒண்ணுமில்லேம்மா!''

ரவி இப்படிச் சொல்லி முடிக்கவில்லை.

அய்யோ, முகம் முழுதும் ஒரே எரிச்சல்!

''ஏண்டா ரவி, இந்தப் பாட்டிலிலே தலைவலித் தைலம் இருந்ததே, அதை எடுத்துப் பூசிக்கிட்டியா... ஆமா, உன் மேலே வாசனை அடிக்குதே!''

அம்மாவிடம் பொய் சொல்ல முடியாதபடி அந்தத் தைல வாசனை காட்டிக் கொடுத்தது. அது மட்டுமா? எரிச்சல் தாங்க முடியாமல், கண்ணில் நீர் கொட்டியது ரவிக்கு!

அம்மாவுக்கு எல்லாம் புரிந்து விட்டது.

வெளியில் போய் வந்த அம்மா, தலைவலித் தைலத்தைத் தேடி எடுத்தபோது கைப்பை திறந்து கிடந்தது தெரிந்தது.

நேற்று முன்னாள்தான் பக்கத்து வீட்டம்மா தைலம் கொடுத்தார்கள். காலியாய்ப் போன மருக்கொழுந்துக் குப்பியில் ஊற்றி வைத்தது நினைவு வந்தது.

அப்போது—

ரவிக்கு மயக்கமே வந்தது!

வராதா பின்னே! பெற்ற அன்னையை ஏமாற்ற நினைத்த ரவி வெற்றி பெற முடியவில்லை.

'மருக்கொழுந்து செண்ட்' என்ற எழுத்துக்கள் அவனைப் பார்த்து ஏளனமாய்ச் சிரித்தன!

# விடுகதை விளையாட்டு



1. ஆலமரம் தூங்க
அவனியெல்லாம் தூங்க
சிரங்கம் தூங்க
திருப்பாற்கடல் தூங்க
ஒருவன் மட்டும் தூங்கவில்லை.

2. பார்த்தால் கல்தான்.
பல் பட்டால் தண்ணீர்தான்.

3. ஐந்து அடுக்கு; நாலு இடுக்கு.

4. அரைச்சாண் குள்ளனுக்கு
கால் சாண் தொப்பி.

5. கடித்தால் கடிபடாது.
பிடித்தால் பிடிபடாது.

6. ஓட்டை வாயனுக்கு
விழுந்தபல் முளைக்கவில்லை.

7. ஒரு பெண்ணுக்கு மூன்று
கொண்டை.

8. இத்தனூண்டு சித்தானுக்கு
ஏழு சுற்றுக் கண்டாங்கி.

9. கல்லும் கரடும்
முள்ளும் முரடும்
வேரும் விறகும்

10. கொதிக்கும் கிணற்றில் குதிப்பானும்.
கூச்சலில்லாமல் குளிப்பானும்.

விடைகள்: 1. மூச்சு, 2. பனிக்கட்டி, 3. விரல்கள், 4. பேனா, 5. தண்ணீர், 6. சிப்பு, 7. அடுப்பு, 8. வெங்காயம், 9. கற்கண்டு, பலாப்பழம், கரும்பு, 10. அகப்பை.

—'விடுகதை விளையாட்டு' என்ற புத்தகத்திலிருந்து வெளியிட்டோர்: பப்ளிகேஷன் டிவிஷன், புதுதில்லி.

# வேடிக்கைப் புதிர்கள்



ஆர். நாச்சியப்பன்

புதிர் 1: ஒரு அம்மா, தன் குழந்தையிடம் தான் பக்கத்து வீட்டுக்குச் சென்று கொஞ்சம் கீரைகள் பறித்து வருவதாகவும் குழந்தையை 100 வரை எண்ணும்படியும் அதற்குள் தான் வந்து விடுவதாகவும் சொல்லிச் சென்றாள். ஆனால், குழந்தை '5' எண்ணிக்கொண்டிருக்கையிலேயே அம்மா திரும்பி விட்டாள், கீரையுடன்! எப்படி?

புதிர் 2: சோமுவும், ராமுவும் சகோதரர்கள். அவர்களின் பள்ளிக்கூடம் வீட்டிலிருந்து 2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். அவர்கள் பள்ளிக்குப் போக வர எத்தனை கிலோ மீட்டர்கள் கடக்க வேண்டும்? மதியம் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வருவதையும் சேர்த்துக் கணக்கிட்டுச் சொல்லுங்கள்?

புதிர் 3: சுதாகர் வேகமாய்ப் படிக்கக்கூடியவன். அவன் 180 பக்கமுள்ள ஒரு நாவலை ஒரு நிமிடத்திற்கு இரண்டு பக்கங்கள் வீதம் ஒன்றரை மணி நேரத்தில் படித்து முடிப்பான். அந்த நாவலையே ஒரு நிமிடத்திற்கு 3 பக்கம் வீதம் படிப்பானேயானால் எவ்வளவு பக்கம் முடிப்பான்?


புதிர் 4. எங்கள் வீட்டுச் செல்லப் பூனை மிம்மிக்கு என் தம்பி கோபால் மேலே தான் மிகுந்த பிரியம். அது ஏன்?

புதிர் 5: மோகன் இருளடைந்த காட்டினுள்ளே போய்க் கொண்டிருந்தான். திடீரென வெளிச்சம்! ஒரு தேவதை அவனுக்கு இனிப்புப் பட்சணங்களைக் கூடை கூடையாகக் கொடுத்தாள். மோகன் விடைபெறுகையில், பறக்கும் ஆட்டுக்குட்டி, பாடும் முயல், தங்கக் கிளி இவற்றைக் கொடுத்தாள். மோகன் அவற்றை வாங்கியதும் சுற்றிலும் பார்த்தான். எதையுமே காணோம்! ஏன்?


**விடைகள்:**

1. குழந்தைக்கு 5 வரைதான் எண்ணத் தெரியும்.
2. 8 கிலோ மீட்டர் என்றால் தப்பு. அவர்கள் இருவரும் கடக்கும் தூரத்தையும் சேர்த்தல்லவா சொல்ல வேண்டும்?
3. 270 பக்கமா? விடை தவறு. அந்த நாவலில் உள்ளதே 180 பக்கம்தானே!
4. கோபால் பெயரிலேயே பூனைக்குப் பிரியமான 'பால்' இருக்கிறதே!
5. மோகன் கண்டது கனவுதானே!

# உங்களுக்குத் தெரியுமா?



தேனீக்கள் ஒரு பவுண்டு எடையுள்ள தேனைச் சேகரிக்க 1,40,000 மைல்கள் பறக்க வேண்டும். குறைந்த பட்சம் 5000 மலர்களிலாவது அவை மொய்த்தால்தான் ஒரு 'டீஸ்புன்' தேனை அவைகளால் சேகரிக்க முடியும்.



ஆஸ்திரேலியாவில் உள்ள பனை மரங்கள் 'சிதால்' என்னும் வகையைச் சேர்ந்தவை. இந்த மரங்கள் ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை மிக நீளமான மெழுகுவர்த்தி போன்ற பூ ஒன்றினை மலர்விக்கும்.



ராபின் - இது ஒரு பறவை. இந்தப் பறவை தனக்கு ஆபத்து என்றால் இறக்கைகளைப் பரப்பி இறந்தது போலப் பாசாங்கு செய்து விழுந்து கிடக்கும். ஆபத்து அகன்று விட்டது என்று தெரிந்ததும் எழுந்து 'சிறகடித்துப் பறந்தோடி விடும்.




ஜூலியஸ் சீஸர் 'காலி' என்ற நாட்டில் போரிட்டுக் கொண்டிருந்த போது அங்கிருந்து ரோமுக்கு செய்திகளை அவ்வப்போது அனுப்பிக் கொண்டிருந்தார். அதனால் 'பத்திரிகைத் துறையின் தந்தை' என்றும் சீஸர் அழைக்கப்படுகிறார்.

செந்தமிழ்ச் செல்வன்

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)

Editor: K. Rajendran



# ரசிகமணி டி.கே.சி.

பிறந்தநாள்: 7.8.1882 மறைந்தநாள்: 16-2-1954

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka